விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005


இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 20 வியாழக்கிழமை (03.03.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 075

## ராஜிவ் கொலை வழக்கில் இருந்து
# பேரறிவாளன், சாந்தன், முருகனை விடுவிக்க தமிழக அரசு முடிவு
## கருத்து கேட்டு மத்திய அரசுக்கு கடிதம்


முருகன்


பேரறிவாளன்


சாந்தன்

(சென்னை)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் சிறைத் தண்டனை அனுபவித்துவரும் பேரறிவாளன், சாந்தன், முருகன் உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்ய தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இதுகுறித்து இந்திய மத்திய அரசின் கருத்தைக் கேட்டும் கடிதம் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (23-ம் பக்.)

## வாகன விபத்தில் குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கிய குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 8.50 மணியளவில் அராலி தபாற

24ஆம் பக்கம் பார்க்க....

## குழந்தைப் பாக்கியம் வடக்கில் குறைவு!

(கொழும்பு)

வடக்கில் புதிதாக திருமண பந்தத்தில் இணையும் ஐந்து ஜோடிகளுள் நான்கு ஜோடிகளுக்கு குழந்தைப்பாக்கியம் இல்லாமல் போக

24ஆம் பக்கம் பார்க்க....

## 10-வது நாளாக...
## உடல் சோர்வடைந்து கைதிகள் போராட்டம்

(கொழும்பு)

உடல் நிலை கடுமையாக சோர்வடைந்து அனைவராலும் கைவிடப்பட்டநிலையில் புதிய மகசின்சிறைச்சாலையில் உள்ள தமிழ

23ஆம் பக்கம் பார்க்க....

## மாணவனுக்கு எச்.ஐ.வி என வதந்தி
# பெற்றோரின் கடும் எதிர்ப்பால் பாடசாலையிலிருந்து நீக்கம்

(கொழும்பு)

வடமேல் மாகாணத்தில் குளியாபிட்டிய என்ற இடத்தில், எச்ஐவி தொற்றுக்கு உள்ளானவர் என்ற வதந்திக்கு உள்ளான 6 வயது சிறுவனை அண்மையில் சேர்த்துக் கொண்டிருந்த பாடசாலை நிர்வாகம இப்போது அவரை பாடசாலையிலிருந்து நீக்கியுள்ளது.

அந்தச் சிறுவனின் தந்தை எச்ஐவி தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்ததாக உள்ளூரில் வதந்தி பரவியிருந்த நிலையில், அவரை சேர்த்

24ஆம் பக்கம் பார்க்க....

## க.பொ.த (சா/த) பரீட்சை பெறுபேறு இம்மாத இறுதியில்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகள் இம்மாத இறுதியில் வெளியாகும் என பரீட்சைகள் ஆணையாளர் என்.ஜே.புஸ்பகுமார தெரிவிததுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

# நயினாதீவுக் கடற்பரப்பில் 67அடி உயரத்தில் புத்தர் சிலை
## அமைப்பதற்கு முஸ்தீபு

(நயினாதீவு)

நயினாதீவு நாக விகாரைக்கும் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்துக்கும் இடைப்பட்ட இடப்பரப்பில் 67 அடி உயரமான புத்தர் சிலை ஒன்றை நிறுவுவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

67 அடி உயரத்தில் புத்தர் சிலை அமைப்பதற்கான அனுமதிகளை பெறும் பொருட்டு உரிய விண்ணப்பங்கள் பிரதேச செயலக மட்டத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு யாழ்.மாவ

23ஆம் பக்கம் பார்க்க....

## இந்தோனேசியாவில் நேற்று
# பாரிய நிலநடுக்கம்

(ஜகர்த்தா)

இந்தோனேஷியாவின் சுமத்திரா தீவின் மேற்குப் பகுதியில் நேற்று மாலை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டதையடுத்து அங்கு சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

சுமத்திரா தீவின் தென்மேற்கு பகுதியில் கடலுக்கடியில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 7.9 ஆக பதிவாகியிருந்ததாக அமெரிக்க புவி


23ஆம் பக்கம் பார்க்க....

## நீதி தேவதையே கண் திறவாயோ?
# அரசியல் கைதிகளுக்காக யாழில் நேற்று ஆர்ப்பாட்டம்



24 ஆம் பக்கம் பார்க்க...

## சந்திரிகா - சுஸ்மா சந்திப்பு



(புதுடில்லி)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இந்திய வெளிவிவகார

23ஆம் பக்கம் பார்க்க....

## முச்சக்கர வண்டிகளில் 3 பயணிகள் மட்டுமே!

(கொழும்பு)

முச்சக்கர வண்டிகளில் மூன்று பிரயாணிகளுக்கு மேலதிகமாக பயணிகளை ஏற்றுவது தடைசெயயப்பட்டுள்ளதோடு இச்சட்டத்தை மீறி வண்டியினை செலுத்தும் சாரதிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என நீதி பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து பிரிவின் பிரதி பொலிஸ்மா அதி

24ஆம் பக்கம் பார்க்க....

# பாரத லக்ஸ்மன் கொலை வழக்கு; சந்தேக நபர் மீது துப்பாக்கிச் சூடு
## சிறைக் கைதிகள் 4 பேர் காயம்

(கொழும்பு)

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர கொலை வழக்கின் முக்கிய சந்தேக நபரான தெமட்டகொட சமிந்த வெலிக்கடச் சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்படும் போது நடத்தப்பட்ட துபபாக்கிச் சூட்டில் படுகாயமடைந்தார்.

24ஆம் பக்கம் பார்க்க....

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## கூறுவிலை கோரல்

யாழ் மாநகரசபை நவீன சந்தை கட்டிடத்தொகுதிகளுக்கு இலவசமாக வர்ணம் பூசுவதற்கு விருப்பமுடைய வழங்குனரை தெரிவு செய்வதற்காக கூறுவிலைகள் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து பின்வரும் நிபந்தனையின் அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ஒரே நிறத்திலாலான மென்வர்ணம் பூசுதல் வேண்டும். மென்வர்ணம் தொடர்பில் சபையின் தீர்மானமே இறுதியானதாகும்.
- கட்டடத்தின் வெளிப்புற சுவர்களுக்கு வானிலை கவச (Weather Shield) தரமுடைய தீந்தையே பூசுதல் வேண்டும்.
- தீந்தை பூசும் வேலையானது மாநகர சபையின் மேற்பார்வையின் கீழ் செய்யப்படுதல் வேண்டும்.
- சபையினால் அடையாளப்படுத்தப்பட்ட நான்கு இடங்களில் 10'X 5' அளவுடைய விளம்பரங்களை காட்சிப்படுத்தலாம்.
- ஒரு வருடகாலத்திற்கு மேற்படி ஒப்பந்தம் செல்லுபடியாகும்.
- விளம்பரங்களை பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தாதவாறு தயாரிக்கப்படல் வேண்டும். நிறுவப்பட்ட பின் அசௌகரியங்கள் ஏற்படுவதாக காணப்படும் சந்தர்ப்பத்தில் ஒப்பந்தம் இரத்து செய்யப்படுவதோடு விளம்பரங்கள் அகற்றப்படும்.
- ஆணையாளரால் தீர்மானிக்கப்படும் குழுவின் சிபார்சின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் விண்ணப்பித்த நிறுவனங்களிலிருந்து ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர். குழுவின் முடிவு இறுதியானதாகும்.

சுயமாக தயாரிக்கப்பட்ட கோரிக்கையை 24.03.2016ம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். தேர்வுக்கான குலுக்கல் 28-03-2016ம் திகதி காலை 10.30 க்கு நடைபெறும்.

வழங்குனரை ஏற்றுக்கொள்ளும் அல்லது காரணம் காட்டாது நிராகரிக்கும் உரிமை சபைக்கு உண்டு.

**பொ.வாகீசன்**
**ஆணையாளர், யாழ் மாநகர சபை.**

(C-3881)


# வடக்கு ஆசிரிய வெற்றிடங்களுக்கான பட்டதாரிகள் நியமன நேர்முகத்தேர்வு

## யாழ்., வவுனியா விண்ணப்பதாரர்களின் பெயர் அறிவிப்பு

வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களுக்கு பட்டதாரிகள் மூலம் ஆசிரியர் சேவை 3.1 (அ) இற்கு நியமனம் செய்வதற்கான நேர்முகத்தேர்வு நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களில் இருந்து பட்டதாரி போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியெய்திய தமிழ் பாடத்திற்கு விண்ணப்பித்த கீழே பெயர் குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரிகளின் தகைமைகளை பரிசீலனை செய்வதற்காக அவர்கள் கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்களின் மூலப் பிரதிகள் மற்றும் அவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதிகள் என்பற்றுடன் நாளை 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறும் நேர்முகத்தேர்வுக்கு தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

யாழ்ப்பாண மாவட்டம்

சண்முகவடிவேல் ஜெசிந்தன், ஆரோக்கியநாதர் அருட்கார்மன் ஜெயராசா, திருமதி டச்சாயினி தபேசன், திருஞானச்செல்வம் ஜெயராம், செல்வி கீர்த்திகா புஸ்பநாதன், செல்வி திருஞானசம்பந்தர் தனுஜா, திருமதி தேவகி சுதாகரன், செல்வராசா துவாரகன், செல்வி சபாரத்தினம், அனுசாகரி, செல்வி தேவதாஸ் நிருபணா, செல்வி செல்வரத்தினம் சிவரஞ்சினி, செல்வி தங்கவடிவேலு தர்சிகா, திருமதி தாட்சாயினி பார்த்தீபன், செல்வி செல்லன் மேகலா, திருமதி கிரிசாந்தி சாள்ஸ், பத்மநாதன் பார்த்தீபன், செல்வி பாலசுப்பிரமணியம் காயத்திரி, செல்வி அலோசியஸ் மரியோரிஸ் சிந்துஜா, திருமதி சுயாதா இளமாறன், திருமதி பிரியங்கா மயூரன், திருமதி துசிதா வரதன், செல்வி இராசரத்தினம் பிரவீனா, செல்வி சுந்தரலிங்கம் கஜனி, செல்வி திருநாவுக்கரசு பவித்திரா, செல்வி சுப்பிரமணியம் கௌரி, செல்வி சண்முகநாதன் கஜேந்தினி, செல்வி வண்ணமயில் டயானி, செல்வி செல்வராசா குகப்பிரியா, செல்வி தம்பிராசா தேவகி, கணேசமூர்த்தி மங்களமூர்த்தி, செல்வி நல்லதம்பி காஞ்சனா,

வவுனியா மாவட்டம்

அரசரட்ணம் ஷாந்திக்குமார், வேலம்புராசன் ராஜீவ், செல்வி கணேசன் தர்ஷனா, பாஸ்கரன் சுதா, செல்வி சரவணன் சுமித்திரா, செல்வி சுந்தரம்பிள்ளை சர்மிளா, திருமதி கௌசல்யா ரங்கஸ்ரீ, தனபாலசிங்கம் சுகுமார், செல்வி கறுப்பையா பிரியதர்சினி, திருமதி சிவதர்சினி பகீரதன்

நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் கீழ்க்குறிப்பிட்ட ஆவணங்களின் மூலப்பிரதிகள் மற்றும் நிழற்படப் பிரதிகளுடன் சமுகமளித்தல் வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

1.தேசிய அடையாள அட்டை (தேசிய அடையாள அட்டை இல்லாதவிடத்து உமது ஆளடையாளத்தை நிரூபிக்கும் புகைப்படத்துடன் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆவணங்கள்.

2.பிறப்புச் சான்றிதழ் (பெயரில் வித்தியாசமிருப்பின் சத்தியக் கடதாசி சமர்ப்பித்தல் வேண்டும்.)

3.விவாகச் சான்றிதழ்

4.க.பொ.த (சா/த) சான்றிதழ்

5.க.பொ.த (உ/த) சான்றிதழ்

6.பட்டச்சான்றிதழ் (பல்கலைக்கழக மூதவையால் அங்கீகரிக்கப்பட்டு பதிவாளரால் ஒப்பமிடப்பட்ட பட்டச்சான்றிதழ் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்)

7.இறுதியாக கல்வி கற்ற பாடசாலை அதிபர், கிராம சேவை அலுவலர் ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ்கள்.

8.வதிவிடச் சான்றிழ்

9.தேர்தல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட வாக்காளர் இடாப்பிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட சான்றிதழின் 3 வருட உறுதிப்படுத்தப்பட்ட பிரதி

10.வேறு விசேட தகைமைகள் இருப்பின் அவை தொடர்பான சான்றிழ்கள்

ஆகியவற்றுடன் சமுகமளிக்குமாறு வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார். (செ)


## எழுத்தாளர்களுக்கு!

தங்களது அறிவுத்திறனாலும், கற்பனா சக்தியினாலும் உருவான
**கவிதைகள், சிறுகதைகள், பாடல்கள், கீர்த்தனைகள், கட்டுரைகள்**
ஆகியவற்றைத் தொகுத்து மலர் வடிவாக
அச்சுப்பதித்து வெளியிட



தங்கள் ஆக்கங்களால் உருவாகும் மலர்கள்
ஒவ்வொன்றும் காலத்திற்கும் நிலைத்திருந்து,
ஒவ்வொரு சந்ததியினரும் பயன்பெறக்கூடிய
ஒரு அரிய பொக்கிஷமாகும். இதனை

◆ உயர்ந்த தரத்தில்...
◆ குறைந்த செலவில்...
◆ விசேட விலைக்கழிவில்...

அச்சுப்பதித்திட...

## ஓர் அரிய சந்தர்ப்பம்

**01-03-2016** தொடக்கம் **01-04-2017** வரை

எனது ஆக்கங்கள்
விரையமாகாமல்
ஒரு மலராக
அச்சிடவேணும்... ?



கரிகணனில் புத்தகம்
அச்சிட்டால் தரமானதாய்
நல்லாத்தான் இருக்கும்...
ஆனால்!
விலைதான் அதிகம்..

எழுத்தாளர்களே!
முகவர்கள் எவரும் இன்றி
நேரடியாக எம்மிடம் வாருங்கள்
இல்லை!

**உங்கள் கனவு நனவாகும்.**

தங்களது மலரிற்குரிய சர்வதேச நியம நூல் இலக்கம்
இலவசமாகப் பெற்றுத்தரப்படும்

# கரிகணன்

வடக்கின் அச்சகதாரர்

இல. 681, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
+94 21 222 2717/ 8
+94 21 222 2737

(சி-3682)



## விற்பனைக்குண்டு

5 அடி நீளமும் 4 அடி அகலமும் உள்ள கோழிக்கூடு ஒன்றும் 14" Sony tv ஒன்றும் உடன் விற்பனைக்குண்டு.

(3758)

தொடர்பு: 0771229019



## விற்பனைக்கு

புளியங்குளம் புதூர்
நாகதம்பிரான்
கோயில் றோட்டில் கிறேசர்,
3 ஏக்கர் காணிவீடும்
(சகல வசதிகளுடன்)
விற்பனைக்கு உண்டு.

புத்தூர் கிழக்கு புத்தூர்
சாவகச்சேரி றோட்டில்
48 பரப்பு காணி,
2 கிறேசர் வைக்கோ,
2 ரைக்ரர் என்பன சகல
வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு
**0770489674**

# வீடுகள் கையளிப்பு



இந்திய அரசின் நிதி உதவியில் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் பங்களிப்புடன் காரைநகர் தெற்கில் அமைக்கப்பட்ட வடுகளை ச்ர்வதேச செஞ்சிலுவை செம்பிறை சங்கங்களின் செயலாளர் நாயகம் எல்கஜ் அஸ்சே நேற்றையதினம் உத்தியோக பூர்வமாக பயனாளிகளுக்கு கையளித்து வைத்தார்.

ச்ர்வதேச செஞ்சிலுவை செம்பிறை சங்கங்களின் செயலாளர் நாயகம் எல்கஜ் அஸ்சே நேற்றைய தினம் யாழ். மாவட்டத்துக்கு வருகை தந்திருந்தார். முதலில் யாழ். கோவில் வீதியில் அமைந்துள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளை அலுவலகத்துக்கு வருகை தந்து அங்குள்ள அதிகாரிகளுடன் கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தார்.

பின்னர் காரைநகர் தெற்கு பிரதேசத்தில் ஜே/44 கிராம சேவகர் பிரிவின் கீழ் உள்ள தோப்புக்காடு கிராமத்தில் உள்ள 4 வீடுகளை உத்தியோக பூர்வமாக பயனாளிகளுக்கு கையளித்து வைத்தார். காரைநகர் தெற்கு பிரதேசத்தில் ஜே/44 கிராம சேவகர் பிரிவின் கீழ் உள்ள தோப்புக்காடு மற்றும் ஊரி கிராமங்களில் தலா 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட 122 வீடுகள் பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# இலங்கையை மையப்படுத்தி 28 துறைமுக நகரங்களை நிர்மாணிக்க சீனா விருப்பம்

(கொழும்பு)

**இலங்கைத் தீவைச் சுற்றி 28 துறைமுக நகரங்களை நிர்மாணிக்க சீனா விருப்பம் தெரிவித்திருப்பதாக, இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் சீனாவுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டுக்கு அமைய, ஆரம்பிக்கப்பட்ட கொழும்புத் துறைமுக நகரத்திட்டம் கடந்த ஆண்டு மார்ச் முதல் வாரம் இடைநிறுத்தப்பட்டது.

இந்த திட்டத்தின் உடன்பாட்டில் திருத்தங்களைச் செய்து அதனைத் தொடர்வதற்கு இலங்கை அரசாங்கம் விருப்பம் கொண்டுள்ளது.

இந்தநிலையில், இந்த திட்டத்தின் மூல உடன்பாட்டில் திருத்தங்களைச் செய்வது குறித்து பேச்சு நடத்த, அமைச்சர்களான மலிக் சமரவிக்கிரம, சாகல ரத்நாயக்க ஆகியோர் சீனா சென்றுள்ளனர்.

இந்த நிலையிலேயே, கொழும்பு துறைமுக நகரத்திட்டம் போன்று இலங்கைத் தீவைச் சுற்றி 28 துறைமுக நகரங்களை நிர்மாணிக்க சீனா விருப்பம் தெரிவித்திருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை கேட்டுக் கொண்டால் மாத்திரமே, அத்தகைய 28 நகரங்களை நிர்மாணிக்க சீனா இணங்கும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. . (இ)

# மகிந்த ராஜபக்ஷ தனிக்கட்சி அமைத்தால் பலவீனமடைவார்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் சுட்டிக்காட்டு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் மாற்றுத் தரப்பாக இயங்குவதே மகிந்த ராஜபக்ஷவின் அரசியலுக்கு பலமாக இருக்கும். தனிக்கட்சி ஆரம்பித்தால் பலவீனமடைவார் எனத் தெரிவித்த தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், 1977 இல் இந்திராகாந்தி இவ்வாறே செயற்பட்டு தனது அரசியல் பலத்தை பலப்படுத்தினாரென்றும் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச்செயலாளர் டாக்டர். வசந்த பண்டார மேலும் தெரிவிக்கையில்,

வரலாற்றில் காமினி திஸாநாயக்க, லலித் அத்துலத்முதலி ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறி தனிக்கட்சி அமைத்தனர். ஆனால் அவர்களால் அரசியலில் வெற்றி பெற முடியவில்லை. ஏனென்றால் அன்று அவர்களுக்கு அரசியல் பின்னணி பலமாக இருக்கவில்லை. இன்று மகிந்த ராஜபக்ஷவுடன் பலமான அரசியல் பின்னணி உள்ளது.

எனவே, தனிக்கட்சி அமைப்பதை விட்டு தன்னோடுள்ள அரசியல் பலத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் மாற்று அணியாக இயங்குவதற்கான தீர்மானத்தை தைரியமாக எடுக்க வேண்டும். அதனைவிடுத்து அச்சமடைந்து பின்னோக்கிச் செல்லக்கூடாது.

இந்தியாவில் 1977 இல் காங்கிரஸிலிருந்து இந்திரா காந்தி வெளியேற்றப்பட்டார். ஆனால், அவர் தைரியத்தை இழக்கவில்லை. அவருக்கு பலமான அரசியல் ஆதரவு இருந்தது. எனவே காங்கிரஸிற்குள்ளேயே காங்கிரஸ் என்ற மாற்று அணியாக செயற்பட்டார். பின்னர் நாட்டின் பிரதமரும் ஆனார். இந்த முன்னுதாரணத்தை பின்பற்ற வேண்டும். தனிக்கட்சி அமைக்க வேண்டிய அவசியமில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# நிதிமோசடிக் குற்றச்சாட்டின் கீழ் ரயில்வே உயர் அதிகாரி கைது!

(கொழும்பு)

ரயில் ரிக்கெட்டுக்கள் மூலம் நிதிமோசடி செய்ததாக கூறப்படும் முன்னாள் ரயில் நிலைய பொறுப்பதிகாரி ஒருவர் ரயில்வே பாதுகாப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு, சிலாபம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் சிலாபம் - சவரான ரயில் நிலையத்தில் பணிபுரிந்த ஒருவர் எனத் தெரியவந்துள்ளது.

அவரது சேவைக் காலத்தில் 218 ரயில் ரிக்கெட்டுக்கள் மூலம் 11,807 ரூபாவை மோசடி செய்துள்ளதாக, ரயில்வே பரிசோதனை அதிகாரியினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இதன்படி, முன்னாள் ரயில் நிலையப் பொறுப்பதிகாரியை கைதுசெய்ய ரயில்வே பாதுகாப்பு அதிகாரிகள் நடவடிக்கை எடுததுள்ளதாகவும் இதனையடுத்து சிலாபம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட அவர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டதை அடுத்து, இன்று வரை விளகக மறியலில் வைக்கப்பட்டுள்ளார். (இ)

# காணி அமைச்சராக அமைச்சர் அமரதுங்க

(கொழும்பு)



அமைச்சர் ஜோன் அமரதுங்க நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் காணி அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சராக கடமையாற்றும் ஜோன் அமரதுங்க, காணி அமைச்சராக இருந்து அண்மையில் மறைந்த எம்.கே.ஏ.டி.எஸ். குணவர்த்தனவின் வெற்றிடத்திற்கே நியமிக்கப்பட்டுள்ளார். (இ)

# கலாசார அதிகார சபை அங்குரார்ப்பண நிகழ்வு

(கொழும்புத்துறை)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தேசிய கருத்திட்டத்திற்கமைவாக கலாசார அதிகாரசபை அங்குரார்ப்பண நிகழ்வும் கலாசாரப் பேரவையின் பொதுக் கூட்டமும் நாளை வெள்ளிக்கிழமைபிற்பகல்3மணிக்கு பிரதேச செயலக மகாநாட்டு மணடபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பிரதேச கலை ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ். பிரதேச செயலரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான சுகுணரதி தெய்வேந்திரம் அறிவித்துள்ளார். (இ-51)

# ஐ.ம.சு.கூ.பொதுச் செயலர் பதவியைப்பெற பனிப்போர்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் பதவியை பெற்றுக் கொள்வது தொடர்பில் போட்டி நிலைமை உருவாகியுள்ளது.

கூட்டமைப்பின் பொதுச் செயலாளராக கடமையாற்றி வந்த பேராசிரியர் விஷ்வ வர்ணபால அண்மையில் காலமானார்.

அவரது வெற்றிடத்தை நிரப்புவதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர்களுக்கு இடையில் போட்டி நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுசில் பிரேமஜெயந்த, எஸ்.பி. திஸாநாயக்க, டிலான் பெரேரா, மஹிந்த சமரசிங்க, அநுர பிரியதர்சன யாப்பா உள்ளிட்டவர்கள் இந்தப் பதவி வெற்றிடத்தினை நிரப்பும் பட்டியலில் முன்னணி வகிக்கின்றனர்.

இந்தப் பதவி குறித்த கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருடனும் கடந்த வாரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

சுசில் பிரேமஜெயந்தவிற்கு கூட்டு எதிர்க்கட்சியினரதும் ஆதரவு காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும், யாரை பொதுச் செயலாளராக நியமிப்பது என்பது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானம் எடுப்பார் என கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.(இ)

# யானை வளர்ப்பதோ அரசியலில் ஈடுபடுவதோ பிக்குகளின் வேலையல்ல

பௌத்த பிக்குகளின் முதன்மை நோக்கமாக இருக்க வேண்டியது யானை வளர்ப்பதோ, அரசியலில் ஈடுபடுவதோ அல்ல. மாறாக மனதை சுத்தப்படுத்திக் கொண்டு சரியான வழியில் செல்வதாகும் என தெஹிவல பெள்ளந்தர சிறி சதஹம் அஸ்ரமவாசி பிடிதுவே சிரிதம்ம தேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சட்டத்திற்கு அடிபணியாத தேரர்கள் பௌத்த சட்டத்தை எந்தவிதத்திலும் மதிக்கமாட்டார்கள்.

ஹோட்டலில் வேலைக்கு மட்டுமே பௌத்த தேரர்கள் இன்னும் போகவில்லை, இவ்வாறான தேரர்கள் பௌதத மதத்தின் அழிவுக்கு காரணமெனவும் சிரிதம்ம தேரர் தெரிவித்துள்ளார். (இ)

# இலங்கையில் 40% ஆண்களும் 2% பெண்களும் மதுவுக்கு அடிமை

(கொழும்பு)

இலங்கையிலுள்ள வளர்ந்தோர்களில் 40 சதவீதமான ஆண்களும் 2 சதவீதமான பெண்களும் மதுவுக்கு அடிமையாகியுள்ளனர் என ஹெல்தி லங்கா நிலையத்தின் வேலைத்திட்டப் பணிப்பாளர் சாமிக ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

வளர்ந்தோரில் ஒவ்வொரு இலட்சம் பேருக்கும் 33.4 சதவீதமானோர் ஈரல் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் எனவும், இலங்கையிலுள்ள வைத்தியசாலைகளில் 20 சதவீதமான கட்டில்களில் மதுவால் பாதிக்கப்பட்ட நோயாளிகளே உள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

காலி மாவட்டத்தில் நலன்புரி அமைப்புகள் முன்னெடுத்துள்ள மதுஒழிப்புத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டபோதே சாமிக ஜயசிங்க மேற்கூறிய தகவல்களை வெளியிட்டார்.

மதுவாலும் புகையாலும் ஏற்படும் தீங்குகள் பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு இவ்வாறான நலன்புரி அமைப்புகள் தொடர்ந்தும் செயற்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார். (இ)

# நகைக்கடையில் திருடமுயன்ற ஆணும் பெண்ணும் மடக்கிப் பிடிப்பு


யாழ்ப்பாணத்தில் உள்ள நகைக் கடை ஒன்றில் பட்டப் பகலில் நகையைத் திருட முயன்ற இருவர் கையும் மெய்யுமாக கடை ஊழியர்களால் பிடிக்கப்பட்டு யாழ்.பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்றுக் காலை 9 மணியளவில் யாழில் உள்ள பிரபல நகைக்கடை ஒன்றுக்கு வந்திருந்த தென்னிலங்கையைச் சேர்ந்த ஆணும், பெண்ணும் 2 பவுண் பெறுமதியான கை வளையலை (காப்பு) திருட முயன்ற போது கடை ஊழியர்களினால் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டு யாழ்ப்பாண பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைதான இருவரும் பாணந்துறையைச் சேர்ந்தவர்கள் என தெரிய வந்துள்ளது.

பொலிஸார் இருவரிடமும் தொடர்ச்சியாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)





## 31-ம் நாள் நினைவஞ்சலி

### அமரர் நாகலிங்கம் சுபத்திராதேவி



கடந்த 02.02.2016 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு எல்லாவகையிலும் அனுதாபம் தெரிவித்து இறுதிவரை இணைந்து நின்ற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

இன்று 03.03.2016 வியாழக்கிழமை காலை 6.30 மணியளவில் தாமரைக்குளத்தடி அந்தியேட்டி மடத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(C-3880)

கல்லூரி வீதி,
ஆத்திசூடி, பருத்தித்துறை.

குடும்பத்தினர்


# யுத்த பாதிப்புக்கு உட்பட்ட அதிபர்களுக்கு பதவி உயர்வு

## தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நடவடிக்கை வெற்றி

(கொழும்பு)

அதிபர் சேவைத்தரம் -1 கிடைக்க வேண்டிய பல அதிபர்கள் யுத்தகாலங்களில் தடை தாண்டல் பரீட்சைக்கு செல்ல முடியாததால் அவர்களுக்கான பதவி உயர்வு இதுவரை வழங்கப்படாமல் இருந்தது.

இத்தகைய நிலையை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மத்திய கல்வி அமைச்சுக்குக் கொண்டு சென்று யுத்த காலங்களில் குறித்த அதிபர்கள் தடைதாண்டல் பரீட்சைக்கு கொழும்புக் செல்ல முடியாததால் அவர்களுக்கான தடைதாண்டல் காலங்களுக்கு விலக்களிக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தது. இதைவிட இவர்களில் பலர் வயது முதிர்ந்தவர்களாகவும் அதிபர் சேவைத் தரம் -2 இல் நீண்டகாலம் கடமையில் உள்ளவர்களாகவும் உள்ளதால் அவர்களுக்கான தடைதாண்டல் பரீட்சையில் விலக்களித்து அவர்களுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டுமென்று சங்கம் கோரிக்கை விடுத்தது.

இதற்கு அமைய 2006ஆம் ஆண்டு முதல் 2011 ஆண்டுவரை விலக்களித்து அதிபர் சேவைத்தரம்-1 வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. (ந)

# இருபது-20 ஆசியக் கிண்ணம் பாகிஸ்தானை வென்றது வங்கப்புலி



ஆசிய கிண்ணம் இருபது-20 தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பாகிஸ்தானை வீழ்த்தி பங்களாதேஷ் வெற்றிப்பெற்றது.

ஆசிய கிண்ணம் இருபது-20 தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பாகிஸ்தான் பங்களாதேஷ் அணிகள் மோதின.

நாணய சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் துடிப்பெடுத்தாடியது. தொடக்க ஆட்டக்காரர்களாக மன்சூர் மற்றும் சர்ஜில் கான் களமிறங்கினர்.

இருவரும் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். இதேபோல் ஹபிஸ் 2 ஓட்டங்களிலும், உமர் அக்மல் 4 ஓட்டங்களில் வெளியேறினர்.

எனினும் விக்கெட் கீப்பர் சர்ப்பிராஸ் அகமதுவும், சோயப் மாலிக்கும் நிலைத்து நின்று ஆடி அணியை சரிவில் இருந்து மீட்டனர்.

மாலிக் 30 பந்துகளில் 5 பவுண்டரி, 1 சிக்ஸர் உட்பட 41 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில ஆட்டமிழந்தார்.

சர்பிராஸ் அகமது அதிரடியாக ஆடி 58 ஓட்டங்கள் குவித்தார். இறுதியில் 20 ஓவர் முடிவில் பாகிஸ்தான் அணி 7 விக்கெட்களை இழந்து 129 ஓட்டங்களை எடுத்தது.

பின்னர் 130 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பங்களாதேஷ் களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் தமிம் இக்பால் 7 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இதையடுத்து சவும்யா சர்கார் மற்றும் சபீர் ரஹ்மான் ஜோடி சேர்ந்தனர். இருவரும் பாகிஸ்தானின் பந்து வீச்சை சமாளித்து விளையாடினர்.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 46 ஆக இருந்த போது சபீர் 14 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

சிறப்பாக விளையாடிய சர்காரும் 48 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இறுதிக்கட்டத்தில் இணைந்த சஹிப் அல் ஹாசன் மற்றும் மோர்டாசா ஜோடி பொறுப்புடன் விளையாடி அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்து சென்றது.

இதனால் 19.1 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 131 ஓட்டங்கள் எடுத்து பங்களாதேஷ் வெற்றி பெற்றது. சாஹிப் 22, மோர்டாசா 12 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர். பாகிஸ்தான் தரப்பில் முகமது அமீர் 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார். போட்டியின் ஆட்ட நாயகனாக பங்களாதேஷின் சர்கார் தெரிவானார். (க)

## இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் தமிழ்த் தேசிய வீரன் தாஸ் அவர்களின் நினைவாக நடத்தப்படும் உதை பந்தாட்ட சுற்றுப்போட்டி இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

மாலை 3.00 மணிக்கு கழுகுகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும்.

முதல் போட்டியில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆதிசக்தி விளையாட்டுக் கழகமும்,

மாலை 4 மணிக்கு நடைபெறும் 2 ஆவது போட்டியில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து தீவகம் நெலிஞ்சிமுனை விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது.

இன்றைய நிகழ்வில் பிரதமவிருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் அவர்கள் கலந்து கொள்ளார். (க)


தரம் -05 புலமைப்பரிசில் 2015 பரீட்சையில் 153 (வெட்டுப்புள்ளிக்கு மேல்) புள்ளியைப் பெற்று சித்தியடைந்த 07 மாணவர்களை மனதாரப் பாராட்டுவதோடு இவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்களையும் ஊக்கமெடுத்த பெற்றோரையும் பாராட்டுகின்றோம்.



| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 |
|---|---|---|---|---|---|---|
| சி.பிரணவன் | க.கிருசிகன் | க.ஸ்நேகன் | சி.மிருணாளன் | த.நிதர்சிகா | மு.ஸிரோஜன் | சு.தனுசாந் |
| 180 | 174 | 169 | 161 | 160 | 154 | 153 |

மேலும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த ஏனைய 38 மாணவர்களையும் பாராட்டுவதோடு அவர்களில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 26 மாணவர்களின் விபரங்கள் வருமாறு

| | | | | |
|---|---|---|---|---|
| ச.ஆதனன் -152 | சி.அருண்பிரசாத்-140 | சி.நிகிர்தா-122 | கு.ஜெசிந்தன்-107 | வி.கோணிஸ்ஸன்-102 |
| இ.தமிழ்நிலவன் -149 | க.மகிழிசை-134 | ரு.சொப்னா-117 | ச.சாருஜா-107 | ச.தர்சிகா -100 |
| நி.யஸ்மிதா -148 | ம.மாலவன்-132 | ந.நிதர்சன் -115 | பா.மதுஜா-107 | |
| ந.சர்வின் -144 | கி.அபிலாஸ்-131 | பி.சாகித்திஜன் -114 | ஞா-பிரஷாம்-106 | |
| பி.பிரீத்திகன் -142 | பு.நிதுசாந்-130 | இ.சந்துரு-111 | ஐ.ஷர்மியா-106 | |
| பி.பிருந்தாயினி -142 | க.கிசோக்-123 | வி.விசாதனா-109 | இ.சுஜாஸ்-104 | |

(C-3885)

யா/ கரணவாய் மணியகாரன் தோட்டம்
அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை - கரணவாய் தெற்கு, கரவெட்டி.

பாடசாலைச் சமூகம்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

**பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம்**

1. கலைமாணி (பொது)
2. வணிகமாணி
3. வியாபார முகாமைத்துவமாணி

மேற்படி பட்டக் கற்கை நெறிகளில் சித்தியடைந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கு பட்டச் சான்றிதழ்களை வழங்கும் முகமாக பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம் ஒன்றை எதிர்வரும் 20.03.2016 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணி தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி பட்டக் கற்கை நெறிகளில் 27.07.2013 இற்கு பின்பும் 06.09.2014 திகதிக்கு முன்பும் சித்தியடைந்த மாணவர்களுக்கே மேற்படி பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பட்டங்கள் வழங்கப்படவிருப்பதால், தகுதி உடையவர்கள் 15.03.2016 இற்கு முன்னதாக வேண்டுகோள் படிவங்களை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். வேண்டுகோள் படிவங்களை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் 02.03.2016 (புதன்கிழமை ) தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
29.02.2016

(சி-3879)

## புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம்
## கேள்வி அறிவித்தல்-2016

2016 புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள கீழ்க்காணப்படும் வேலைகளுக்காக C9 (CIDA) பதிவு பெற்ற ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றது.

| தொ. இல. | வேலையின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்.ரூபா) (Rs) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு (Rs) | மீளளிக்கப்படாத கேள்விப் படிவ கட்டணம் (VAT,NBT உள்ளடங்கலாக) (Rs) |
|---|---|---|---|---|
| 01 | ஆட்பதிவு திணைக்கள கிளைக்காரியாலயம் நிர்மாணித்தல் | 1.723 | 18000.00 | 1130.00 |
| 02 | அலுமினியபிரிப்புவேலை (Aluminum Partician work) | 1.2 | 12000.00 | 1130.00 |

**கேள்விப்படிவம் வழங்கல்:** 08.03.2016 தொடக்கம் 23.03.2016 பி.ப 3.00 மணிவரை
**கேள்விப்படிவம் ஏற்றல்:** 24.03.2016 பி.ப 2.30 மணி வரை
**கேள்வி திறத்தல்:** 24.03.2016 பி.ப 2.30 மணி

01.புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து மேற்குறிப்பிட்ட வேலைக்காக கேள்விகளை கோருகின்றது.

02.கேள்வியை ஏற்கவோ,மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.

03.கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன்னர் ஒப்பந்தகாரர் வலுவுள்ள CIDA பதிவுப்புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

04.கேள்வி திறக்கப்படும் சமயத்தில் கேள்விக்காரர் அல்லது அவரது பிரதிநிதி பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

05.கேள்விப்பத்திரத்தின் இரு பிரதியினை வெவ்வேறாக (Original,Duplicate) "தலைவர்,பெறுகைகள் குழு,பிரதேச செயலகம்,புதுக்குடியிருப்பு" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியிலோ இடல் வேண்டும்.

06.மேலதிக விபரங்களையும் நிபந்தனைகளையும் கணக்குக்கிளை,பிரதேச செயலகம்,புதுக்குடியிருப்பில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பிராந்திய பெறுகைக்குழுத் தலைவர்
பிரதேச செயலகம்,
புதுக்குடியிருப்பு.

(3877)

**மருத்துவ பிரதிநிதிகளுக்கும் (MEDICAL REPS)**
**மருந்தகங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்குமான (Pharmacy Assts)**

இடம் : மருந்தியலாளர் கல்வி மண்டபம், யாழ்ப்பாணக்கல்லூரி (வெளிவாரி பட்டப்படிப்பு) 464, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
காலம் : 6 மாதங்கள் [ March/2016 to August/2016 ]
நேரம் : 1ஆவது பிரிவு - 09.03.2016 புதன்கிழமை காலை 8.30 மணி
2ஆவது பிரிவு - 13.03.2016 ஞாயிற்றுக்கிழமை பி.பகல் 12.30 மணி

கற்கை நெறிக்கான பதிவுகளை 07.03.2016 திங்கட்கிழமை காலை 9.00 – 12.00 மணிக்கிடையில் யாழ்ப்பாணக்கல்லூரியில் மேற்கொள்ளலாம்.
ஆறுமாதங்களுக்கான பயிற்சிக்கட்டணம் 9000/= ஐ ஒரே தடவையில் செலுத்துபவர்கள் அனுமதிக்கட்டணம் ரூபா 500/= செலுத்த வேண்டியதில்லை. (இலவசம்)
பயிற்சி வகுப்புக்களில் சேர்த்து கொள்வதற்கான விண்ணப்பப்படிவமும், யாழ்ப்பாணக் கல்லூரி அனுமதிப்படிவமும் நேரடியாகவோ/ தபால் மூலமாகவோ: *நடராசா இராசநேரு, மருத்தியலாளர் பயிற்சி இணைப்பாளர், யாழ்ப்பாணக் கல்லூரி (வெளிவாரி பட்டப்படிப்பு) 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்* என்ற விலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம். T.P. 0776256292


[3745]

யாழ்.குடாநாட்டில் கேபிள் ரிவியை அறிமுகப்படுத்திய
## Sats-tech Engineer's நிறுவனத்தின்


25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மக்களின் தொலைக்காட்சி ரசனைக்காக மிக குறைந்த செலவிலான அதி நவீன தொழில்நுட்ப முறையிலான கேபிள் அற்ற (வயர்லெஸ்) தொலைக்காட்சி சேவையூடாக

## Tv Lanka Digital Cable Less Set up Box

முறையில்,
கேபிள் இணைப்பு, டிஸ் அன்ரனா எதுவுமில்லாமல் சாதாரண அன்ரனா மூலமான சேவை,



- உபகரணங்கள் Rs.2500/- மட்டும்
- மாதவாடகை Rs.400/- மட்டும்
- தடைகள் அற்ற சேவை
- அதிநவீன தொழில்நுட்பம்
- வாழ்நாள் உத்தரவாதம் (உபகரணங்களுக்கு)
- முற்கூட்டிய கொடுப்பனவுகளுக்கு 20% தள்ளுபடி



விரைவில் வடமராட்சி, கிளிநொச்சி, முல்லைத்தீவு,மன்னார் பிரதேசங்களுக்கும் சேவை விஸ்தரிக்கப்படவுள்ளது.

## விற்பனை முகவர்கள் தேவை

**SATS-TECH Engineer's Pvt Ltd**
**NO. 298, K.K.S. ROAD, JAFFNA.**
**Phone:- 021-222 8812**
**Hot Line:-077 771 0785**



(3744)

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 34<br>தகைமை/தொழில்:ALஅரசதொழில்<br>எதிர்பார்ப்பு:விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/5587 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா:52 செவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில<br>தொ.இ: G/4573 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 44<br>தகைமை/தொழில்:A/L டுபாய்<br>தொ.இ: B/5588 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 39<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: G/4576 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 39 சூரி,செவ் 10 இல்<br>தகைமை/தொழில்O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/5589 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 26<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்புவிவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/4579 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 13 செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:LLB/சட்டத்தரணி<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/5590 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 8<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/4580 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

# யாழ். மாவட்டத்தில் கல்வி நிலையை மேம்படுத்த ஜப்பான் அரசு நிதியுதவி



யாழ்.மாவட்டத்தில் கல்வி நிலையை மேம்படுத்தும் நோக்கில் ஜப்பான் அரசாங்கத்தினால் 26 மில்லியன் ரூபா நிதி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த ஜப்பானின் இலங்கைக்கான தூதுவர் கெனிச்சி சுகுனும வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரேவை நேற்றைய தினம் அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

வடமாகாணத்தின் அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டபோதே குறித்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் "இலங்கை அரசாங்கத்தினது உதவிபெறும் கொள்கையில் ஒரு தூணாக உள்ள அவசர உதவி தேவைப்படும் இடங்களை அபிவிருத்தி செய்தல்" எனும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணததிலுள்ள இரண்டு பாடசாலைகளின் கல்வி அபிவிருத்திக்கென ஜப்பான் அரசாங்கத்தினால் 26 மில்லியன் ரூபா நிதியுதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அதில் யாழ்.முத்துத்தம்பி மத்திய மகா வித்தியாலயத்தில்விசேட தேவையுடைய மாணவர்களிற்கான கல்விக் கூடம் அமைப்பதற்கும் வகுப்பறைத் தொகுதியின் அபிவிருத்திக்குமென 11.4மில்லியன ரூபாவும், அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரியில் வகுப்பறை கட்டடதொகுதி அமைப்பதற்கு 11.6 மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 26 மில்லியன் ரூபாவை வழங்குவதற்கான ஒப்பந்தத்தில்தூதுவர்கையெழுத்திட்டார்.இக்கலந்துரையாடலில் வட மாகாண பிரதம செயலாளர் அ. பத்திநாதன் ஆளுநரின் செயலாளர் இ.இளங கோவன், வடமாகாண கல்வி அமைச்சின செயலாளர் இ.ரவீந்திரன், யாழ்வலயகல்விப்பணிப்பாளர்ந.தெய்வேநதிரராஜா மற்றும்மேற்படி இரண்டு பாடசாலைகளின் அதிபர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (இ-9)

## பக்திவலை எனும் சமய, சமூக விழிப்புணர்வு நாடக ஆற்றுகை

(மல்லாகம்)

மகாசிவராத்திரி தினத்தினை முன்னிட்டு எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை புத்தாக்க அரங்க இயக்கத்தின் தயாரிப்பில் 'பக்தி வலை' என்னும் சமய சமூக விழிப்புணர்வு நாடக ஆற்றுகை மல்லாகம், மானிப்பாய், அளவெட்டி, மாவிட்டபுரம் ஆகிய இடங்களில் இடம்பெறவுள்ளது.

புத்தாக்க அரங்க இயக்க கலைஞர்களின் நடிப்பில் ஆற்றுகை செய்யப்படவுள்ள நாடக ஆற்றுகைக்கான எழுத்துருவாக்கம் நெறியாள்கையினை எஸ்.ரி.குமரன், எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர். (இ-5-21)

## தென்மராட்சி கல்வி வலயத்தினால் நடத்தப்படும் தென்னருவி -2016 எனும் வர்த்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்தும் நோக்குடனும் வணிகங்கள் தொடர்பான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் தென்மராட்சிக் கல்வி வலயத்தினால் நடத்தப்படும் "தென்னருவி -2016" எனும் கருப்பொருளிலான வர்த்தகக் கண்காட்சி நாளை 4ஆம், நாளை மறுதினம்5ஆம் திகதிகளில் காலை 8.30 மணி முதல் பி.ப 4.00 மணிவரை யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இக் கண்காட்சியில் முதன்மை விருந்தினராக வட மாகாண சபை முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன், சிறப்பு விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த. குருகுலராஜா, கௌரவ விருந்தினராக வட மாகாணசபை உறுப்பினர் கேசவன் சயந்தன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இக் கண்காட்சியில் உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திகள், வணிக அமைப்புக்களின் காட்சிக் கூடங்கள், வங்கிகளின் காட்சிக் கூடங்கள், தொழில் வழிகாட்டல் ஆலோசனைகள், உயர்தர தொழில் நுட்பத்துறை மாணவர்களின் காட்சிக் கூடங்கள், முறைசாராக்கல்விப் பிரிவினரின் காட்சிக்கூடங்கள், உயர் கல்வி வாய்ப்புக்கான ஆலோசனைகள், மாணவர்களின் கலை ஆற்றுகைகள் என்பன இடம்பெறவுள்ளன.

இரு நாட்களும் இடம் பெறும் இக் கண்காட்சியினை 4 ஆந் திகதி பாடசாலை மாணவர்களும், 5 ஆம் திகதி பொதுமக்களும் பார்வையிடமுடியும் என தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் அறிவித்துள்ளார். (இ)




## மஹா சிவராத்திரி

(சித்தன்கேணி)

தெல்லிப்பளை தமிழ்ச்சங்கம் நடத்தும் மஹா சிவராத்திரி விழா எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு கீரிமலை சிவபூமி யாத்திரிகர் மடத்தில் இடம் பெறவுள்ளது.

தெல்லிப்பழை தமிழ்ச்சங்கத் தலைவர் ச.சிவானந்தராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தனத்தை தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் விசேட சிறப்புப் பட்டிமன்றமும் சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திர மயான காண்டம், இசை நாடகங்களும் நடன, கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-17)

◆ ◆ ◆ ◆ ◆

(தும்பளை)

பருத்தித்துறை கற்கோவளம் பகவான் ஸ்ரீ சத்தியசாயி பகவான் நிலையத்தில் மஹா சிவராத்திரி விழா எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்கமைய மாலை 6.30 மணிக்கு வெளி விநாயகர் வழிபாடும் பிரசாந்திக் கொடியேற்றமும் நடைபெற்று நான்கு சாமப் பூஜைகளும் நடைபெறவுள்ளன.

8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் திருப்பள்ளி எழுச்சியுடன் மகாமங்கல ஆராத்தியும் நடைபெறவுள்ளது. (இ-19)

## திருவள்ளுவர் பூஜை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய அறநெறிப் பாடசாலையில் திருவள்ளுவர் குருபூஜை நிகழ்வு எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் இ.இராஜேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் ஓய்வு நிலை பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

இந் நிகழ்வில் அறநெறி பாடசாலை மாணவர்களுக்கான பேச்சு போட்டி, திருக்குறள் மனனப் போட்டி, குழுப்பாடல், தனிப்பாடல் இடம்பெறவுள்ள. (இ-5)

## டிறிபேக் கல்லூரியில் விரைவில் ஆண்கள் விடுதி

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியிலேயே முதன் முறையாக சாவகச்சோி டிறிபேக் கல்லூரியில் மாணவாகள் தங்கி கல்வி பயில்வதற்கான ஆண்கள் விடுதி அமைக்கப்படவுள்ளது.

லண்டன் சாவதேச பழைய மாணவா சங்கத்தின் நிதி மூலம் அமையவுள்ள இக்கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியில் வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபா ந.ஜெயக் குமார் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் வடமாகாண முதலமைச்சா சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் மொழிகள் அமைச்சா மனோகணேசன் ஆகியோர் கலந்து கொண்டு விடுதிககான அடிக்கல்லை நாட்டிவைக்கவுள்ளனா.

அமையவுள்ள இவ்விடுதியில் வடக்கு, கிழக்கு, மலையகம் மட்டுமில்லாமல் நாட்டின் எப்பாகத்தில் இருந்தும் வறிய மாணவர்கள் வந்து தங்கி இருந்து கல்வி கற்க முடியும் எனவும் இவர்களுக்கான பல்கலைக்கழக கல்வி வரைக்குமான அனைத்து செலவுகளையும் டிறிபேக் கல்லூரியின் சாவதேச பழையமாணவா ஒன்றியம் பொறுப்பேற்கும் எனவும் இவ்விடுதியில் சுமார் நூறு மாணவாகள் தங்க முடியும் எனவும் ஒன்றியச் செயலாளா ப.சிவராசா தொிவித்துள்ளார்.

அடிக்கல் நாட்டும் வைபவத்தில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளா இ.ரவீந்திரன் மாகாணக் கல்விப் பணிப்பாளா செ.உதயகுமார் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளா சு.கிருஸ்ணகுமார் மற்றும் பழைய மாணவா சங்க பிரதிநிதிகள் ஆகியோர் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனா. (இ-5- 89)





அச்சுவேலி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்ற போது பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா கலந்து கொண்டிருந்தார். (இ)

## தரம் 05 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்- இல.01 பகுதி -I- விடைகள்

★ வலம்புரி கல்விப்பிரிவு

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | 2 | (11) | 2 | (21) | 2 | (31) | 1 |
| (2) | 3 | (12) | 3 | (22) | 3 | (32) | 3 |
| (3) | 1 | (13) | 1 | (23) | 1 | (33) | 3 |
| (4) | 3 | (14) | 2 | (24) | 2 | (34) | 1 |
| (5) | 2 | (15) | 3 | (25) | 1 | (35) | 2 |
| (6) | 1 | (16) | 1 | (26) | 3 | (36) | 3 |
| (7) | 3 | (17) | 3 | (27) | 1 | (37) | 1 |
| (8) | 2 | (18) | 2 | (28) | 2 | (38) | 3 |
| (9) | 1 | (19) | 3 | (29) | 3 | (39) | 2 |
| (10) | 3 | (20) | 1 | (30) | 2 | (40) | 1 |

# பௌத்த பிக்குகள் தொடர்பான வழக்குகளைத் துரிதப்படுத்துக

### மகாநாயக்க தேரர்கள் வலியுறுத்து

பௌத்த பிக்குகள் குறித்த வழக்குகளை துரிதப்படுத்துமாறு அஸ்கிரிய பீடாதிபதி உள்ளிட்ட பௌத்த மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்று முன்தினம் கோரியுள்ளனர். கலகொட அத்தே ஞான சார தேரர் தொடர்பில் துரித கதியில் விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். வாரியபொல சுமங்கல தேரரின் நினைவு நாள் நேற்றைய தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இவ்வாறான ஓர் நிலையில், பௌத்த பிக்குகளின் வழக்குகளை துரிதப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வாரியபொல தேரரை அப்போதைய ஆட்சியாளர்கள் துரோகியாகக் கருதி சிறையில் அடைத்ததாகவும் மற்றும் சிலருக்கு அவர் தேசிய வீரராக தென்பட்டதாகவும் அஸ்கிரிய பீடத்தின் சிரேஷ்ட மகாநாயக்க தேரர் மெதகம தம்மானந்த தேரர் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

பொது விடயங்களுக்காகவே சிறையில் அடைக்கப்பட்டுள்ள பௌத்த பிக்குகள் தொடர்பில் துரித கதியில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஜனாதிபதியிடம் அஸ்கிரிய பீடாதிபதி, தம்மானந்த தேரர் உள்ளிட்ட பௌத்த மகாநாயக்க தேரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ)

# இடநெருக்கடி: ஆளணிப் பற்றாக்குறையால் அல்லாடுகின்றது இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் மற்றும் துஷ்பிரயோக ஒழிப்பு ஆணைக்குழு இயங்கிவரும் கட்டடத்தின் இடநெருக்கடியாலும் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையாலும் ஆணைக்குழுவின் அன்றாடப் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

இதன் காரணமாக ஆணைக்குழுவுக்குக் கிடைத்திருக்கும் சுமார் 12 ஆயிரம் முறைப்பாடுகள் விசாரணை செய்யமுடியாத நிலை யில் தேங்கிக் கிடக்கின்றன எனவும் அவற்றை விசாரணை செய்வதற்கு 81 விசாரணை அதிகாரிகள் மட்டுமே உள்ளனர் எனவும் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது ஆணைக்குழுவில் சகல பிரிவுகளிலும் மொத்தமாக 197 உத்தியோகத்தர்களே கடமையாற்றுகின்றனர். உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக அண்மையில் நூறு பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்டனர்.

எனினும், அலுவலகக் கட்டடத்தின் இடப் பற்றாக்குறையால் அவர் களது பணி இன்னும் ஆரம்பமாகவில்லை. இந்த இட நெருக்கடியைத் தீர்த்துக்கொள்வதற்காக ஆணைக்குழுவின் தற்போதைய கட்டடத்துக்கு அருகிலுள்ள சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத் தின் உத்தியோகபூர்வ இல்லத்தையும் அதனுடன் சேர்ந்த நூறு பேர்ச்சர்ஸ் காணியையும் பெற்றுக் கொள்ள மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் தோல்வியில் முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 30.12.1989

மறைவு 03.03.2009

## சிவபாலன் சிவகௌரி

நித்திய வாழ்வின் நிம்மதி தொலைந்து
சத்திய வேள்வியில் ஆகுதியாதி
ஆண்டுகள் ஏழு உருண்டோடியதே
கண்மணியே காவியத்தின் நாயகியே
கண்ணிமைக்கும் பொழுதுதனில்
வஞ்சகரின் கொலை வெறியால்
எமை விட்டு நீங்கி விட்டாய்
கண்மணியே இன்றிருந்தால் அகவை இருபத்தேழில்
அடியெடுத்து வைத்திருப்பாய்
அன்பு மழை பொழிந்திடும் வதனமுகம்– எமை
நிம்மதியாய் வாழ விட்டிருக்கும்
தவிக்கின்றோம் நிம்மதியைத் தொலைத்த பாவிகளாய்
மீண்டும் எப்போ காண்பதோ

இல. 611-6 ஆம் யூனிற், இராமநாதபுரம், கிளிநொச்சி.

உன் பிரிவால் வாடும் அப்பா, அம்மா, தம்பி.

(3739)

# கண்ணீர் அஞ்சலி

எமது யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவராகவும் நீண்டகால நிர்வாக சபை உறுப்பினராகவும் இருந்த

## அமரர் மயில்வாகனம் சிவசுப்பிரமணியம் அவர்கள்

அமரத்துவம் அடைந்த செய்தி அறிந்து நாம் ஆழ்ந்த துயரமடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**பணிப்பாளர்களும் பணியாளர்களும்**
**யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்**
**111, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

(சி-3878)

### அகழ்வு; ஏழ்வர் கைது

பொகவந்தலாவ - மாவெலி காட்டில் சட்ட விரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்ந்து கொண்டிருந்த ஏழ்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் படி நேற்றுமுன்தினம் இரவு பொலிஸாரால் இந்த நடவடிக்கை மேற கொள் ளப்பட்டுள்ளதாகதெரிய வந்துள்ளது. இந்த பகுதியில் இவர்கள் பல நாட்களாக இவ்வாறுமாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டு வந்துள்ளனர். சந்தேக நபர்களிடம் இருந்து மாணிக்கக்கல் அகழ்விற்கு பயன்படுத்தப்பட்ட பல உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. (இ)

# இராசி பலன்

03.03.2016
(மாசி 20, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.24 மணிக்கு
நவமி பிற்பகல் 2.35 மணிவரை
மூலம் பின்னிரவு 2.06 மணிவரை
சுபநேரம் 7.56-9.26 மணிவரை
இராகுகாலம் 1.56-3.26 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சூரி புத கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் கார்த்திகை, ரோகினி | | |
| சுக் | | | குரு ராகு |
| சந் | சனி செவ் | | |

**மேடம்:** தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், வீண்பழிகள் அகலும்.

**இடபம்:** சுற்றத்தாரை அனுசரித்துச் செல்வது நல்லது, பயணங்களால் அலைச்சலும் மனச்சோர்வும் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**மிதுனம்:** நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், குடும்பத்தில் அந்நியோன்னியம் கூடும், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்.

**கடகம்:** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், பகை விலகி பாசம் கூடும் நாள், சுபநிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிம்மம்:** எண்ணங்கள் எளிதில் கைகூடும், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய நபர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி:** தூரத்து உறவினர்களால் நன்மையுண்டு, வாகன பழுதுச் செலவுகள் குறையும், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும்.

**துலாம்:** பாராட்டும் புகழும் கூடும் நாள், இளைய சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்:** வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும்.

**தனுசு:** சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முற்படுவீர்கள், சேமிப்பை விலக்குவது நல்லது, திடீர் பயணத்தால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்.

**மகரம்:** சுப விரயங்கள் கூடும் நாள், உறவினர்களின் வீட்டு சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வழிபாடு காரிய வெற்றி தரும்.

**கும்பம்:** சமயோசிதப் புத்தியால் பலரையும் கவர்வீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்:** வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், ஆரோக்கியமான நாள்.

# சிறுநீரகம் கிருமித் தொற்றுக்கு உள்ளான மாணவனுக்கு பொதுமக்கள் பண உதவி

## முள்ளியவளை சமாதான நல்லிணக்கக்குழுவின் ஒன்றுகூடலில்

தன்னார்வ தொண்டு நிறுவனத்தினால் பொதுக்கூட்ட நிகழ்வு ஒன்றிற்காக வழங்கப்பட்ட சிற்றுண்டி செலவிற்கான பணத்தை ஒன்று திரட்டி சிறுநீரகத்தில் ஏற்பட்ட கிருமித் தொற்றுக்காரணமாக பாதிக்கப்பட்ட மாணவன் ஒருவனுடைய வைத்திய செலவிற்காக பணத்தை வழங்கிய சம்பவம் முள்ளியவளை முதலாம் வட்டாரத்தில் உள்ள சமாதான நல்லி ணக்கக் குழுவின் ஒன்றுகூடல் நிகழ்வில் இடம் பெற்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

கரித்தாஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் குறித்த கிராமத்திலுள்ள பொது அமைப்புக்கள் அனைத்தும் ஒன்று திரட்டி அக்கிராமத்தில் சமாதான சுகவாழ்வு மற்றும் ஒற்றுமை ஆகியவற்றை நோக்காகக் கொண்டு கடந்த மாதம் உருவாக்கப்பட்ட சமாதான நல்லிணக்கக் குழுவின் முதலாவது பொதுக்கூட்டம் கடந்த 28ஆம் திகதி அன்று பிற்பகல்4 மணியளவில் முள்ளியவளை வடக்கு பொது நோக்கு மண்டபத்தில் அக்குழுவின் தலைவர் கா.சிவகுமார் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் குறித்த கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட 100 இற்கு மேற்பட்ட பொது மக்கள் கலந்து கொண்டனர்.




இக்கூட்டத்தில் சர்வமதங்களையும் ஒன்று திரட்டி எவ்வாறு சமாதான வழியில் சமூகங்களைக் கட்டியெழுப்பதல் எனும் தலைப்பில் கரைதுரைப்பற்று பிரதேச சர்வமத குழுவின் தலைவர் இ.தவராசாவினால் விளக்கமளிக்கப்பட்டது.மேற்படி கூட்டத்திற்காக குறித்த தன்னார்வ தொண்டு நிறுவனம் சிற்றுண்டி செலவிற்கு ஒரு தொகைப் பணத்தை வழங்கியிருந்தது.

அப்பணத்தை ஒன்று திரட்டி குறித்த கிராமத்தில் வசித்து வரும் சிறுநீரக கிருமித் தொற்றுக்குள்ளாகி பேராதனை பொது வைத்தியசாலையில் சிசிக்கைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள மாணவனின் வைத்திய செலவிற்காக வழங்கப்பட்டது. (2-3-310)

# மோ.சைக்கிள் விபத்துக்குள்ளாகி குடும்பஸ்தர் வைத்தியசாலையில்



நெல் அறுவடை செய்யும் இயந்திரத்துடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் கால் முறிந்த நிலையில் அடம்பன் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் மன்னார் -அடம்பன் பிரதான வீதியில் நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்றது.


இதில் ஆரோக்கிய யுசேவியஸ் குரூஸ் (வயது-60) என்ற குடும்பஸ்தரே கால் முறிந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மரணச் சடங்கு வீடொன்றிற்கு மோட்டார் சைக்கிளில் சென்று விட்டு மேற்படி பிரதான வீதி வழியாக பயணித்துக் கொண்டிருந்த வேளை முன்னால் பயணித்த நெல் அறுவடை செய்யும் இயந்திரத்தை முந்திச் செல்ல முற்பட்ட வேளை இயந்திரத்தின் பின்பகுதியில் மோட்டார் சைக்கிள் சிக்கியதில் அவர் விபத்துக்குள்ளாகி இடது கால் பகுதியில் முறிவு ஏற்பட்ட நிலையில் சிகிச்சைக்காக மேற்படி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அடம்பன் பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று மேலதிக விசாரணையை மேற்கொண்டார். (2-3)

# சுகாதாரமற்ற முறையில் இயங்கிய வெதுப்பகத்திற்கு சீல் வைக்கப்பட்டது

## வவுனியா நீதவான் நீதிமன்றின் உத்தரவிற்கமைய



வவுனியாவில் சுகாதாரமற்றமுறையில் இயங்கி வந்த வெதுப்பகம் ஒன்று நேற்று முன்தினம் வவுனியா நீதவான் நீதிமன்றத்தினால் சீல் வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா பண்டாரிகுளம் பகுதியில் பல வருடங்களாக இயங்கிவரும் வெதுப்பக உற்பத்தி நிலையத்தில் சுகாதாரமற்ற முறையில் உணவு தயாரித்தமை, விற்பனை செய்தமை, தூய்மை பேணாமை, ஆபத்து தருவிக்கக் கூடிய முறையில் தூசி படிந்திருந்தமை போன்ற சுகாதார சீர்கேடுகளைக் கருத்தில் கொண்டே வெதுப்பகம் சீல் வைக்கப்பட்டுள்ளது. வவுனியா சுகாதார பொது பரிசோதகரினால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே மேற்படி வெதுப்பகம் கண்டறியப்பட்டு வவுனியா நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைய சீல் வைக்கப்பட்டது. (2-311)

# சமுர்த்திப் பயனாளிகள் தமது முறைப்பாடுகளை உரிய காலப்பகுதியினுள் மேற்கொள்ள வேண்டும்

## முல்லை.வாழ்வின் எழுச்சித்திட்டப் பணிப்பாளர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மாமூலைப்பகுதியில் வாழ்வின் எழுச்சி பயனாளிகளுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் முற்பகல் 10 மணிக்கு மாமூலை பொது நோக்கு மண்டபத்தில் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் என். சப்ராஸ் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சமுர்த்திப் பயனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பாகவும் வாழ்வாதார மானியக் கொடுப்பனவுகள் தொடர்பாகவும் பகுப்பாய்வுகள் நடைபெற்றன.

இக்கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட வாழ்வின் எழுச்சித் திட்டப் பணிப்பாளர் திருமதி க. பவானி கலந்து கொண்டு கருத்துரைக்கையில்,

சமுர்த்தி பயனாளிகள், சமுர்த்தி அங்கத்தவர்கள் தமக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள் ,மானியங்கள் ஆகியவற்றை குறித்த காலப்பகுதிகளுக்கு பெற்றுக் கொள்ள வேண்டும்.

அவ்வாறு பெற்றுக்கொள்ளத் தவறும் பட்சத்தில் தமது முறைப்பாடுகளை குறித்த காலப்பகுதியினுள் மேற்கொள்ள வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கப் பெறும் முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதில் சிக்கல்கள் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்போது மாமூலை கிராமத்தின் கிராம அலுவலர் அ.ஜெகதீஸ்வரன், முள்ளியவளை சமுர்த்தி வங்கியின் வலய உப முகாமையாளர் யோ.ஜோயிஸ்குமார் ஆகியோருடன் பொதுமக்களும் கலந்து கொண்டிருந்தனர். (2-3-310)

# அகில இலங்கை சைவத்தமிழ் இளைஞர் மாநாடு வவுனியாவில்

## எதிர்வரும் ஞாயிறு,திங்கள் தினங்களில்

அகில இலங்கை சைவ மகா சபையின் சைவத்தமிழ் இளைஞர் மாநாடு **ஆன்மீக மனிதநேயப்பணிகளில் ஒன்றிணைவோம் சைவத்தமிழ் பண்பாட்டைக் காப்போம்** எனும் தொனிப்பொருளில் வவுனியா கோவிற்குளம் சிவன் கோவிலில் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் 7 ஆம் திகதி திங்கட்கிழமையும் நடைபெறவுள்ளது.

சைவ மகாசபையின் தலைவர் சிவத்திரு சி.சோதிமூர்த்தி தலைமையில் நடைபெறும். இந்நிகழ்விற்கு மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் கிழக்கிலங்கை இந்து இளைஞர் பேரவைத் தலைவருமாகிய சிவத்திரு சீ. யோகேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

யாழ்ப்பாண அரச அதிபர் நா.வேதநாயகன், வடக்குமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன், இந்து கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் உமா மகேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். மானிடம் அறக்கட்டளையின் தலைவர் இ.செல்வநாயகம், சர்வதேச இந்து இளைஞர் சங்கத்தின் அமைப்பாளர் நா. குமர குருபரன், லண்டன் கனக துர்க்கை அம்மன் ஆலயத்தின் முன்னாள் தலைவர் வைத்திய கலாநிதி பரமநாதன், யாழ்ப்பாண மக்கள் வங்கியின் ஓய்வுபெற்ற பிராந்திய முகா மையாளர் சி.பத்மநாதன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ள னர்.

கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமத்தைச் சேர்ந்த தவத்திரு கணேசானந்த சுவாமிகள், நல்லை ஆதீன குருமுதல்வர் தவத்திரு ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், தென்கயிலை திருகோணமலை ஆதீனத்தைச் சேர்ந்த தவத்திரு அகத்தியர் அடிகளார் உட்பட பலர் அருளாசிகளை வழங்கவுள்ளனர்.

காலை 8.30 மணிக்கு வவுனியா வேப்பங்குளம் ஞான வைரவர் திருக்கோவிலில் இருந்து ஆரம்பமாகும் நடைபவனி கோவிற்குளம் சிவன் கோவிலைச் சென்றடையும். அங்கு முற்பகல் 10மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

அருளாசி உரைகளைத் தொடர்ந்து தலைமையுரையும் மாநாட்டின் நோக்கும் குறித்த உரையும் இடம்பெறும். தொடர்ந்து பிராந்திய இணைப்பாளர்களின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும். கோவிலைத் தழுவிய குடிகள் குடிகளைத் தழுவிய கோவில் எனும் தலைப்பில் ஆய்வரங்கு இடம்பெறும்.

முதலாம் நாளின் 2 ஆம் அமர்வு பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும் .

இந்நிகழ்வில் இளைஞர்களும் அறநெறிக் கல்வியும் எனும் தலைப்பில் ஆய்வரங்கு இடம்பெறும்.

விருந்தினர்கள் உரையைத் தொடர்ந்து இறுவெட்டு வெளியீட்டுடன் முதல் நாள் நிகழ்வுகள் நிறைவு பெறும்.

இரண்டாம் நாள் அமர்வு காலை 5.30 மணிக்கு யோகாசனம் தியானப் பயிற்சிகளுடன் ஆரம்பமாகும்.

முற்பகல் 10 மணிக்கு மனிதநேயத் தொண்டுப் பணிகளில் இளைஞர்களின் ஈடுபாடு எனும் தலைப்பில் கவிஞர் சோ.பத்மநாதன் உரையாற்றுவார். தொடர்ந்து கருத்துப் பகிர்வும் கொள்கைப் பிரகடனமும் இடம்பெறும்.

பி.ப 3 மணியளவில் கோவிற்குளம் சிவன் ஆலயத்திலிருந்து ஊர்திகள் சகிதம் திருக்கேதீச்சரத்திற்கு மகா சிவராத்திரி ஆன்மீகப்பயணம் இடம்பெற்று அங்கு சிவராத்தி விரதம் அனுஷ்டிக்கப்படும். (3)

# டைனோசர் விலங்கின் வடிவில் வெட்டப்பட்ட மரத்தின் ஒரு பகுதி



கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தில் டைனோசர் விலங்கின் வடிவில் மரத்தின் ஒரு பகுதி காணப்படுகின்றது. இதனை இப்பகுதி மக்கள், பாடசாலை மாணவர்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

குறித்த மரம் வெட்டப்பட்ட நிலையில் இவ் விலங்கு வடிவம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அனைவரினது கவனத்தை ஈர்த்த இம் மரத்தை இப்பகுதி மக்கள் பார்வையிட்டு வருகின்றனர். (2-311)

# 'பதிவும் பகிர்வும்' அறிமுகவிழா இன்று

(புதுக்குடியிருப்பு)

எழுகலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனின் பதிவும் பகிர்வும் எனும் அறிமுகவிழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் புதுக்குடியிருப்பு கோட்டக்கல்வி அலுவலக அதிபர் சி.சுப்பிர மணியேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் செ. பிரணவநாதன் சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர் ச. நாகரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

அறிமுகவுரையை முல்லைத் தீவு பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஞா. ஆதவன் ஆற்றுவார்.

கருத்துரைகளை முல்லைத்தீவு கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.பீதாம்பரம், மு/கலைமகள் வித்தியாலய அதிபர் க.ஜெயவீரசிங்கம் ஆகியோர் நிகழ்த்துவார்கள்.

பதிலுரையை எழுகலை இலக்கியப்பேரவை தலைவர் கை.சரவணன் ஆற்ற நன்றியுரையை மு/ உடையார்கட்டு மத்திய கல்லூரி தொடக்கப்பிரிவு அதிபர் ந.அமிர்தநாதன் நிகழ்த்துவார். (2)

# மோ.சைக்கிள்-உழவு இயந்திரம் கோரவிபத்து; தாய் பலி, 2 குழந்தைகள் உட்பட மூவர் படுகாயம்!

## நட்டாங்கண்டலில் சம்பவம்

(பனிக்கன்குளம்)

மணல் ஏற்றியவாறு பயணித்த உழவு இயந்திரமும் மோட்டார் சைக்கிளும் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் தாய் பரிதாபகரமாக பலியானதுடன் இரண்டு பெண் குழந்தைகள் உட்பட மூவர் படுகாயம் அடைந்த நிலையில் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இச் சம்பவம் நேற்றுமுற்பகல் 11.20 மணியளவில் முல்லைத்தீவு நட்டாங்கண்டல் பகுதியில் இடம்பெற்றது.




இவ் விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு பெண் குழந்தைகள் படுகாயம் அடைந்ததுடன் தாயார் மரணமடைந்தார்.

மோட்டார் சைக்கிளை செலுத்திய நபர் படுகாயம் அடைந்த நிலையில் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இதில் பனங்காமம் நட்டாங்கண்டல் பகுதியைச் சேர்ந்தவர்களான சந்திரகுமார் மகேஸ்வரி (வயது-40) என்பவர் மரணமடைந்ததுடன் சந்திரகுமார் தனுசியா (வயது-2), சந்திரகுமார் லதுசியா (வயது-1), சி.லவன் (வயது-35) ஆகியோரே படுகாயம் அடைந்தவர்களாவர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மணல் ஏற்றியவாறு உள் வீதியொன்றில் இருந்து பிரதான வீதிக்கு திரும்ப முற்பட்ட உழவு இயந்திரம் பிரதான வீதியால் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை மோதித்தள்ளியதாகக் கூறப்படுகிறது.

இவ்விபத்தில் மரணமடைந்தவரின் சடலம் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டு மரண விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்படும். (2-3-281)

# 50 கிலோ உப்பு மூடை ஒன்றின் விலை இரண்டு மடங்காக அதிகரிப்பு

### மாந்தை உப்பள நிர்வாகத்தை கண்டிக்கிறார் எம்.பி.நிர்மலநாதன்

மன்னார் மாந்தை உப்பள நிர்வாகம் நியாயமற்ற முறையில் உப்பின் விலையை அதிகரித்துள்ளதனால் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் நேற்று புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயம் வருமாறு,

இதுவரை காலமும் கருவாட்டுக்கு பாவிக்கும் 50 கிலோ நிறையுடைய உப்பு மூடை ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை வரை 800 ரூபாவாக இருந்தது. இந்நிலையில் மாந்தை உப்பள நிர்வாகம் திடீரென உப்பின் விலையை இரண்டு மடங்காக உயர்த்தியுள்ளமை நியாயமற்ற செயலாகும். அன்றாடம் கூலிவேலை செய்து வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் மக்களை உப்பின் விலை உயர்வு நேரடியாகவே பாதிக்கின்றது.

கடந்த30 வருடங்களாக யுத்தத்தால் பாதிக்கப்பட்டு மனதில் வடுக்களை சுமந்தவர்களாக வாழும் தமிழ் மக்கள் நல்லாட்சி அரசாங்கம் உருவாகிய பின் ஓரளவு பெருமூச்சும் விட்டு வரும் நிலையில் அவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் மாந்தை உப்பள நிர்வாகத்தின் விலை அதிகரிப்பை வன்மையாக கண்டிக்கின்றேன்.

விலை அதிகரிப்பு செய்யும் பொழுது மக்களை பாதிக்காத வகையில் செய்யவேண்டும். ஆனால் திடீரென இருமடங்காக உப்பின் விலையை அதிகரிப்பதென்பது ஏற்றுக் கொள்ள முடியாத விடயம். மாந்தை உப்பள நிர்வாகம் 850 ரூபாவால் உப்பின் விலையை உயர்த்தியுள்ளதை அடுத்து வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். இதுவரைகாலமும் 800 ரூபாய்க்கு விற்பனை செய்த உப்பு மூடை ஒன்றுக்கு மேலதிகமாக 850 ரூபாவாக விலையை அதிகரித்துள்ளது. இதன்படி ஆயிரத்து 650 ரூபாவாக விலையை தீர்மானித்துள்ளனர்.

மக்களை பாதிக்கும் குறித்த விலையேற்றத்தினூடாக உள்ளூர் மக்களின் தேவைகளை பொருட்படுத்தாது வெளியூர் மற்றும் வெளிநாடுகளுக்கு உப்பினை ஏற்றுமதி செய்ய கைத்தொழில் அமைச்சு முயற்சிப்பதாக தெரியவருகிறது.

மன்னார் மாவட்ட மக்கள் அதிகளவில் கடற்றொழிலை வாழ்வாதாரமாக கொண்டு வாழ்ந்து வருகின்றனர். இது தவிர கூலிவேலை செய்யும் குடும்பங்கள் உட்பட நடுத்தர வர்க்கத்தினையும் சேர்ந்த மக்களை பாதிக்கும் வகையில் விலை அதிகரிப்பு அமைந்துள்ளது. எனவே உப்பள நிர்வாகம்விலை அதிகரிப்பை மீள்பரிசீலனை செய்யவேண்டும். மக்களை பாதிக்காத வகையில் மலிவான விலையில் தரம் மிக்க உப்பினை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்என அந்த அறிக்கையில் தெரிவிக்கபட்டுள்ளது. (2-3-281)

# பெரும்போக நெற்செய்கையில் சந்தனக்கோரைத்தாக்கம் அதிகம்

### மன்னார் மாவட்ட விவசாயிகள் கவலை

மன்னார் மாவட்டத்தில் இம்முறை மேற்கொள்ளப்பட்டுள்ள பெரும்போக நெற்பயிர்ச் செய்கையில், கோரையின் தாக்கம் அதிகளவு காணப்படுவதாகவும் இதனால் நெற்பயிர்ச் செய்கை பாதிப்படைந்துள்ளதாகவும்விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 4 வருடங்களாக கோரையின் தாக்கம் காணப்பட்ட போதும், தற்போது இந்நிலைமை பன்மடங்கு அதிகரித்து காணப்படுவதாகவும் கோரையினத்தைச் சேர்ந்த சந்தனக் கோரையின் தாக்கமே இங்கு காணப்படுவதாகவும் விவசாயிகள் கூறுகின்றனர்.

இந்த சந்தனக் கோரையினைக் கட்டுப்படுத்துவதற்கு விவசாயிகள் பல்வேறு வகையான களை நாசினிகளைப் பயன்படுத்திய போதிலும் அவற்றைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இவை நெற்பயிர்ச்செய்கையின் வளர்ச்சியைத் தடுத்து வருவதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது அறுவடைக்கான காலம் நெருங்கியுள்ள நிலையில், இந்த கோரையின் தாக்கத்தால் அறுவடையின் சிறந்த பலனை அடைய முடியாதுள்ளதாக விவசாயிகள் மேலும் தெரிவிக்கின்றனர்.(2-281)

# மூளை முடக்குவாதத்தினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் கல்விச் செயற்பாட்டிற்கு முல்லையில் விசேட பாடசாலை

## புதுக்குடியிருப்பு கோம்பாவிலில் வைபவ ரீதியாக ஆரம்பிப்பு

முல்லை.மாவட்டத்தில் மூளை முடக்குவாதத்துடன் பிறந்த பிள்ளைகள் மற்றும் அதுபோன்ற பாதிப்புக்களையுடைய பிள்ளைகளுக்கான விசேட பாடசாலை, மோட்டிவோசன் மார்ட்டிவேஷன் Motivation நிறுவனத்தின் அனுசரணையுடன் மார்டப் MARDAP நிறுவனத்தினால் நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிலுள்ள கோம்பாவில் கிராம சேவையாளர் பிரிவில் காலை 9 மணியளவில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் செ.பிரணவநாதனினால் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப்பாடசாலையில் 5 வயதிற்கு மேற்பட்ட 18 வயதிற்கு உட்பட்ட மாற்றுவலுவுள்ள பிள்ளைகள் சேர்த்துக் கொள்ளப்பட்டு அவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அத்துடன் இத்திட்டத்தின் கீழ்,

விழிப்புணர்வை ஏற்படுத்துவதனூடாக மூளை முடக்குவாதம் மற்றும் அதுபோன்ற வலுவிழப்புடனான பிள்ளைகளுக்கு அணுகும் வசதியுடனான வாழ்க்கைச் சூழலை ஏற்படுத்தி குடும்பத்திலும், சமூகத்திலும் அவர்கள் உள்வாங்கப்படுதலையும் பங்குபற்றுதலையும் அதிகரிக்கச்செய்தல்.

மாற்றுவலுவுள்ள பிள்ளைகளுக்கான மருத்துவ முகாம் நடத்தி வலுவிழப்புக்களை இனங்கண்டு அவர்களுக்கான ஆதார உபகரணங்கள் அல்லது பொருத்தமான சக்கர நாற்காலிகள் மற்றும் மருத்துவச் சான்றிதழ்கள் வழங்குதல், இப்பிள்ளைகளினுடைய பெற்றோர்களுக்கு இப்பிள்ளைகளை சிறந்த முறையில் பராமரிப்பதற்குத் தேவையான உயர்தரப்பயிற்சிகளை வழங்கி பிள்ளைகள் சிறந்த முறையில் பராமரிக்கப்படுவதற்கான வசதிகளை ஏற்படுத்தல்.

இப்பிள்ளைகள் வாழ்கின்ற வீடுகளில் அவர்கள் தடைகளற்ற வகையில் சுதந்திரமாக நடமாடுவதற்கான சூழலையும் அணுகும் வசதிகளையும் செய்து கொடுத்தல்,



முல்லை.மாவட்டத்தில் 2 விசேட பாடசாலைகளை கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுகளில் புதிதாக ஆரம்பிப்பதுடன் மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகரம் மற்றும் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இயங்குகின்ற 2 விசேட பாடசாலைகளை வலுப்படுத்தல் போன்ற செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் செ.பிரணவநாதன் மற்றும் மதகுருமார்கள், கல்வி, சுகாதார திணைக்களத்தைச் சேர்ந்த அலுவலர்கள், மாவட்ட சமூக சேவை அலுவலர், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக சமூகசேவை அலுவலர், ஏனைய திணைக்கள அதிகாரிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் Motivation நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் பி.ஜே.சுதர்சன், சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், நலன் விரும்பிகள் பொதுமக்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இத்திட்டத்திற்கு, 3 வருடங்களுக்கு ஜேர்மனிய அரசின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஜொகனிட்டர் (JUH) நிறுவனத்தின் ஊடாக மோட்டிவேஷன் நிறுவனத்திற்கு நிதி உதவி வழங்குகின்றது. மோட்டிவேஷன் நிறுவனம் மார்டப் நிறுவனத்திற்கு நிதி வழங்குவதுடன், தொழில்நுட்ப உதவியையும் வழங்குகின்றது. எனினும் அக்காலப்பகுதியின் பின் இப்பாடசாலை தொடர்ந்து இயங்குவதற்கு தேவையான நிதி மற்றும் பௌதீக வளங்களை பெறவேண்டிய கடமைப்பாடும் உள்ளது. "அனைவருக்கும் கல்வி" என்ற மேலான எண்ணப்பாட்டுடன் இக்கல்விச் செயற்பாடு சிறப்புற நடைபெறுவதற்கான வழிவகைகளை கண்டறிந்து இப் பாடசாலை தொடர்ந்து நீடித்து நிலைத்து இயங்கக்கூடியவாறான உதவிகளை வழங்க வேண்டியது இப்பிரதேசத்தில் வாழ்கின்ற ஒவ்வொருவரதும் கடப்பாடாகும். (2-281)

# சுகாதாரமற்ற முறையில் இயங்கிய உணவகங்கள் மீது திடீர் சோதனை

## இரண்டு உணவகங்கள் சிக்கின



(திருமுறிகண்டி)

வவுனியாவில் சுகாதாரச் சீர்கேடான முறையில் இயங்கி வருகின்ற உணவகங்களை அடையாளம் காணும் நோக்கில் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இந் நடவடிக்கைநேற்றும் நேற்று முன்தினமும் வவுனியாவை அண்மித்த பகுதிகளில் இடம்பெற்றது.

இதன்போது இரண்டு உணவகங்களில் சுகாதார சீர்கேடான முறையில் உணவுகளைக்கையாளல், உணவுப்பொருட்களை பாதுகாப்பான முறையில் வைக்காமை, சுகாதார முறையில் குடிநீர் பேணப்படாமை போன்ற காரணங்களினால் உணவகங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது எனவும் எதிர்வரும் காலங்களில் சுகாதார முறைப்படி உணவகங்கள் இயங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சுகாதார பரிசோதகர்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க இருப்பதாகவும் அவர்கள்தெரிவித்தனர்.

இதேவேளை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உணவகங்களை பார்வையிட்டு நற்சான்றிதழ் வழங்கப்பட்ட பின்னரே உணவகங்கள் இயங்க முடியும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (2-3-311-17)

# தர்மபுரம் உப பொலிஸ் நிலையம் இன்று தரமுயர்த்தப்படுகிறது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தர்மபுரத்தில் இயங்கி வந்த உப பொலிஸ் நிலையம் பொலிஸ் நிலையமாக தரமுயர்த்தப்படவுள்ளது. பொலிஸ்மா அதிபர் என்.கே. இளங்கக்கோனின் பணிப்பிற்கு அமைய இன்று வியாழக்கிழமை காலை 9. 45 மணிக்கு தர்மபுரம் உப பொலிஸ் நிலையம் பொலிஸ் நிலையமாக தரமுயர்த்தப்பட்டு திறந்து வைக்கப்படவுள்ளது. (2-3-254)

# கனகபுரம் பால விநாயகர் ஆலயத்தில் அவதாரப் பெருவிழா இன்று

(கிளிநொச்சி)

மேல் மருத்துவர் சுயம்பு ஆதி பராசக்தி வழிபாட்டு மன்றத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி கனகபுரம் பால விநாயகர் ஆலயத்தில் நேற்றுக் காலை 8 மணியிருந்து 24 மணிநேரம் தொடர்ச்சியாக மூலமந்திரம் ஒலிக்கப்பட்டு இன்று வியாழக் கிழமை காலை 9 மணி முதல் பங்காரு அடிகளாரின் 76 ஆவது அவதாரப் பெருவிழா நிகழ்வு நடைபெறும். அதனைத் தொடர்ந்து பூசை வழிபாட்டில் கலந்து கொள்பவர்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கப்படும். (2)

# அரசாங்கம் தமிழ் அரசியல் கைதிகளை பிணையிலாவது விடுதலை செய்ய வேண்டும்

## யாழ்.பல்கலை. மாணவர் ஒன்றியம் கோரிக்கை

நல்லாட்சி அரசு தமிழ், சிங்கள மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமெனில் தமிழ் அரசியல் கைதிகளை பிணையிலாவது விடுதலை செய்ய வேண்டும் என யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இன, மதபேதமின்றி பொது அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து அரசியல் கைதிகளின் நல்வாழ்விற்கு ஒத்துழைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அவர்களுடைய அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 2015 ஜனவரி மாதத்திற்குப் பின் இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தின் பின்னர் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நல்லெண்ண சமிக்ஞை சிலவற்றை அரசு காட்டியிருந்தாலும் தமிழ் மக்களின் மனங்களை வெல்வதற்காக அரசு செய்ய வேண்டிய மேலும் பல விடயங்கள் உள்ளதை யாரும் மறுக்க முடியாது.

அந்த வகையில் தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினை என்பது தற்கால சூழ்நிலையில் மிகப்பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

அரசியல் கைதிகள் தொடர்பில் மிக விரைவில் தீர்வுத்திட்டம் ஒன்றினை வழங்குவதாக உறுதிபூண்ட அரசாங்கம் இதுவரை அரசியல் கைதிகள் விடயத்தில் கவனமெடுக்காமல் இருப்பது மிகவும் வருத்தமளிக்கின்றது.

நாட்டிலே கடந்த அரசாங்கங்களினால் தமிழர்களை ஒடுக்குவதற்காகத் திட்டமிட்டு கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஊடாக கைது செய்யப்பட்ட தமிழர்கள் பலர் காணாமற் போயுள்ள நிலையில் ஏனையோர் சிறைக் கூடங்களிலும் வாடுகின்ற நிலைமையே காணப்படுகின்றது.

அரசியல் கைதிகள் எனப்படுவோர் கடந்த இருபது வருடங்களிற்கு மேலாக சிறைகளிலே தாங்க கொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். அவர்களில் பலர்மேல் வழக்குகள் கூட தாக்கல் செய்யப்படாமல் சிறைக்கூடங்களில் தடுத்து வைத்திருப்பது ஒரு ஜனநாயக நாடு என்று தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் இலங்கைக்கு பொருத்தமானதா? என்ற சந்தேகம் எழுகின்றது.



மேலும் அரசியல் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களினது நிலைமையானது மிக மோசமானதாகவும், கவலைக்கிடமானதாகவும் இருக்கின்றது. அதே வேளை அரசியல் கைதிகள் பலர் தம் வாழ்நாளில் பெரும்பகுதியை சிறைகளிலேயே கழிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

அதுமட்டுமன்றி அவர்களின் குடும்பங்கள். குடும்பத்தலைவர்கள் இன்றி தம் வாழ்வாதாரத்தை இழந்த நிலையில் அயலவர்களிடம் கையேந்துகின்ற கையறு நிலைக்குத் தள்ளப்படுகின்றமையைப் பார்க்கும்போது மன வேதனை அடையாதவர்கள் யாரும் இருக்க முடியாது. எனவே இது தொடர்பாக அரசு கூடுதல் கரிசனை காட்டுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

எனவே நல்லாட்சி அரசு என தன்னை எடுத்தியம்பும் அரசு தமிழ், சிங்கள மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமெனில் அரசியல் கைதிகளுக்கு குறைந்த பட்சமான பிணையினையாவது வழங்கி அவர்களதும் அவர்களது குடும்பத்தினதும் தமிழ் சமூகத்தினதும் அபிமானங்களை வென்றெடுப்பதன் ஊடாகவே சுமுகமான ஜனநாயக ஆட்சியை மேற்கொள்ள முடியும்.

எனவே யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமாகிய நாம் வேண்டுவது யாதெனில்,அரசியல் கைதிகள் விடயத்தில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசியல் தலைவர்கள் அனைவரும் கூட்டாக இணைந்த நல்லெண்ணத்தைக் கட்டி யெழுப்பக்கூடிய தீர்வுத்திட்டத்தை முன்வைப்பதோடு குறைந்த பட்சம் அவர்களுக்கான பிணையினையாவது வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம்.

அத்தோடு அரசியல் கைதிகள் விடயத்தில் இன, மதபேதமின்றி பொது அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் ஒற்றுமையாக செயற்பட்டு அவர்களின் நல்வாழ்விற்கு ஒத்துழைக்குமாறு தாழ்மையுடன் வேண்டி நிற்கின்றோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

யாழ். கட்டுடை சைவ வித்தியாசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வித்தியாசாலை அதிபர் த.கடம்பானந்தன் மங்கல விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபன் கட்டடத்தினை நாடாவெட்டி திறந்து வைப்பதையும் மாணவர்களையும் படங்களில் காணலாம்.









வேதநாயகம் தபேந்திரனின் யாழ்ப்பாண நினைவுகள் பாகம் 2 நூல் அறிமுக விழா அண்மையில் மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது...





கொழும்பு பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட முத்தமிழ் விழா-2016 (சங்கமம் நிகழ்வானது) கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நிகழ்விற்கு விருந்தினராக புளொட் தலைவரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்துகொண்டிருந்தார். பல்கலைக்கழக மாணவ, மாணவிகளின் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டன.

# வாழ்க்கைக்கு கல்வி அவசியம்



**ம.ஜோன்சன்மரீன்**
ஆசிரியர்
மு/வன்னிவிளாங்குளம்
அ.த.க.பாடசாலை
மாங்குளம்.

"தாயின் கருவறையிலிருந்து இறங்கி கல்லறைவரை நடக்கும் தூரம்தான் மனித வாழ்க்கை"

இந்த குறுகிய காலப் பகுதிக்குள் தான் மனிதனின் எல்லா நாடகங்களும் அரங்கேற்றப்படுகின்றன. இக்காலப் பகுதியில் மனிதன் தேடி அலையும் செல்வங்கள் பல. அவற்றில் நிலையான செல்வமே கல்விச் செல்வமாகும். இதையே வள்ளுவன் குறிப்பிடும் போது,

**"கேடில் விழுச் செல்வம் கல்வி யொருவருக்கு**
**மாடல்ல மற்றயவை"**

*(குறள் 400)*

அதாவது கல்வியே அழிவு இல்லாத சிறந்த செல்வம். பிற எல்லாம் செல்வமே அல்ல எனக் குறிப்பிடுகிறார். இச் செல்வம் எம்மோடு நிலையாக கூடிவரும். இது இப் பிறப்பில் மட்டுமல்ல ஏழேழு பிறப்பிற்கும் எம்மை தொடரும்.

இதை வள்ளுவன் குறிப்பிடும் போது,

**"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவருக்கு**
**எழுமையும் ஏமாப்புடைத்து"**

*(குறள் 398)*

அதாவது ஒரு பிறப்பில் தான் கற்ற கல்வியானது அப்பிறப்புக்கு மட்டும் அல்லாமல் அவனுக்கு ஏழு பிறப்பிற்கும் உதவும் தன்மையுடையது எனக் குறிப்பிடுகிறார். இந் நிலையான செல்வத்தை தேடுவதைவிட்டு இன்றைய மனித வாழ்க்கையானது அற்பசொற்ப விடயங்களுக்கு ஆசைப்பட்டு அதற்கு பின்னால் வால் பிடிக்கும் வறட்டுத்தனமான மனிதர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கல்வியின் மகத்துவத்தை உணராது, அறியாது கற்கும் காலத்தை கைநழுவவிட்டுவிட்டு காலம் கழிய கவலைப்படும் மனிதர் பல எம் கண்முன் உளர்.

"கல்வியே எமது வாழ்க்கையின் சிறந்த முதலீடு" அதை அடைவதே எமது வாழ்க்கையின் குறிக்கோளாக இருக்க வேண்டும். அதைபெற்றுக்கொள்வதற்கு எத்தகைய நொண்டிச் சாட்டுக்களையும் நாம் அடுக்கக் கூடாது. இவ் உலகில் யாருக்கு துன்பமில்லை, யாருக்குக் கஷ்டமில்லை. இவ்வுலகில் குறைகள் இல்லாத மனிதன் கிடையாது. இன்பமும் துன்பமும் மனித வாழ்க்கையின் சக்கரங்களாகும். அவை கால மாற்றத்திற்கேற்ப மாறிக்கொண்டே போகும். ஆகவே கற்பதற்கு எந்தகைய சாட்டுக்களையும் முன்வைக்கக்கூடாது. இதனால் தான் மூத்தோர்கள் "பிச்சை புகினும் கற்கை நன்றே" எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

பாடசாலை வாழ்க்கையை பாழாக்கிவிட்டு பட்டுணர்ந்த மனிதர் பலர் இந்த பரணியில் உளர். இவர்களின் வாழ்க்கையின் அனுபவங்களை நாம் உள் வாங்கிக்கொள்ள வேண்டும். கல்வி மகத்துவத்தை உணரவேண்டும்.

**"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்**
**சாந்துணையுங் கல்லாதவாறு"**

*(குறள் 397)*

அதாவது கற்றவனுக்கு எல்லா நாடும் சொந்த நாடாம் எல்லா ஊரும் சொந்த ஊராம். இதைத் தெரிந்தும் ஒருவன் இறக்கும் வரை கூட படிக்காமல் இருப்பது ஏன்? என வள்ளுவனுக்கே இச் சந்ததி பற்றி சந்தேகம் எழுகின்றது.

இன்றைய உலகில் பலர் மனதில் குறிப்பாக இளைஞர்கள் மனதில் எழும் கேள்வி வாழ்க்கைக்கு பணம்இருந்தால்மட்டும்போதாதா? படிக்க வேண்டுமா? என்பதாகவே இருக்கின்றது. நாற்பணம் கையில் கண்டதும் கைப்பையை (பள்ளிபை) காமையில் தூரம் வீசி விடும் மூடர்களாக இன்றைய மாணவர்கள் உருவாகிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு தெரியவில்லை.

**"நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே**
**கல்லார்கண் பட்ட திரு"**

*(குறள் 408)*

அதாவது முட்டாள்களிடம் குவிந்த செல்வமானது நல்லவர்களை வாட்டும் வறுமையைவிட அதிகம் துன்பம் தருமென்று. செல்வம் என்பது அதன் பெயருக்கு ஏற்றாற் போல சொல்லாது சென்றுவிடும் அதன்மேல்ஆசைகொண்டு நிலையான செல்வத்தை (கல்வி) கை நழுவவிடக்கூடாது. வாழ்க்கை என்பது குறைவான தகவல்களை வைத்துக் கொண்டு சரியான முடிவெடுக்கும் ஒரு காலப் பகுதியாகும். ஆகவே சரியான காலப்பகுதியில் சரியான முடிவெடுக்க தெரிய வேண்டும். காலத்தை தவறவிட்டுவிட்டு மனம் நொந்து பயனென்ன. இதைத் தான் கூறுவார்கள் " வாழ்க்கை என்பது புரியாத போது தொடங்குகிறது புரிகின்ற போது அது முடிந்து விடுகிறது" என்று. நேரம் பொன்னானது. அதை மண்ணாக்க எத்தனிக்கக்கூடாது. சந்தர்ப்பங்கள் எங்களைத்தேடி வரும் வரை காத்திருக்காதீர்கள். சந்தர்ப்பங்களை உருவாக்குங்கள். (Don't wait for opportunity. Create it) இது கற்களை எண்ணி கணிதம் படிக்கும் காலம் அல்ல கணனியில் கணிதம் படிக்கும் காலம். வலிமையும் திறமையும் விடாமுயற்சியும் உள்ளவனே இவ்வுலகில் போட்டி போட முடியும். ஆகவே "ஓதுவதுதொழியேல்" என்ற ஔவையின் கூற்றிற்கிணங்க ஓதும் பழக்கத்திற்கு ஒரு நாளும் ஓய்வு கொடுக்காதீர்கள். எட்டிப்பிடிக்கும் தூரத்தில் வெற்றி இல்லை. அதை விட்டுவிடும் எண்ணமும் எனக்கில்லை என்ற வைராக்கியத்தை உங்கள் மனதுக்குள் வளர்த்துக் கொள்ளுங்கள். வறுமை உங்களை வாட்டினாலும் துன்பம் உங்களை துரத்தினாலும் கல்வியை கைவிடாதீர்கள். கற்றுக்கொண்டே இருங்கள்.

**விதைத்துக் கொண்டே இரு முளைத்தால் மரம் இல்லை எரு**

**(ஷே குவாரா)**

வாழ்ந்தாலும் ஏசும் தாழ்ந்தாலும் ஏசும் உலகம் இது. கற்கும் மனிதர்களை இச் சமுதாயம் பலவாறு தூற்றக் கூடும். சாகும் வயதில் படிக்கிறான் என்றும் காலத்தை வீணாக கரைக்கின்றான் என்றும் பலவாறு கிண்டலடிக்கும். ஏன்? கிரேக்க புகழ்பெற்ற தத்துவஞானிகளையே (அரிஸ்டாட்டில், பிளேட்டோ, சோக்கிரட்டீஸ்) "இருட்டறையில் கறுப்பு பூனையைத் தேடி அலையும் குருடர்கள்" என்று தூற்றிய உலகம் இது. நீங்கள் எம் மாத்திரம். "தூற்றுவார் தூற்றட்டும் போற்றுவார் போற்றட்டும் நீ உனது இலக்கை நோக்கி விரைந்து கொண்டே இரு"

**உங்களால் பறக்கமுடியாவிட்டால் ஓடுங்கள்**

**ஓட முடியாவிட்டால் நடந்து செல்லுங்கள்.**

**நடக்கவும் முடியாவிட்டால் தவழுங்கள்.**



இலக்குகளை நோக்கி சென்று கொண்டிருக்கிறீர்கள் என்பதே முக்கியமானது.

**(ஹிட்லர்)**

எம்மில் பலர் பரீட்சைக் காலங்களில் தொடர்ந்து தோல்விகளை சந்தித்துவிட்டால் துவண்டு விடுவதுண்டு. கல்வியில் மனம் வெறுத்துவிடுவதும் உண்டு. சாதனைகள் படைக்கவேண்டுமென்றால் சோதனைகளைத் தாண்டித் தான் செல்ல வேண்டும். இன்று நம் மத்தியில் புகழின் உச்சியில் இருக்கும் பல விஞ்ஞானிகள், சாதனையாளர்களின் வாழ்க்கையை புரட்டிப்பார்த்தால் எத்தனை சோதனை, எத்தனை வேதனை. இவற்றை கடந்துதான் சாதனைகள் படைத்தார்கள். இதனால் இன்றும் நீங்காது எங்கள் நெஞ்சில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், வாழுவார்கள். எல்லோருக்கும்தோமஸ்அல்வா எடிசன் மின்குமிழை கண்டுபிடித்தார் என்பதுதான் நம்மில் பலர் அறிவர். இச்சாதனை எத்தனை சோதனைகளை தாங்கி வந்தது என்பதை நம்மில் எத்தனை பேர் அறிவர்.

**"என்ன நடந்தாலும் எதை இழந்தாலும்**
**சோர்ந்து போகமாட்டேன் காரணம்**
**நான் 100 வெற்றிகளை பார்த்தவன் அல்ல**
**நான் 1000 தோல்விகளை பார்த்தவன்"**
**(தோமஸ் அல்வா எடிசன்)**

என்ற எடிசனின் கூற்றே சான்று.

ஆகவே கல்லுங்கள், கற்றுக் கொண்டே இருங்கள். அதில் ஐயம் எதுவும் வேண்டாம். ஆனால் நீங்கள் கற்ற கல்வி உங்களையும், உங்கள் சமுதாயத்தையும், உங்கள் நாட்டையும் வாழ வைக்கும் கல்வியாக இருக்கவேண்டும். கவிஞர் வைரமுத்து கூறியதைப் போன்று "கையொப்பம் இடத் தெரிந்த மரங்களை உருவாக்குவதாக உங்கள் கல்வி அமைந்துவிடக் கூடாது" "கற்றோம் என்பதைவிட நாம் அனுபவத்தை பெற்றோம் என்பது தான் சிறந்தது" என அனுபவக் கல்வியின் தந்தை ரூஷோ குறிப்பிட்டுள்ளதை மறந்துவிட முடியாது.

ஆகவே ,

**வலியோடு போராடினால் தான் ஒரு பெண் தாயாக முடியும்.:.. இருளோடு போராடினால்தான் புழு வண்ணத்துப்பூச்சியாக முடியும்... மண்ணோடு போராடினால் தான் விதை மரமாக முடியும்...**

**வாழ்க்கையோடு போராடினால்தான்**

**நீ வரலாறு படைக்க முடியும்...**

**எனவே வாழ கல்லுங்கள் வாழ்வை வெல்லுங்கள்.**

## தீவிரவாதிகள் தாக்குதல் ஜெனரல் உட்பட 6பேர் பலி

(பக்தாத்)

ஈராக் இராணுவ தலைமையகம் மீது ஐ.எஸ். தற்கொலைப் படையை சேர்ந்தவர் நடத்திய தாக்குதலில் இராணுவ ஜெனரல் மற்றும் 5 வீரர்கள் உயிரிழந்தனர்.

ஈராக்கின் ஹதீதா நகரில் இராணுவ தலைமையகம் அமைந்துள்ளது.

நேற்று முன்தினம் ஐ.எஸ். தற்கொலைப்படையை சேர்ந்த தவீரவாதிகள் 4 பேர் இங்கு ஊடுருவியுள்ளனர்.

இதில் ஒருவன் பிரிகேடியர் ஜெனரல் அலி அபோட் அலுவலகத்தில் ஊடுருவி, தனது உடலில் கட்டியிருந்த குண்டுகளை வெடிக்க செய்துள்ளான்.

ஏனைய 3 தீவிரவாதிகளும் தலைமையகத்துக்குள் ஊருடுவி வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்துள்ளனர்.

இந்த தற்கொலைப்படை தாக்குதல் சம்பவத்தில் பிரிகேடியர் ஜெனரல் அலி அபோட் மற்றும் 5 வீரர்கள் கொல்லப்பட்டனர். மேலும் 7 வீரர்கள் காயமடைந்தனர். (இ)

# நவீன மிதக்கும் கப்பல் துறைமுக மேடையை கடற்படையில் முதன்முறையாக இணைத்த சீனா


(பீஜிங்)

சீனா தனது கடற்படையை நவீனப்படுத்தும் முயற்சியாக மிதக்கும் கபறதுறைமுக மேடை ஒன்றை முதன முறையாக அறிமுகப்படுத்தியுள்ளது.

இதனால் கடற்கரையில் இருந்து அதிக தொலைவில் கடலுக்குள் இருக்கும் சேதமடைந்த போர் கப்பல்களை சீர் செய்திட முடியும் என அந்நாட்டின் மக்கள் விடுதலை இராணுவ செய்தி நிறுவனம் நேற்று தகவல் தெரிவித்துள்ளது.

வெளிப்புற உதவியின்றி சுய சார்புடன் இயங்கும் திறன் கொண்ட இதனை குறித்த தகவலில், ஹுவாசுவான் நகரின்முதல்த்தர துறைமுகம், பழுதடைந்த கப்பல்களை மிக குறைந்த காலத்தில் வேகமுடன் சீர் செய்து போர்த் திறனுடன் கடற்படைக்கு திருப்பி அனுப்பும்பணியை திறம்பட செய்யும்.

அதனுடன்போர்நடைபெறும்இடங்களுக்கு செல்லும் வகையில் இந்த துறைமுகம் வடிவமைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.



அந்த மிதக்கும் துறைமுகத்தின் உள்ளே போர் கப்பல் ஒன்று இருப்பது போன்ற புகைப்படம் ஒன்றை வெளியிட்டுள்ள செய்தி நிறுவனம், எங்களது கடற்படையின் சேதமடைந்த மிக பெரிய கப்பல்களை கடற்கரையில் இருந்து கடலுக்குள் அதிக தொலைவில் கொண்டு செல்லும் திருப்புமுனையான பணியை மேற்கொள்ளும் அடையாளம் ஆக இந்த கப்பல் தொடக்க திட்டம் உள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

இந்த கப்பலின் பயன் என்னவெனில், சிறிய அளவில் சேதமுற்ற கப்பல்களை பணியில் இருந்து விடுவிக்க வேண்டியதுமில்லை.

அதேவேளையில், அதிக சேதமடைந்த கப்பல்களை ஷிப்யார்டிற்கு (கப்பல் கட்டும் தளம்) திருப்பி அனுப்ப வேண்டியதுமில்லை என தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கப்பலானது போர்க் கப்பல்கள், எதிரிக் கப்பல்களை தாக்கி அழிக்கும் கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கி கப்பல்கள் ஆகியவற்றை கையாளும் திறன் படைத்தது.

அத்துடன் 2 மீற்றர் உயரம் கொண்ட கடல் அலைகளை எதிர் கொள்ளும் திறனும் கொண்டது. ஆனால் விமானந்தாங்கி கப்பல்களை இது சரி செய்வதில்லை.

சர்ச்சைக்குரிய தென்சீன கடல், இந்துமகா சமுத்திரம் மற்றும் பசுபிக் பெருங்கடல் ஆகிய கடல் வழி பகுதிகளில் வளர்ச்சி அடையும் நோக்கங்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் தனது உள்நாட்டு ஆயுத தொழிற்சாலையை மேம்படுத்துவதற்காக கோடிக் கணக்கான நிதியை சீனா முதலீடு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)




## பேஸ்புக் நிறுவனத்தின் துணைத் தலைவர் கைது

பிரபல சமூக வலைத்தளமான பேஸ்புக் நிறுவனத்தின் துணைத் தலைவர் டியாகோ சோடன் (Diego Dzodan) பிரேஸில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். பேஸ்புக் நிறுவனத்தின் இலத்தீன் அமெரிக்க பிரிவின் துணைத்தலைவரான இவர், போதை பொருள் விற்பனை தொடர்பாக பேஸ்புக் நிறுவ்னத்தின் வட்ஸ் எப் மெசெஞ்சர் ஊடாக பரிமாற்றப்பட்ட தகவல்களை பொலிஸாருக்கு வழங்க மறுத்த குற்றசாட்டிலேயே கைது செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில், கொள்கையின் அடிப்படையில் தனக்கு அந்த தகவல்களை வழங்க முடியாது என டியாகோ சோடன் கைது செய்யப்பட்ட பின்னர் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார். அதேவேளை இக்கைது தொடர்பில் பேஸ்புக் நிறுவனம் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது. (இ)

## சீனாவில் நிதி மோசடி வழக்கில் 24 பேருக்கு சிறைத் தண்டனை

(பீஜிங்)

சீனாவில் தனியார் நிதி நிறுவனங்கள் கவர்ச்சிகரமான திட்டங்கள் மூலம் அதிக முதலீடுகளை பெற்று நிதி மோசடியில் ஈடுபட்டு வருவதாக தொடர் புகார்கள்எழுந்தன.

இதை தொடர்ந்து போலீசார் தனிப்படை அமைத்து இது குறித்து விசாரணை தொடங்கினர்.

அப்போது பல்வேறு நிதி நிறுவனங்கள் இணையம் மூலமாகவும் நேரடியாகவும் போலியான அறிவிப்புகள் மூலம் அதிக முதலீடுகளை பெற்று மோசடியில் ஈடுபட்டிருப்பது தெரியவந்தது.

குவாங்டங் மாகாணத்துக்கு உட்பட்ட தனியார் நிறுவனம் ஒன்று தங்கள் நிறுவனத்தில் முதலீடு செய்தால், 47 சதவீதம் கூடுதலாக திருப்பி தருவோம் என்ற போலி வாக்குறுதி மூலம் நிதி திரட்டி மோசடியில் ஈடுபட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த நிறுவனத்தில் 2 இலட்சத்து 30 ஆயிரம் பேர் முதலீடு செய்திருப்பதாக தெரிகிறது. அதில் அதிகமானோர் மூத்த குடிமக்கள் ஆவர்.

இதனை தொடர்ந்து பொலிஸார் அந்த நிறுவனத்தை சேர்ந்த 24 பேரை கைது செய்தனர். இந்த வழக்கை விசாரித்த குவாங்சூ இடைநிலை மக்கள் நீதிமன்றம் மோசடியின் முக்கிய குற்றவாளியாக கருதப்படும் ஜியாங்ஹாங் வேய் என்பவருக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பு அளித்தது.

மற்ற 23 பேருக்கும் தலா 3 ஆண்டுகள் முதல் 14 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது. மேலும் அவர்களது சொத்துகள் முழுவதும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. (இ)

# சுரங்கத்தில் பழைய கார்களின் குவியல்





(லண்டன்)

இங்கிலாந்து நாட்டில், கைவிடப்பட்ட சுரங்கம் ஒன்றில் குவியல் குவியலாக பழைய கார்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை மிகவும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

சுரங்கத்திற்குள் நூற்றுக்கும் அதிகமான கார்கள் எப்படி வந்தது என்பது புரியாத புதிராக இருக்கிறது.

இங்கிலாந்தின் வேல்ஸ் பகுதியில் கடந்த 1836 ஆம் ஆண்டு திறக்கப்பட்ட கனிம சுரங்கம் ஒன்று, கடந்த 1960 இல் மூடப்பட்டது. இந்த சுரங்கத்தை அந்நாட்டை சேர்ந்த ஆய்வாளர்கள் அண்மையில் சென்று பார்த்தார்கள்.

ஆய்வுக் குழுவில் இடம்பெறறிருந்தவர்களில் ஒருவரும் மென்பொருள் வல்லுநருமான 31 வயதாகும் கிரிகோரி ரிவோலெட் சுரங்கப்பயணத்தை பற்றி கூறுகையில்,

“கைவிடப்பட்டு 55 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால், சுரங்கத்திற்குள் செல்வது மிகுந்த ஆபத்தை தருவதாக இருந்தது.

சுரங்கத்தின் மேற்புறத்தில் இருந்த கற்கள் தலையில் விழும் ஆபத்து இருந்தது. மேலும், இருட்டும் வழுக்குத் தரையும் ஆபத்தை அதிகப்படுத்தின.

இருந்தாலும் சுரங்கத்திற்குள் ஏதாவது அதிசயம் இருக்கிறதா? என்பதை பார்த்துவிட வேண்டும் என்ற ஆவலில், தரையிலிருந்து 65 அடி ஆழத்திற்கு சரிவாக செல்லும் அந்த சுரங்கத்திற்குள் இறங்கினோம்.

கடும் கஷ்டத்தை எதிர் கொண்டு சுரங்கத்திற்குள் சென்றபோது, முடிவில் குளம் போல் நீர் தேங்கியிருந்தது.

அத்துடன், அங்கு நூற் றுக்கும் அதிகமான பழைய கார்கள் குவியல் குவியலாக கிடந்தன.

கார்கள் இங்கு எப்படி வந்தது என்பது எங்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அங்கு இருந்த கார்கள் 45 ஆண்டுகளுக்கும் பழைமையான வகைகளாக இருக்கின்றன.

சுரங்கத்திற்குள் கார்களை பார்த்ததும், அங்கு அதுதொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டோம். அங்கு சுமார் 4 மணிநேரத்தை செலவிட்டோம்,” என்று கிரிகோரி கூறினார். (இ)

# 5 லீற்றர் கசிப்புடன் இளைஞன் கைது

(கரணவாய்)

வடமராட்சி-முள்ளிப் பகுதியில் 5 லீற்றர் கசிப்பு வைத்திருந்த இளைஞன் ஒருவரை நெல்லியடிப் பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர்.

கடந்த மாதம் முள்ளிக்காட்டுப் பகுதியில் கசிப்புக்குகை ஒன்றை பொலிஸார் முற்றுகையிட்டபோது அதில் தொடர்புடைய நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டதுடன் இருவர் தப்பிச் சென்றனர்.

இவ்வாறு தப்பிச் சென்றவர்களில் ஒருவரே நேற்று முன்தினம் 5 லீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(இ-5-60)

# தொழிற்பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையானது யாழ்ப்பாண மாவட்டத்தில்தற்கால வேலைவாய்ப்பினை மையமாகக் கொண்டு முழுநேர மற்றும் பகுதிநேர தொழிற்பயிற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக தேசியதொழில் தகைமை (NVQ) முறைக்கமைய நீர்க் குழாய் பொருத்துநர் கற்கைநெறி ஆரம்பிக்கவுள்ளதால் விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு இவற்றுக்கான பதிவுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இக்கற்கை ஆனைக்கோட்டை தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது. இக் கற்கைநெறி தேசியதொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும். இக்கற்கை நெறிகள் கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், முதலாம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் (077 469 6780) எனும் முகவரியில் எதிர்வரும் 09.03.2016 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டவை என இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையின் யாழ்ப்பாண உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ

# அந்தோனியார் ஆலய திருவிழா

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை குருசடித்தீவு தூய அந்தோனியார் ஆலயத் திருவிழா இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

நாளை 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருச்சிலுவைப் பாதைத் தியானம் மற்றும்திருப்பலி என்பன இடம்பெறும்.

நாளை மறுதினம் 5 ஆம் திகதி சனிக்கிழமை நற்கருணை விழாவும் மறுநாள் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருவிழாவும் இடம்பெறும்.

தினமும் மாலை 4.30 மணிக்கு திருச்செபமாலையுடன் வழிபாடு ஆரம்பமாகவுள்ளது.

திருநாள்திருப்பலி அன்று காலை 6.30 மணிக்கு திருச்செபமாலையும் காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும் இடம்பெறும்.

திருவிழாவிற்குவரும்பக்தர்களுக்கு அதிகாலை 5.30 மணியிலிருந்து படகு சேவைகள் பண்ணை வீதியிலிருந்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என ஆலய பங்குத்தந்தை அறிவித்துள்ளார். (இ-5)

# உலக பணக்காரர்கள் பட்டியல் பில்கேட்ஸ் தொடர்ந்தும் முதலிடம் அம்பானிக்கு 36 ஆவது இடம்



(வோஷிங்டன்.)

உலக பணக்காரர்கள் பட்டியலில் தொடந்து முதலிடத்தை மைக்ரோசொப்ட் நிறுவனரான பில்கேட்ஸ் தன்வசப்படுத்தியுள்ளார்.

இந்த பட்டியலில் இந்தியாவின் முகேஷ் அம்பானி 36 ஆவது இடம் வகிக்கிறார்.

2016 ஆம் ஆண்டுக்கான உலகப் பணக்காரர்கள் பட்டியலை அமெரிக்காவின் பிரபல போர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

இப்பட்டியலில் கடந்த ஆண்டு 1,826 பேர் இடம் பெற்றிருந்த நிலையில், இந்த ஆண்டு 1,810 பேராக குறைந்துள்ளது.

இப்பட்டியலில் தொடர்ந்து 3 ஆவது ஆண்டாக மைக்ரோசொப்ட் நிறுவனர் பில்கேட்ஸ் சுமார் 75 பில்லியன் டொலர் சொத்து மதிப்புடன் முதலிடம் பிடித்துள்ளார்.

இவரது சொத்து மதிப்பு கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4.2 மில்லியன் டொலர் குறைந்துள்ளது. இருப்பினும் தொடர்ந்து பில்கேட்ஸ் முதலிடத்தில் ஆதிக்கம் செலுத்தி வருகிறார்.

பில்கேட்ஸை தொடர்ந்து 2 ஆவது மற்றும்3 ஆவது இடங்கள் முறையே அமென்சியோ ஒர்வேகாவும், வாரன் பபெட்டும் இடம் பிடித்துள்ளனர்.

கடந்த ஆண்டு 16 ஆவது இடம் வகித்த பேஸ்புக் நிறுவனர் மார்க் கர் ஜுகர்பெர்க் கிடுகிடுவென முன்னேறி இந்த ஆண்டு 6 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

இப்பட்டியலில் இடம்பெற்றுள்ள இந்தியாவை சேர்ந்த 84 பில்லியனர்களில், முகேஷ் அம்பானி முதலிடம்பிடித்துள்ளார். மொத்த பட்டியலில் 36 ஆவது இடம் பிடித்துள்ள இவரின் சொத்து மதிப்பு 62.2 பில்லியன் டொலர்களாகும். (இ)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் ம.கஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சம்பத் வங்கி வடபிராந்திய முகாமையாளர் ப.சங்கர் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ். நாவாந்துறை வித்தியாலய பழைய மாணவியும் யாழ்.நாவாந்துறை றோ.க.த.க.பாடசாலை ஓய்வுபெற்ற பிரதி அதிபரான திருமதி கௌரி கணேசலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். பரிசில்களை திருமதி தங்க ராணி சங்கர் வழங்கவுள்ளார். (இ-5)

# நிர்வாகத் தெரிவு

வடமராட்சி புலோலி தென் மேற்கு கந்த முருகேசனார் முன் பள்ளியின் 2016 ஆம் ஆண்டுக்குரிய முகாமைத்துவ குழு உறுப்பினர் தெரிவு முன் பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.தில்லைநாதன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றபோது நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய தலைவராக பா.அரியதாஸ் தெரிவு செய்யப்பட்டதுடன் உபதலைவராக மு.ஜெகதேவனும் செயலாளராக பி.மதுராந்தகியும் உப செயலாளராக திருமதி ஜெ.தங்கலதாவும் பொருளாளராக திருமதி நா.வனிதாவும் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் நிர்வாக சபை உறுப்பினர்களாக திருமதி த.வினோதினி, திருமதி அ.ரேணுகா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் ஆலோசகராக பா.இரகுநாதனும் கணக்காய்வாளராக திருமதி பா.யசோதாவும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-5-60)

# மங்கல விழா

(யாழ்ப்பாணம்)

ஆன்மீக குரு அருட்திரு அம்மாவின் 76 ஆவது அவதாரப் பெரு மங்கல விழா எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வேல் மருவத்தூர் சுயம்பு அருள் மிகு ஆதி பராசக்தி வார வழிபாட்டு மன்றத்தில்நடைபெறவுள்ளது. (இ-5)

# செங்கை ஆழியானுக்கு ஜனாதிபதி இரங்கல்

இலங்கையின் தமிழ் இலக்கியத் துறையின் சிறந்த ஆளுமைமிக்க படைப்பாளியும் மூத்த எழுத்தாளருமான கந்தையா குணராசா எனும் செங்கையாழியானின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைகிறேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

நம்நாட்டின் இலக்கியத்துறையின் மிகவும்உயர்ந்த விருதான சாஹித்திய ரத்னா விருதினை 2009 ஆம் ஆண்டில்பெற்றுக்கொண்ட இவர் இலங்கையின் தமிழ் இலக்கியத்துறையின் வளர்ச்சிக்கும் அதனுடைய தொடர்ச்சியான நிலைத்திருத்தலுக்கும் 1960 ஆம் ஆண்டு முதல் பல்வேறு பரிமாணங்களில் தன்னுடைய படைப்புக்களை வழங்கி வந்துள்ளார்.

அத்தோடு மாணவர்களுக்கு அவசியமான பல காத்திரமான நூல்களை எழுதியிருப்பதும் உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

கந்தையா குணராசா ஓர் எழுத்தாளராக இலக்கியத்துறைக்கு பெரும்பணியாற்றியதுடன் தமிழ்ச் சமூகத்திற்காகவும் அரச சேவையாளர் என்ற வகையில் அர்ப்பணிப்புடன் பணியாற்றியுள்ளார்.

இலங்கையின் தமிழ் இலக்கியத் துறைக்கும் அரச சேவைக்கும் கந்தையா குணராசா ஆற்றிய ஒப்பற்ற பணிகளை நான் பாராட்டுவதுடன், அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (இ

# நடைபாதைக் கடைகள் நகரசபையால் அகற்றல்

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் அனுமதியின்றி நீண்டகால மாக இயங்கி வந்த 4 நடைபாதை பழக்கடைகள் நேற்று முன்தினம் அகற்றப்பட்டதுடன் அங்கிருந்த பழங் களும் நகர சபைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

நகராட்சி மன்றத்தின் தொழில் நுட்ப அத்தியட்சகர் செ.விசாகன் தலை மையிலானவருமானபரிசோதகர்கள் அடங்கிய குழுவினராலேயே மேற்படி கடைகள் அகற்றப்பட்டன.இது தொடர்பாகதொழில் நுட்ப அத்தியட்சகர் செ.விசாகன் தெரிவிக் கையில்,

சாவகச்சேரி நகராட்சிமன்ற பொதுச் சந்தை வட மாகாணத்திலே மிகவும் விசாலமான சந்தையாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஒத்துழைப்புடன் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இச் சந்தைத் தொகுதியில் அனைத்து வியாபாரங்களுக்குமுரிய இட வசதிகள் ஒழுங்குசெய்யப்பட்டது. ஆனால்சில பழ வியாபாரிகள் தமது வியாபாரங் களை நடைபாதையில்மேற்கொண்டு வந்தனர்.

இவ் வியாபாரங்கள் நிறுத்தப்பட வேண்டுமென வியாபாரிகளுக்கு பல அறிவித்தல்கள் நகராட்சிமன்றத்தினால் விடுக்கப்பட்டும் எந்தவொரு வியாபாரியும் இது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை. இதனையடுத்தே கடைகளை அகற்றுவது தொடர்பில் நகராட்சி மன்றம் நடவடிக்கைகளை நேற்று முன்னெடுத்திருந்தது.

எனவே இனிவரும் காலங்களில் அனுமதியற்ற முறையில் நடை பாதை வியாபாரத்தில் எவரும் ஈடுபடக்கூடாது எனவும் இதனை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-5-89)

# சிவராத்திரியை முன்னிட்டு விசேட பேருந்துச் சேவை

## ஆசனப் பதிவுகளை மேற்கொள்ளலாம்

(கரணவாய்)

மஹா சிவராத்திரியை முன்னிட்டு எதிர்வரும்7 ஆம் திகதி திங்கட்கிழமை பருத்தித்துறையில் இருந்து திருக்கேதீஸ்வரம் வரையிலான இ.போ.ச. விசேட பேருந்துச் சேவைகள் இடம்பெறவுள்ளதாக இ.போ.ச. பருத்தித்துறைச் சாலை முகாமையாளர் கே.கந்தசாமி அறிவித்துள்ளார்.

அன்றைய தினம் அதிகாலை 5 மணியில் இருந்து பேருந்துச் சேவைகள் இடம்பெறவுள்ளன.

ஆசன முற்பதிவுகளை செய்ய விரும்புவோர் நாளைவெள்ளிக்கிழமை முதல் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை பருத்தித்துறை சாலையில் முற்பதிவுகளை மேற்கொள்ள முடியுமென சாலை முகாமையாளர் மேலும் அறிவித்துள்ளார். (இ-5-60)

# போர்க்களமான அகதிகள் முகாம்

இஸ்ரேல் இராணுவ வீரர்கள் தவறுதலாக பாலஸ்தின அகதிகள் முகாமுக்குள் நுழைந்தனர். இதனை அடுத்து அங்கு மோதல் ஏற்பட்டது. இந்த மோதலில் ஒருவர் கொல் லப்பட்டார்.

இந்த சம்பவம் குறித்து இஸ்ரேல் இராணுவம் கூறியதாவது, இரவில் தொலைபேசி வழி காட்டியை பயன்படுத்தி தங்கள் இடத்திற்கு செல்ல முயன்ற இரண்டு இஸ்ரேல் இராணுவ வீரர்கள் தவறுதலாக எல்லை தாண்டி மேறகு கரையில் இருக்கும் பாலஸ் தின அகதி முகாமிற்குள் சென்று விட்டனர்.

அப்போது இரு தரப்பிற்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இந்த மோதலில் 22 வயது பாலஸ்தின இளைஞர் கொல்லப்பட்டார். மேலும்





15 பேர் காயம் அடைந்தனர்.

மேலும் தங்கள் வீரர்களை காணாததால் இஸ்ரேல் இராணுவம் அவர்களை தேடியது.

பின்னர் அவர்கள் அகதி முகாமிற்குள் இருப்பதை அறிந்து அவர்களை மீக இஸ்ரேல்இராணுவம்சென்றுள்ளது என்று கூறியுள்ளார்.(இ)

# வெளிவிவகார அமைச்சை மறுசீரமைக்க உதவிகள்

## சிங்கப்பூர் அரசு விருப்பம்



இலங்கை அரசாங்கம் மறுசீரமைக்கப்பட்டுள்ளமையால் சிங்கப்பூர் அரசாங்கம் இலங்கைக்கு உதவிகளை வழங்குவதற்கு முன்வரவுள்ளதாக சிங்கப்பூரின் வெளிவிவகார அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சை மறுசீரமைப்புடன் செய்வதற்கான திறன் கட்ட உதவிகளை வழங்குவதற்கு சிங்கப்பூர் முன்வரவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதம், சிங்கப்பூர் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு வந்திருந்ததுடன் வெளிவிவகார அமைச்சின் மனித வள முகாமைத்துவம் மற்றும் திட்டங்கள் குறித்து விளக்கங்களைப் பெற்றுக்கொண்டிருந்தார்.

இதன் பின்னரே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இலங்கை அரசாங்கத்தால் கோரப்படவுள்ள உதவிகளையும் சிங்கப்பூர் அரசாங்கம் செய்வதற்கு தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ)

# நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-02.03.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 142.71 | 146.76 |
| பவுண்ட் | பிரிட்டன் | 198.43 | 205.33 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 154.07 | 160.25 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 142.09 | 148.04 |
| டொலர் | கனடா | 105.64 | 109.93 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 102.18 | 107.00 |
| டொலர் | சிங்கப்பூர் | 101.34 | 105.23 |
| ரூபா | இந்தியா | 2.1242 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.7566 |
| குவைத் | டினார் | 478.3473 |
| ஓமான் | ரியால் | 373.8331 |
| கட்டார் | ரியால் | 39.5272 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3737 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1813 |

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 50 | 70 | 60-80 | 60 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 50 | 65 | 70 | 60 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 110 | 120 | 120 | 150 | 100 |
| தக்காளி | 30 | 30 | 25 | 30 | 40 | 50 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 35 | 40 | 50 | 50 | 40 |
| கோவா | 50 | 50 | 50 | 60 | 60 | 60 | 40 |
| கரட் | 100 | 120 | 150 | 150 | 120 | 160 | 120 |
| பூசணி | 40 | 40 | 35 | 60 | 50 | 60 | 70 |
| புடோல் | 40 | 40 | 20 | 60 | 60 | 60 | 50 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 | 40 | 60 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 100 | 60 | 50 | 80 | 80 | 60 |
| பெரிய வெங்காயம் | 50 | 80 | 50 | 60 | 70 | 80 | 70 |
| பாகற்காய் | 100 | 100 | 80 | 80 | 80 | 120 | 70 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 60 | 50 | 60 | 120 | 70 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 50 | 80 | 80 | 100 | 80 |
| பயற்றங்காய் | 60 | 80 | 50 | 70 | 80 | 80 | 100 |
| லீக்ஸ் | 80 | 120 | 90 | 100 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 40 | 60 | 50 | 40 | 40 | 80 | 80 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 | 120 | 120 | 150 | 100 |
| முருங்கைக்காய் | 500 | 250 | 250 | 240 | 400 | 400 | 300 |
| போஞ்சி | 60 | 100 | 40 | 60 | 70 | 120 | 80 |
| கத்தரிதம்புள்ள | 50 | 30 | 50 | 60 | — | 60 | 40 |
| கீரை - 1பிடி | 40 | 10 | 15 | 30 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 50 | 30 | 50 | 60 | 60 | 40 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 25-35 | 50 | 40 | 35-45 | 40 |
| இராசவள்ளி | 140 | 100 | 100 | 150 | 120 | 120 | 150 |
| வெங்காயப்பூ | 80 | 50 | 80 | 60 | 60 | 100 | 40 |
| முள்ளங்கி | 20 | 30 | 30 | 40 | 60 | 80 | 20 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 20 | 30 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 50 | — | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## 'வயர்லெஸ்' கருவிகளை ஒப்படைக்க எம்.ஜி.ஆர்.உத்தரவு 120

அதன்படி தமிழீழ விடுதலைப்புலி இயக்கத்தைச் சேர்ந்த 2 பேர் சென்னை நகர பொலிஸ் கமிஷனர் அலுவலகத்துக்குப் பச்சை நிற மாருதி வேனில் வந்தனர். அவர்களிடம் பொலிஸ் அதிகாரி வயர்லெஸ் கருவிகளை ஒப்படைத்தார். அவர்கள் அதைப் பெற்றுக்கொண்டு சென்றனர்.

**உண்ணாவிரதம் கைவிடப்பட்டது**

அதன்பிறகு உண்ணாவிரதத்தைப் பிரபாகரன் கைவிடப் போவதாகத் தெரிவித்தார்.

அப்போது அங்கு பிரபாகரனைச் சந்திக்கச் சென்றிருந்த திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி.வீரமணி அவருக்குப் பழச்சாறு கொடுத்து உண்ணா விரதத்தை முடித்து வைத்தார்.

**பேட்டி**

மாலை 4.35 மணிக்கு உண்ணா விரதம் முடிந்ததும் பிரபாகரன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தபோது கூறியதாவது:-

ராமேஸ்வரம் வேதாரண்யம், மல்லிப்பட்டினம் (தஞ்சை) ஆகிய இடங்களில் இருந்து கைப்பற்றப்பட்ட 8 தகவல் தொடர்பு கருவிகளைப் பொலிசார் ஒப்படைத்துள்ளனர்.

எங்களைப் பொலிஸ் கண்காணித்து வந்ததையும் வாபஸ் பெற்றுள்ளனர். இதைத் தொடர்ந்து உண்ணா விரதத்தை முடித்துக் கொண்டேன்.

**தமிழகத்துக்கு எதிராக அல்ல**

சமீப காலமாகப் பொலிசார் நடந்து கொண்ட முறை சரியல்ல. அதைப் பொறுத்துக்கொண்டு இருந்தோம்.

தகவல் கருவிகளைக் கைப்பற்றியதால் தான் வெறுப்பான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டோம். சட்ட விரோதமாகக் குடியேறி, சட்ட விரோதமான காரியத்தை நாங்கள் செய்வது போலத் தமிழக மக்கள் மத்தியில் தவறான எண்ணத்தை இந்த நடவடிக்கை ஏற்படுத்துகிறது.

தமிழீழ மக்களின் பிரதிநிதிகளாக, விருந்தாளிகளாகத்தான் இங்கு வந்தோம். கௌரவிக்கப்பட்டோம். நாங்கள் தமிழ்நாட்டுக்கு எதிராக ஆயுத போராட்டம் நடத்த வந்தவர்கள் அல்ல. பொலிஸ் எடுத்த நடவடிக்கை, எங்களது இனத்திற்கு ஏற்பட்ட அவமானமாகக் கருதுகிறோம்.

**ஆயுதப் போராட்டம்**

இலங்கையில் மனித தன்மையற்ற ஆட்சிதான் நடந்து வருகிறது. அப்படி இருக்கும் போது அகிம்சை வழியில் நடத்தி விடுதலை பெற முடியாமு. ஆயுதம் ஏந்தி போராடித்தான் விடுதலை பெற வேண்டும். அந்த நம்பிக்கையில்தான் இருக்கிறோம்.

ஜெயவர்த்தனவின் அகிம்சை தத்துவத்தில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. ஒவ்வொரு நாளும் தமிழ் மக்கள் அழிந்து கொண்டு இருக்கிறார்கள். இன்றைக்குக் கூட 10 பேர் தலையில் குண்டு விழுந்திருக்கிறது. இந்த நிலையில் அகிம்சை வழியை எப்படிக் கடைப்பிடிப்பது?

எங்களது மக்களுக்கு எது அடிப்படை தேவையோ அந்த விடயத்தில் உறுதியாக நிற்போம். அதேவேளையில் இந்திய அரசின் நல்லெண்ண முயற்சிகளுக்கு எப்போதும் ஆதரவு கொடுப்போம். சமரசப் பேச்சு வார்த்தைக்கு எதிராக இருக்க மாட்டோம். ஆனால் எங்களது மக்கள் விரும்பாத முடிவுகளை எப்போதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

இவ்வாறு பிரபாகரன் கூறினார்.

ஆயுதத்தைத் திரும்ப கேட்பீர்களா?

அடுத்த நடவடிக்கையாக பொலிசார் கைப்பற்றிய ஆயுதங்களைத் திரும்பப் பெறப் போராடுவீர்களா என்று நிருபர்கள் கேட்டதற்குப் பிரபாகரன் கூறியதாவது:-

இந்த விடயத்தில் வெளிப்படையாக நடந்துகொள்ள நாங்கள் விரும்பவில்லை. அது அவர்கள் எடுக்க வேண்டிய முடிவு.

இந்த நடவடிக்கைகள் மத்திய அரசினாலா, மாநில அரசினாலா என்றெல்லாம் எங்களுக்குத் தெரியாது. ஏனெனில்; நாங்கள் இன்னொரு நாட்டைச் சேர்ந்தவர்கள். இதற்கு மேல் எனக்கு விளக்கம் கொடுக்கத் தெரியவில்லை.

யார் காரணமாக இருந்தாலும் தவறு என்று தான் சொல்கிறோம். அதே நேரத்தில் இதை யார் செய்தார்கள் என்று கண்டு பிடிக்கும் காரியங்களில் நாங்கள் இறங்கவில்லை.

இவ்வாறு பிரபாகரன் கூறினார்.

அப்போது திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் வீரமணி, விடுதலைப்புலி இயக்க ஆலோசகர் ஆண்டன் பாலசிங்கம் ஆகியோர் உடன் இருந்தனர்.

**வீரமணி பேட்டி**

பிரபாகரன் உண்ணா விரதம் பற்றி வீரமணி நிருபர்களிடம் கூறியதாவது:-

இந்த உண்ணாவிரதப் போராட்டம் அகிம்சைக்குக் கிடைத்த வெற்றியல்ல. தமிழக மக்களின் உணர்வுகளுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

இந்த நடவடிக்கைக்குப் பொறுப்பு மத்திய அரசா, மாநில அரசா என்று கண்டு பிடிக்க வேண்டும்.



(தொடரும்)

# அனைத்து தென்னாசிய நாடுகளுக்கும் இலங்கையே பாலமாக அமைகின்றது

## டில்லியில் சந்திரிகா பெருமிதம்



(கொழும்பு)

**இலங்கையே அனைத்து தென்னாசிய நாடுகளுக்கும் பாலமாக அமைகின்றது. அது அனைத்து நாடுகளுடனும் சிறந்த உறவைப் பேணி வருகிறது என்று இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

நிகழ்வு ஒன்றுக்காக நேற்று முன்தினம் டில்லிக்கு சென்றுள்ள அவர், தமது ஆரம்ப உரையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான முறுகலை, தென்னாசிய நாடுகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பே தடுத்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உலகளாவிய பொருளாதார வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது தென்னாசிய பொருளாதார ஒருங்கிணைப்பு மிகவும் தாமதத்துடன் நகர்கிறது.

இந்த நிலையில் தென்னாசிய நாடுகளுக்கு இடையில் புரிந்துணர்வும் ஒத்துழைப்பும் பலப்படுத்தப்பட வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பிராந்திய சுற்றாடல் மற்றும் தேசிய பாதுகாப்பு என்ற விடயங்களில் ஒவ்வொரு நாடும் ஏனைய நாடுகளுக்கு உதவியளிக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இலங்கையை பொறுத்த வரையில் அது அனைத்து தென்னாசிய நாடுகளுக்கும் பாலமாக அமைகிறது. அது அனைத்து நாடுகளுடனும் சிறந்த உறவைப்பேணி வருகிறது என்றும் சந்திரிகா தெரிவித்துள்ளார். (இ)

# இராணுவத்தின் பலத்தை குறைப்பதாக மங்கள அமெரிக்காவில் உறுதியளிப்பு



(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் பலத்தை குறைப்பதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர உறுதியளித்தார் என சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை இராணுவப் படையின் பலம் 37 வீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளது. மேலும் பலம் குறைக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் வாரங்களில் வடக்கில் 600 ஏக்கர் காணி உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

வடக்கு, கிழக்கில் படையினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் ஹோட்டல்களில் சில, சிவிலியன்களிடம் ஒப்படைக்கப்படும்.

பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு பதிலாக வேறு மாற்று உத்தேச சட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டம் விரைவில் நீக்கப்படும். இலங்கையின் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் படையினரை 37 வீதத்தினால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மங்கள சமரவீர அமெரிக்காவில் கூறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் இராணுவப் பலத்தை குறைக்குமாறு அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் கோரியிருந்தார் என சிங்களப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, படையினரின் பலத்தை குறைப்பது உள்ளிட்ட இந்த தகவல்கள் பற்றி வெளிவிவகார அமைச்சரோ அமைச்சின் அதிகார பூர்வ பேச்சாளர்களோ இதுவரையில் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# நேர்மையாக பணியாற்றியதால் பதவி நீக்கம் - லெசில் டி சில்வா

நேர்மையான முறையில் பணியாற்றியதற்காகவே தான் பதவிநீக்கம் செய்யப்பட்டதாக பாரிய மோசடிகள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் முன்னாள் செயலாளர் லெசில் டி சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தில் இடம்பெற்ற பாரிய ஊழல்கள் மற்றும் மோசடிகள், குறித்து விசாரிப்பதற்காக புதிய அரசாங்கத்தில் ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று செயற்படுகின்றது.இந்த ஆணைக்குழுவின் செயலாளராக நேற்று முன்தினம் வரை லெசில் டி சில்வா என்பவர் கடமையாற்றியிருந்தார்.

இந்நிலையில் திடீரென ஜனாதிபதி செயலாளர் பீ.பி. அபேகோனின் ஒப்பத்துடன் அனுப்பப்பட்டுள்ள கடிதமொன்றின் மூலம் லெசில் டி சில்வா பதவி விலக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட லெசில் டி சில்வா, தான் நேர்மையாகப் பணியாற்றியதற்கான பரிசாக பதவி நீக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

கடந்த அரசாங்கத்தின் மோசடிகள் தொடர்பான விசாரணைகளில் தான் அர்ப்பணிப்புடன் செயற்பட்டதாகவும், அவ்வாறிருக்கையில் பதவி நீக்கமானது தனக்கு அதிர்ச்சியளிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கிடையே முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தொடர்பில் ஆதாரமற்ற ஒரு தகவலை பரப்பி, ஊடகப் பிரபலம் தேட முயன்றதன் காரணமாகவே லெசில் டி சில்வாவின் பதவி பறிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# இடமாற்றத்தின் போது அலுவலகப் பொருட்களை எடுத்துச் சென்ற பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி

நவகமுவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, இடமாற்றம் பெற்றுச் சென்ற போது காற்றுச் சீராக்கி மற்றும் நாற்காலி போன்றவற்றை எடுத்துச் சென்றுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நவகமுவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கடந்த 26 ஆம் திகதி பயன்படுத்திய நாற்காலியையும், 29 ஆம் திகதி அறையில் பொருத்தப்பட்டிருந்த காற்று சீராக்கி ஆகியவற்றையும் எடுத்துச் சென்றுள்ளார்.

நவகமுவ பொலிஸ் நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரி ஆலோக பண்டார சேனாநாயக்க என்பவரே இவ்வாறு காரியாலயத்தில் பொருத்தப்பட்டிருந்த காற்றுச் சீராக்கியை சிலரைக் கொண்டு அகற்றிச் சென்றுள்ளார்.

கடந்த 25 ஆம் திகதி குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்.

இதேவேளை, இந்த விடயம் குறித்து உத்தியோக பூர்வமாக முறைப்பாடு செய்தால் விசாரணை நடத்தப்பட முடியும் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாற்காலி மற்றும் காற்றுச் சீராக்கி எடுத்துச் செல்லப்பட்டமை குறித்து புதிதாக பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள நவகமுவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மஞ்சுள டி சில்வா இதுவரையில் எவ்வித முறைப்பாட்டையும் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## இன்று ஒரு தகவல்

### நாம் ஆட்சி செய்வோம்

தங்களைத் தாங்கள் ஆளத் தெரியாதவர்களாக இருந்து கொண்டு குடும்பத்தையும் அலுவலகத்தையும் ஊரையும் உலகத்தையும் ஆள முயல்வது எவ்வளவு பேதமைத்தனம்!

நாம் நம்மை ஆள்வது என்பது வேறு ஒன்றுமல்ல. நம்முடைய உள்மனம் ஒன்று சொல்ல, புறமனம் ஒன்று சொல்லாமல் இரண்டும் ஒன்றுபட்டுப் போவதே நம்மை நாம் ஆள்வது.

உள்மனத்துக்கும் புறமனத்திற்கும் இடையே எப்போதும் போராட்டம் இருக்குமானால் செய்வதறியாது திகைத்து நின்று சோம்பித்திரிய வேண்டியதுதான்.

இன்னும் தெளிவாகக் கூறவேண்டுமானால் உணர்ச்சிகள், உள்ளுணர்வுகள் நம்மை ஆளக்கூடாது. நாம்தான் அவற்றை ஆளவேண்டும்.

கட்டுப்பாடற்ற நம் உணர்வுகள் நம்மையும் நம்மைச் சுற்றியிருப்பவர்களையும் மிகவும் பாதிக்கின்றன.

மிதமிஞ்சிய உணர்வு நிலைகள் உடல் நிலையைப் பாதிக்கின்றன என்பது மருத்துவம் கூறும் மறுக்கவியலா உண்மை.

இவற்றை உணர்ந்தும் நாம் உணர்ச்சி வசப்படுவானேன்?

மிதமிஞ்சிய மகிழ்ச்சி, அடக்கவியலா வருத்தம், எல்லையில்லாக் கவலை, கட்டுப்பாடில்லாக் கோபம், என்ன செய்கிறோம் என்றறியவியலாப் பழிவாங்கும் உணர்ச்சி ஆகியவை, புயற்காற்றில் சிக்கிய இலவம் பஞ்சென நம்மை ஆட்டிப் படைக்கின்றன.

இது அவசியம்தானா?

எப்போதெல்லாம் உணர்ச்சிகள் நம்மை ஆட்டிப் படைக்கின்றனவோ, அப்போதெல்லாம் நமக்கு நாமே பகையாகிறோம் என்ற எண்ணம் மேலோங்க வேண்டும்.

முதலாவதாக, உணர்ச்சிகள் உச்சக் கட்டம் ஏற்படக் காரணமாயிருக்கும் இடத்திலிருந்து ஒரு விநாடி கூடத் தாமதமின்றி வேறிடத்திற்கு மாற வேண்டும்.

நான் சுய கட்டுப்பாட்டிற்குள் தான் இருக்கிறேன் "என்னை என்னால் ஆளமுடியும்" ஆகிய இரு தாரக மந்திரங்களையும் விரைந்து சொல்லிப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அவற்றை ஏதோ இயந்திர மயமாகச் சொல்லிக் கொண்டிராமல் உணர்ந்து சொல்ல வேண்டும்.

அப்படிச் சொல்லும் போது தன்னம்பிக்கையின் தொனி தெறித்து விழவேண்டும். இரண்டாம் நினைப்புக்கு இடம் கொடுக்கவே கூடாது.

அப்புறம் எங்கும் எதிலும் உங்கள் ஆட்சிதான்!

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

1373

# எறும்புக்குப் பயந்த அரசர்!





கடியூர் நாட்டு அரசர், போர் என்று கேட்டாலே பயந்து நடுங்குபவர்.

இதுவரை, ஒரு நாள்கூட அவர் வாளெடுத்து வீசியதில்லை.

ஈட்டி, கேடயம் என்றால் என்னவென்றே அவருக்குத் தெரியாது.

எறும்புகடிக்கே பயந்தவர் என்றால் பாருங்களேன். அரண்மனைக்குள் ஒரு எறும்பைப் பார்த்து விட்டால் போதும். காவலனைக் கூப்பிட்டுக் கேள்வி மேல் கேள்வி கேட்பார்.

"யாரங்கே? எறும்புக்குப் பதிலாக, உன்னைக் கீழே படுக்க வைத்து நசுக்கி விடுவேன்" என்று மிரட்டுவார்.

எறும்புகளைச் சித்திரவதை செய்து, உடனடியாகக் கொல்லச்சொல்லிக் கட்டளையிடுவார்.

இல்லையேல், காவலனை வேலையை விட்டு அனுப்பி விடுவார்.

கடியூர் நாட்டு மன்னனின் இந்த இழிவான செயலைக் கண்டு, எறும்புகள் எதிர்த்து நிற்க விரும்பின.

ஒருநாள் அவை ஒன்று கூடித், தங்களது ராணியிடம் புகார் செய்தன.

மறுநாள், எறும்புராணி தலைமையில் லட்சக்கணக்கான எறும்புகள் அரண்மனைக்குப் படையெடுத்து வந்தன.

சாரை சாரையாக வந்த எறும்புக் கூட்டத்தைப் பார்த்து, காவலர்கள் பதறினார்கள். கோட்டையின் வாயிலை மூடி வைத்தார்கள். கதவுக்குக் கீழிருந்த சந்து வழியாக எறும்புகள் கோட்டைக்குள் நுழைந்தன.

அவை படை வீரர்களைப் போல அணிவகுத்து நின்றன. அங்கிருந்த காவலர்களைக் கடித்து வைத்தன.

அரசனுக்கு அடங்காத கோபம். பாதாள அறை சிங்கத்துக்கு எறும்புகளை இரையாக்கச் சொன்னார்.

எறும்புகளை மண்வாரியால் அள்ளி, காவலர்கள் சிங்கத்தின் கூண்டில் வீசினர். எறும்புகள், சிங்கத்தை மொய்த்துக் கடித்தன. சிங்கத்தைச் சாகடித்தன.

அடுத்ததாகப் பட்டத்து யானைகளை அரசர் அவிழ்த்துவிடச் சொன்னார்.

எறும்புக்கடி தாங்காமல் பட்டத்து யானைகள் பிளிறி ஓடின. எறும்புகளைக் கொல்ல மந்திரிகள் ஒன்றுகூடிச் சென்றார்கள்.

எறும்புகள் மந்திரிகளைக் கடித்து வைத்தன. அதைப் பார்த்து அச்சப்பட்ட அரசர், அரண்மனைக்குள் கட்டிய தெப்பத்தில் குதித்தார். இடுப்பளவு தண்ணீர் இருந்த இடம் பார்த்துப் பாதுகாப்பாக நின்று கொண்டார். "அரசரைக் காப்பவருக்கு ஆயிரம் பொற்காசுகள் பரிசாக வழங்கப்படும்." என்று நாட்டு மக்களுக்கு முரசறிவிக்கச் சொன்னார்.

**(தொடரும்)**



03.2016

03

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1575 - இந்தியாவின் மொகலாயப் பேரரசர் அக்பர் வங்காளப் படைகளைத் தோற்கடித்தார்.
- 1833 - அகிலத்திரட்டு அம்மானையின்படி, நாராயணனின் அவதாரமாக அய்யா வைகுண்டர் திருச்செந்தூரில் பிறந்தார்.
- 1857 - பிரான்சும் ஐக்கிய இராச்சியமும் சீனா மீது போரை அறிவித்தன.
- 1878 - ஒட்டோமான் பேரரசின் கீழ் பல்கேரியா விடுதலை அடைந்தது.
- 1905 - ரஷ்யாவின் இரண்டாம் நிக்கலாஸ் மக்கள பிரதிநிதிகளைக் கொண்ட சபையை (டூமா)வை ஏற்படுத்த இணங்கினான்.
- 1918 - முதலாம் உலகப் போரில் ரஷ்யாவின் பங்களிப்பை முடிவுக்குக் கொண்டுவர ஜேர்மனி, ஆஸ்திரியா மற்றும் ரஷ்யா ஆகியன உடன்பாட்டிற்கு வந்தன.
- 1923 - டைம் இதழின் முதல் பதிப்பு வெளியிடப்பட்டது.
- 1938 - சவுதி அரேபியாவில் எண்ணெய் கண்டு பிடிக்கப்பட்டது.
- 1939 - மும்பாயில் மகாத்மா காந்தி ஆதிக்கவாதிகளுக்கு எதிராக உண்ணாநோன்பை ஆரம்பித்தார்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: முன்னர் நடுநிலையாக இருந்த பின்லாந்து அச்சு நாடுகளுக்கெதிராக போரை அறிவித்தது.
- 1969 - நாசாவின் அப்பலோ 9 விண்ணில் ஏவப்பட்டது.
- 1971 - இந்தோ-பாகிஸ்தான் போர் ஆரம்பமானது.
- 1974 - லூத்தரன் சபைகளுல் சில கத்தோலிக்க திருச் சபையில் இணைந்தன.
- 1991 - சோவியத் ஒன்றியத்திலருந்து பிரிந்து செல்ல ஆதரவாக லாத்வியாவின் 74% மக்களும் எஸ்தோனியாவின் 83% மக்களும் வாக்களித்தனர்.
- 1992 - பொஸ்னியா என்ற நாடு உருவாக்கப்பட்டது.
- 2002 - சுவிட்சர்லாந்து ஐ.நாவில் இணைவதற்கு ஆதரவாக சுவிட்சர்லாந்தில் மக்கள் வாக்களித்தனர்.

**பிறப்புக்கள்**

- 1839 - ஜாம்ஷெட்ஜி டாடா, இந்தியத் தொழிலதிபர் (இ. 1904)
- 1845 - கியார்கு கேன்ட்டர், கணிதவியலாளர் (இ. 1918)
- 1847 - அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல், கண்டுபிடிப்பாளர் (இ. 1922)
- 1867 - பாண்டித்துரைத் தேவர், தமிழறிஞர் (இ. 1911)
- 1935 - அன்புமணி, ஈழத்து எழுத்தாளர் (இ. 2014)
- 1941 - பங்காரு அடிகளார் இந்திய ஆன்மீக குரு
- 1950 - திக்குவல்லை கமால், ஈழத்து எழுத்தாளர்.
- 1955 - கணபதி கணேசன், தமிழ் இதழியலாளர் (இ. 2002)

**இறப்புக்கள்**

- 1703 - ராபர்ட் ஹூக், ஆங்கிலேய அறிவியலாளர் (பி. 1635)
- 1707 - ஔரங்கசீப், மொகலாயப் பேரரசர் (பி. 1618)
- **1996 - சி. சிவஞானசுந்தரம், சிரித்திரன் ஆசிரியர்.**
- 1999 - ஜேராட் ஹேர்ஸ்பேர்க், நோபல் பரிசு பெற்ற வர் (பி. 1904)

### சி. சிவஞானசுந்தரம்



சி. சிவஞானசுந்தரம் மார்ச் 3, 1996 ஆம் ஆண்டு பிறந்தார். சுமார் 45 ஆண்டுகளாக இலங்கையில் கேலிச் சித்திரத்துறையில் தனது ஆளுமையைச் செலுத்தியவர்.

பல்லாயிரக்கணக்கான சித்திரங்களைத் தீட்டியுள்ளார். அவர் 1964 ஆம் ஆண்டில் தொடங்கிய சிரித்திரன் என்ற மாத இதழ் அவரது மறைவு வரை ஏறத்தாழ 32 ஆண்டு காலம் தொடர்ந்து வெளிவந்து சாதனை படைத்தது.

யாழ்ப்பாணம், கரவெட்டியில் பிறந்த சிவஞானசுந்தரத்தின் தந்தை இலங்கையின் முதலாவது அஞ்சல் மாஅதிபர் வி. கே. சிற்றம்பலம்.

சுந்தரைக் கட்டிடக்கலை கற்பதற்கு இந்தியாவுக்கு அனுப்பினார் தந்தை. தந்தையின் விருப்புக்கு மாறாக அங்கு கார்ட்டூன் கலையைக் கற்றுக்கொண்டு ஒரு கேலிச்சித்திர விற்பன்னராக நாடு திரும்பினார்.

ஆரம்பத்தில் தினகரன், வீரகேசரி, மித்திரன் நாளிதழ்களில் கேலிச் சித்திரங்கள் வரைய ஆரம்பித்தார். அன்றைய தினகரனில் வெளிவந்த சவாரித்தம்பர் கார்ட்டூன் மிகப் புகழ்பெற்றது.

# ஜனாதிபதி மைத்திரியை விமர்சனம் செய்யும் சு.க.எம்.பிக்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை

(கொழும்பு)

**ஜனாதிபதியும் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேனவை விமர்சனம் செய்யும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.**



கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் இது குறித்து கொழும்பு பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் சட்ட ரீதியாக தேசிய அரசாங்கம் என்ற கோட்பாட்டில் செயற்பட்டு வருகின்றது.

எனவே கட்சி என்ற ரீதியில் எடுக்கப்படும் அனைத்து தீர்மானங்களையும் கட்சியின் உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியமானது.

அவ்வாறு ஏற்றுக்கொள்வதில் சிரமங்கள் இருந்தால் கட்சியை விட்டு விலகிச் செல்ல முடியும்.

மாறாக கட்சிக்குள் அங்கம் வகித்துக் கொண்டு கட்சியை விமர்சனம் செய்வது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல.

நாடாளுமன்றில் கூட்டு எதிர்க்கட்சியுடன் இணைந்து கட்சியின் செயற்பாடுகளை குழப்பும் சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என பெயர் குறிப்பிட விரும்பாத கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் தெரிவித்துள்ளார். (இ)

# ஆட்டோவும் ஆடுகளும் பொலிஸாரிடம் அகப்பட்டன

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி அல்வாய் திக்கம் பகுதிகளில் கடந்த சில நாட்களில் திருடப்பட்ட ஆடுகள் நெல்லியடி பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையில் மீட்கப்பட்டதுடன் ஆடுகளை திருடிய நால்வர் கொண்ட குழுவும் ஆட்டோ ஒன்றும் பொலிஸாரிடம் அகப்பட்டது.

நெல்லியடிப் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கை ஒன்று நேற்றைய தினம் கொடிகாமம் வீதியில் இடம்பெற்றபோது ஆட்டோ ஒன்றில் நான்கு பேர் மூன்று ஆடுகளை கொண்டு செல்வதை அவதானித்தனர்.

இதேவேளை பொலிஸாரைக் கண்டதும் ஆட்டோ திரும்பிச் சென்றது. இதனை அவதானித்த பொலிஸார் ஆட்டோவை துரத்திச்சென்று சாமியன் அரசடிப்பகுதியில் வைத்து இடைமறித்தனர். பொலிஸார் விசாரணைகளை நடத்திய போது தாம் ஆடுகளை வாங்கிச் செல்வதாக தெரிவிக்கப்பட்டது.

எனினும்சந்தேகம்கொண்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தியபோதே ஆடுகள் திருடிச் செல்லப்படுவது தெரியவந்தது. இதனையடுத்து அந் நால்வரையும் பொலிஸார் கைது செய்ததுடன்ஆடுகளையும்பொலிஸ்நிலையம் கொண்டு சென்றனர்.

இதனைத் தொடர்ந்து இந் நால்வரிடமும்நடத்தியபொலிஸார் மேலதிகவிசாரணையின்போது 5 ஆடுகள் திருடப்பட்டது தெரியவந்தது.

இதன் பின்னர் காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஏ. றஞ்சிதமாசிங்கா, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜபார் ஆகியோர் ஆடுகள் கட்டப்பட்டிருந்த இடத்திற்கு சென்று 5 ஆடுகளையும் மீட்டு பொலிஸ் நிலையம் கொண்டு வந்தனர். இது தொடர்பிலான விசாரணைகள் தொடர்ந்து இடம் பெற்று வருவதாக நெல்லியடிப்பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி பியந்த தெரிவித்துள்ளார். (இ-5-60)

# விஞ்ஞானிக்கு ஜனாதிபதியின் உதவி

மாவத்தகம பிரதேசத்தில் குறைந்த வருமானத்தில் வாழும் குடும்பம் ஒன்றில் பிறந்தபோதிலும் தனது அதீத தொழில்நுட்ப ஆர்வத்தின் பயனாக தானாகவே ரொக்கெட் தயாரிப்பில் ஈடுபட்டு பரீட்சார்த்தங்களையும் மேற்கொண்டுள்ள திவங்க நிரஞ்சன் எனும் இளைஞனுக்கு ஜனாதிபதியின் உதவி கிட்டியுள்ளது.

Sky Touch – 01 Rocket எனும் பெயரில் தான் உருவாக்கியுள்ள 18 கி.மீ பயணிக்கக்கூடிய தொழில்நுட்பம் கொண்ட ரொக்கெட் பரீட்சார்த்தம் பற்றி குறித்த இளைஞன் அண்மையில் தகவல் வெளியிட்டுள்ள நிலையில் இது குறித்து ஆராய்ந்து அவருக்குத் தேவையான வசதிகளையும் உதவிகளையும் செய்து தரும்படி அதிகாரிகளைப் பணித்துள்ளார் ஜனாதிபதி.

இதனடிப்படையில் இராணுவத்தின் தொழில்நுட்பப் பிரிவின் உதவியும் ஒத்துழைப்பும் குறித்த இளைஞனுக்குக் கிடைக்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 650

Search for people, places and things Nagendram Home

### தேகமலா



"இந்த உலகமே உன்னை திரும்பிப் பார்க்க வேண்டுமென்றால் நீ யாரையும் திரும்பி பார்க்காதே..."
-ஹிட்லர்-

### காயா




### சங்கர்

உலகத்தில் ரொம்ப கஷ்டமான 4 விடயம் என்னன்னு தெரியுமா?

1.பாம்பு வாய்க்கு லிப்ஸ்டிக் போடுறது.


2.எறும்பை பிடித்து கிஸ் பண்றது

3. யானையை மடியில் வைத்து கொஞ்சுறது.


4.கொசுக்கு டிரஸ்போடுறது.

எவ்வளவு கஷ்டம் என்றுசெய்து பாருங்க தெரியும்...

### அனு அனுஜன்




### உஷாந்தன் நெய்மாறன்




### அபி ரேக்கா

பொண்ணு வீட்டு காரங்க பேஸ்புக் ல இருக்கீங்களானு கேக்குறாங்க..!



முதல்ல டி-ஆக்டிவேட் பண்ணனும்.இல்லேனா ஆபத்து!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கூட்டுக் கலந்துரையாடல்

# அமெரிக்க- இலங்கை உறவை பலப்படுத்தும் முக்கிய வாய்ப்பு



அமெரிக்க - இலங்கை கூட்டுக் கலந்துரையாடலானது இலங்கையை புதிய திசை நோக்கிப் பயணிப்பதற்கும் இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான உறவைப் பலப்படுத்துவதற்கான ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளது.

**இவ்வாறு Daily Signal ஊடகத்தில் Lisa Curtis எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதனை மொழியாக்கம் செய்துள்ளார் நித்தியபாரதி.**

இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, 'அமெரிக்க- இலங்கை முதலாவது கூட்டுக் கலந்துரையாடலில்' கலந்துகொள்வதற்காக வோஷிங்டனுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார்.

கடந்த 40 ஆண்டுகளில் முதன் முதலாக அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஒருவர் இலங்கைக்கான தனது முதலாவது பயணத்தை கடந்த மே மாதம் மேற்கொண்டிருந்தார். அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி இலங்கைக்கு மேற்கொண்டிருந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க பயணத்தின் போதே 'அமெரிக்க- இலங்கை கூட்டுக் கலந்துரையாடல்' தொடர்பாக அறிவிக்கப்பட்டது.

மகிந்த ராஜபக்ஷ கடந்த ஆண்டு ஜனவரி மாதம் அவரது ஜனாதிபதி பதவியிலிருந்து நீக்கப்பட்டு புதிய ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்தே அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு மீண்டும் நெருக்கமடைந்தது. இதன் பயனாகவே ஜோன் கெரியின் இலங்கைக்கான பயணமும் அமைந்தது.

அமெரிக்காவின் ஐ.நாவுக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி சமந்தா பவர் கடந்த நவம்பரிலும், அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான கீழ்நிலைச் செயலர் தோமஸ் சானோன் கடந்த டிசெம்பர் நடுப்பகுதியிலும் மற்றும் பல்வேறு அமெரிக்க அதிகாரிகளும் இலங்கைக்கு மேற்கொண்ட பயணங்களைத் தொடர்ந்தே வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் வோஷிங்டனுக்கான தனது பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

உள்நாட்டில் இன நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கான வாக்குறுதியுடனேயே கடந்த ஆண்டு மைத்திரிபால சிறிசேன இலங்கை ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். 2009 இல் தமிழீழ விடுதலைப் புலிகள் போரில் தோற்கடிக்கப்பட்ட பின்னர், மகிந்த ராஜபகஷ அதிகாரத்துவ ஆட்சியை மேற்கொண்டிருந்தார். மைத்திரியின் தேர்தல் வெற்றியானது இலங்கையில பல ஆண்டுகளாக நடைமுறையிலிருந்த அதிகாரத்துவ ஆட்சி மாற்றமுறுவதற்கு வழிகோலியது.

மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் ஊடக சுதந்திரம், நீதிச் சேவைகளில் தலையீடு மற்றும் பரவலான பாரபட்சங்கள் போன்றன இடம்பெற்றன. மைத்திரி ஆட்சிப் பொறுப்பெடுத்து ஐந்து மாதங்களின் பின்னர், நாடாளுமன்றமானது நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இரண்டு தடவைகளுக்கு மட்டுப்படுத்தக் கூடிய மற்றும் நாடாளுமன்றைக் கலைப்பதற்கான ஜனாதிபதியன் அதிகாரத்தை மட்டுப்படுத்துவதற்கும் நீதிச் சேவை மற்றும் பொலிஸ் போன்றவற்றுக்கான சுயாதீன ஆணைக் குழுக்களை உருவாக்கி அரசியல் சபையை மீளச் செயற்படுத்துவதற்கான திருத்தங்கள் 19 ஆவது வரையில் மேற்கொள்ளப்பட்டது. இது இலங்கையின் ஜனநாயகத்தில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது.

கடந்த ஓகஸ்ட் மாதம் இலங்கையன் பொதுத் தேர்தல் இடம்பெற்றது. இத்தேர்தலின் மூலம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்று பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டார். இதன்மூலம் இலங்கையில் மறுமலர்ச்சி மற்றும் நல்லிணக்கம் ஏற்படுவதற்கான நம்பகத்தன்மை உருவாக்கப்பட்டது.

இதற்கப்பால், போருக்குப் பின்னரான மீளிணக்கப்பாடு மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பான மீறல்கள் மீதான விசாரணையை வலியுறுத்தும் விதமாக கடந்த செப்ரெம்பரில் நிறைவேற்றப்பட்ட ஐ.நா தீர்மானத்தை மைத்திரி-ரணில் கூட்டு அரசாங்கம் ஏற்றுக்கொண்டது.

இத்தீர்மானத்திற்கு இலங்கை இணை அனுசரணை வழங்கியதானது இந்நாட்டின் மனித உரிமைகள் தொடர்பான திருப்புமுனையாக அமைந்துள்ளதாகவும் இத்தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றுவதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்கள் இவ்வளவு ஆண்டுகளாகக் காத்திருக்கும் உண்மை மற்றும் நீதி போன்றன கிடைக்க வழி வகுக்கப்படும் எனவும் அனைத்துலக மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் குறிப்பிட்டது.

நல்லாட்சி, அபிவிருத்தி ஒத்துழைப்பு, மக்களுடனான உறவுகள் போன்றவற்றை முதன்மைப்படுத்தும் இலங்கை மற்றும் அமெரிக்க கூட்டுக் கலந்துரையாடலானது இவ்விரு நாடுகளினதும் உறவுகளை வலுப்படுத்தவும், இலங்கையின் போருக்குப் பின்னரான நல்லிணக்க முயற்சியில் ஆழமான புரிந்துணர்வைக் கட்டியெழுப்புவதற்கும் ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது.

கடந்த செப்ரெம்பரில் நிறைவேற்றப்பட்ட ஐ.நா தீர்மானத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டவாறு இலங்கையின் மீறல்கள் தொடர்பான பொறுப்புக் கூறலில் வெளிநாட்டுப் பங்களிப்பும் உள்வாங்கப்படும் என்பது மீண்டும் உறுதிப்படுத்தப்பட வேண்டிய நிலை காணப்படுகிறது.

இலங்கை தனது போர்க்கால மீறல்கள் தொடர்பாகப் பொறுப்பளிப்பதற்கு வெளிநாட்டு நீதிபதிகளும் உள்வாங்கப்பட வேண்டும் என ஜெனிவாவில் உள்ள ஐ.நா மனித உரிமைகள் சபைக்கான அமெரிக்கத் தூதுவர் கெய்த் ஹாப்பர் கடந்த மாதம் வலியுறுத்திய போதிலும், போர் மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு வெளிநாட்டுப் பங்களிப்புத் தேவையில்லை என அண்மையில் ஜனாதிபதி மைத்திரி அறிவித்திருந்தார்.

மீறல்கள் தொடர்பான விசாரணை மற்றும் ஆவணப்படுத்தல்களில் இலங்கைக்கு பல்வேறு தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு அமெரிக்கா தயாராக உள்ளது.

பொறுப்புக்கூறல் மற்றும் இனமீளிணக்கப்பாட்டு செயற்பாடுகள் முன்னகர்த்தப்படும் போது, அமெரிக்காவும், இராணுவப் பயிற்சித் திட்டங்கள் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை மீளவும் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான நாடுகளில் இலங்கையை உள்வாங்குவதென அமெரிக்காவின் சவால்களுக்கான அமைப்பின் இயக்குனர் சபையால் கடந்த டிசெம்பரில் தீர்மானிக்கப்பட்டுள்ளதானது வரவேற்கத்தக்க ஒன்றாகும். இலங்கையின் வர்த்தக அபிவிருத்திகளை மேம்படுத்தவும், போரால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கில் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்குமான நிகழ்ச்சித் திட்டங்களை அமெரிக்காவின் சவால்களுக்கான அமைப்பு மேற்கொள்வது பயனுள்ளதாகும்.

கடந்த ஒரு ஆண்டிற்குள் இலங்கை தனது நாட்டில் ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதற்கும், போருக்குப் பின்னரான மீளிணக்கப்பாட்டை மேம்படுத்துவதற்குமான பல்வேறு நகர்வுகளை மேற்கொண்டுள்ளது.

இந்நிலையில் அமெரிக்க- இலங்கை கூட்டுக் கலந்துரையாடலானது இலங்கை புதிய திசை நோக்கிப் பயணிப்பதற்கும் இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான உறவைப் பலப்படுத்துவதற்கான ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளது.

# தமிழ் அரசியல் கைதிகளை சாகடிக்க விரும்புகிறதா அரசு?

## மார்க்சிச-லெனினிசக் கட்சி கேள்வி

(யாழ்ப்பாணம்)

நல்லாட்சியின் பெயரிலான இன்றைய அரசாங்கம் நீண்டகாலமாக விசாரணையின்றிச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்குத் தொடர்ந்தும் மறுத்து வருகிறது. இதன் மூலம் அரசாங்கம் அவர்களைச் சிறைகளில் சாகடிக்க விரும்புகிறதா என்றே கேட்க வைக்கிறது. தமது விடுதலையைக் கோரித் தமிழ் அரசியல் கைதிகள் அடிக்கடி உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வந்துள்ளனர். தற்போதும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கின்றனர். அதனால் அவர்களது உடல் நிலை மோசமடைந்து காணப்படுகிறது. தம்மை விடுதலை செய்யக் கோரும் அவர்களது போராட்டம் முற்றிலும் நியாயமானதாகும். இன நல்லிணக்கம், மனிதாபிமானம், ஜனநாயகம் பற்றி உரத்துப் பேசிவரும் மைத்திரி ரணில் அரசாங்கம், இந்நிலையிலாவது தமிழ் அரசியற் கைதிகளைத் தாமதமின்றி விடுதலை செய்ய வேண்டும் என்பதை எமது கட்சி வற்புறுத்துகிறது.

இவ்வாறு புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சியின் அரசியற்குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது, எமது கட்சியும் ஏனைய இடதுசாரி முற்போக்கு ஜனநாயக கட்சிகளும் அமைப்புகளும் இணைந்திருக்கும் அமைப்பான, அரசியற் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் ஊடாகத் தமிழ் அரசியற் கைதிகளை விடுவிப்பதற்கான பல்வேறுபட்ட வெகுஜன நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். அண்மையில் மகசீன் சிறைச்சாலைக்குச் சென்று அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகளைச் சந்தித்து நிலைமைகளைக் கேட்டறிந்தோம். அன்றே மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகத்திற்கும் சென்று தமிழ் அரசியல் கைதிகளின் அவல நிலை பற்றியும் சட்ட நடவடிக்கைகளைத் தொடர்வது பற்றியும் கலந்துரையாடினோம். இவற்றின் போது அரசியற் கைதிகளின் துரித விடுதலையை வேண்டினோம். அரசியற் கைதிகள் ஒவ்வொருவருக்கும் பின்னால் நீண்ட சிறை வாழ்க்கையின் சோகக் கதைகள் இருக்கின்றன. அரசியற் கைதிகள் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் அவர்களது உடல், உள நிலைமைகள் மோசமாகியுள்ளன. அவர்களின் பெற்றோரும் சகோதரர்களும் வாழ்க்கைத் துணைவர்களும் பிள்ளைகளும் நலிந்து போயுள்ளனர். அரசியல் கைதிகளின் விடுதலைக்குப் பயங்கரவாதத் தடைச் சட்டமே குறுக்கே நிற்கின்றது. எனவே மேற்படிச் சட்டத்தை அகற்ற வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றோம். அண்மையில் இங்கு வந்து சென்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் அரசியற் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்க முடியாது என்றும் சட்டப்படியே செயற்பட வேண்டும் எனவும் கூறிச்சென்றார். இதுவும் அரசாங்கத்திற்குச் சாதகமாகிவிட்டது. இவ்விடயத்தில் தமிழர் தலைமைகள் மௌனமாகவே இருந்து வருகின்றன. ஏற்கனவே இலங்கையில் மூன்று தடவைகள் அரசியற் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டதை ஏன் தமிழ்த் தலைமைகள் பின்னிக்கின்றன? பொது மன்னிப்பின் ஊடாகவோ சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்ட நடவடிக்கைகள் மூலமாகவோ தமிழ் அரசியற் கைதிகளை விடுவிக்கக்கூடிய சூழல் இருந்தும் அதனைச் செயற்படுத்தாமல் அரசாங்கம் அசட்டையாக இருந்து வருவதை எமது கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# மின்விளக்குகள் ஒளிர்வதில்லை

(உடுப்பிட்டி)

தொண்டைமானாறில் அமைந்துள்ள புதிய பாலத்தில் மின் கம்பங்களில் உள்ள மின்விளக்குகள் ஒளிராத நிலையில் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் இவ் வீதியில் இரவு நேரங்களில் பயணிப்பதற்கு அச்சநிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இடத்தில் நீண்டகாலமாக மின் விளக்குகள் பொருத்தப்படாத நிலை காணப்பட்டது. எனினும் அங்குள்ள பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க அண்மையில் மின்கம்பங்கள் புதிதாக பொருத்தப்பட்டு மின் விளக்குகளும் புதிதாக பொருத்தப்பட்டன. ஆனால் அம்மின் விளக்குகள் இதுவரை ஒளிரச் செய்யப்படவில்லை. அதனால் அப்பிரதேசம் இருளில் மூழ்கிய நிலையிலே காணப்படுகிறது.

இப்பாலமானது கோப்பாய் பிரதேச சபை மற்றும் வல்வெட்டித்துறை என்பவற்றை இணைக்கும் பகுதியில் அமைந்துள்ளது.

எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் அக்கறையுடன் செயற்படுமாறு பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-5-52)

# மச்சங்களின் அதிர்ஷ்ட பலன்கள்



மச்ச நிறங்களும் பலன்களும்

உடம்பில் உள்ள அங்கங்களும் அங்கங்களில் உள்ள மச்சங்களும் அவரவர்க்குரிய பலன்களை உணர்த்துகின்றமை போன்றே மச்சங்களின் நிறங்களும் பலன்களைக் குறிப்பனவே என்று கூறலாம். சாதாரணமாக ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நிறத்தில் மச்சங்கள் இருத்தலைக் காணலாம். பழுப்பு நிறம், மஞ்சள் நிறம், நீல நிறம், கறுப்பு நிறம், சிவப்பு நிறம், வெளுப்பு நிறம், மாநிறம் ஆகிய நிறங்களில் மச்சங்கள் அமைந்திருத்தல் உண்டு. நிறத்தால் மச்சங்கள் வேறுபட்டு இருப்பது போன்றே மச்சங்களின் பலன்களும் வேறுபாடுகள் கொண்டுள்ளன.

மச்சங்களின் தகுதி நிலைகள் நிறங்களாலேயே அமைகின்றன. நிறங்களுக்கேற்பவே மச்சங்களின் பலன்களும் அமைகின்றன. நிறங்கள் இல்லையென்றால் மச்சங்களே இல்லையாம். மச்சங்களினின்று நிறங்களை வேறுபிரிக்கஇயலாமைபோன்றே, பலன்களிலும் நிறங்களின் பலன்களை தனியே பிரிக்கவியலாது. நிறங்களால் மச்சங்களின் வடிவங்கள் காணப்படுகின்றமை போன்றே, நிறங்கள் குறிக்கும் பலன்களாலேயே மச்சங்களின் பலன்களும் அமைந்து காணப்படுகின்றன. எனவே நிறங்கள் குறிக்கும் பலன்களே மச்சப்பலன்களாக அமைகின்றன என்பது விளங்கும். வேறுபட்ட நிற மச்சங்கள் வேறுபட்ட பலன் களைக் குறிக்கின்றன. நிறங்களால் அமை வுறும் மச்சங்களின் பலன் களை இங்கு காணலாம்.

சிவப்பு நிற மச்சம்

சிவப்பு நிற மச்சங்கள் உடம்பில் இருந்தால், அவர்கள் நேர்மை தவறாதவர்களாக இருப்பார்கள். எப்பொழுதும் நண்பர்களுடன் சேர்ந்தே இருப்பார்கள். மிகவும் ஆர்வத்துடன் அதிக அளவில் உணவு உண்பார்கள்.

இவர்களில் சிலர் வலிமை மிக்கவர்களாகவும், மிகவும் துணிவு உடையவர்களாகவும் இருப்பார்கள். ஆகையால் எந்த ஆபத்தான நிலைமையையும் தைரியமாக எளிதில் சமாளித்து விடுவார்கள். எந்தக் காரியத்தையும் அஞ் சாது துணிவுடன் செய்து முடிப்பவர்களாக இருப்பார்கள்.

இவர்களில் சிலர் பிடிவாதக்காரர்களாக இருப்பார்கள். சிலர் வேதாந்திகளாகத் திகழ்வார்கள். சிலர் சிறந்த அறிவாளிகளாக விளங்குவார் கள். இவர்களில் சிலர் படை வீரர்களாகப் பணிபுரிவார் கள். சிலர் இரும்பு வேலை அல்லது மர வேலை செய்ப வர்களாக இருப்பார்கள். சிலர் அறுவைச் சிகிச்சை புரியும் மருத்துவர்களாக இருப்பார்கள்.

இந்த மச்சம் உடையவர்களுக்கு அடிக்கடி காய்ச்சல், இரத்தக் கொதிப்பு போன்ற நோய்கள் வரக்கூடும்.

கறுப்பு நிற மச்சம்

உடம்பில் கருப்பு நிற மச்சங்கள் இருந்தால், அவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சியோ, சுகமோ இருக்காது.

காலமெல்லாம் கஷ்டப்பட்டு உழைத்து வாழ வேண்டியவர்களாக இருப்பார்கள்.

உடல் உழைப்பின் மூலமாகவே உண்டு வாழ்பவர்களாக இருப்பார்கள். இவர்களில் பலர் பயிர்த் தொழில் செய்பவர்களாக இருப்பார்கள். சிலர் அலுவலகங்களில், தொழிற்சாலைகளில், சுரங்கங்களில் வேலை செய்பவர்களாக இருப்பார்கள்.

இந்த மச்சம் உடையவர்களுக்கு சரிவர வாழ்க்கை வசதிகள் இராது. சிலருக்கு வசதிகள் இருந்தும் எதையோ பறிகொடுத்தவர் போன்று கவலை தோய்ந்த முகத்துடன் காணப்படுவார்கள்.

இவர்கள் பொதுவாகப் பிறரை விரும்பமாட்டார்கள். வெறுத் தொதுக்குவதையே இவர்கள் வழக்கமாகக் கொண்டிருப்பார்கள். இவர்கள் மற்றவர்களை வெறுப்பதை போன்றே இவர்களையும் மற்றவர்கள் வெறுப்பார்கள். இவர்களில் சிலர் தம் மைத் தாமே வெறுத்துக் கொண்டு தற்கொலை செய்து கொள்ளவும் துணிவார்கள். (தொடரும்)

# செய்தித்துளிகள்

## கஞ்சா வைத்திருந்த தாயும் மகளும் கைது

(கொழும்பு)

அம்பலாந்தொட்ட, வெள்ளவத்தை பகுதியில் கஞ்சாவை தங்கள் வசம் வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில், தாயையும் மகளையும் தங்காலை, விசேட போதைப்பொருள் ஒழிப்பின் திடீர் சோதனைப்பிரிவு அதிகாரிகள் நேற்றுக்காலை கைது செய்துள்ளனர்.

இதன்போது 41 வயதான மகளும் 59 வயதான தாயுமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட தாய் மீது, ஏற்கெனவே 12 கஞ்சா வழக்குகள் இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ)

## கேரளக் கஞ்சாவுடன் வயோதிபர் கைதானார்

(திருகோணமலை)

திருகோணமலை - குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிலாவெளி பகுதியில் 850 கிராம் கேரள கஞ்சாவுடன் வயோதிபரை போதை ஒழிப்பு பிரிவினர் நேற்று முன்தினம் காலை கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் நிலாவெளி - அடம்போடவெட்டை பகுதியைச் சேர்ந்தவர் என தெரிய வந்துள்ளது.

பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே, அவரது வீட்டிலிருந்து கேரளக் கஞ்சாவை மீட்டதாகவும் அவை மன்னாரிலிருந்து கொண்டு வரப்பட்டதாகவும் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளார். (இ)

## 73 ஆயிரம் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

மேல்மாகாணத்தில் வீதி சட்டதிட்டங்களை மீறிய 73ஆயிரம் சாரதிகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், பெப்ரவரி மாதத்திற்குள் மட்டும் இவ்வாறு 73,636 சாரதிகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வீதிப்பாதுகாப்புக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் அதிகாரி அமரசிறி சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன் கொழும்பு நகரிற்குள் மட்டும் 27,390 சாரதிகள் இவ்வாறு வீதி சட்டதிட்டங்களை மீறியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ)

## கடலில் மாணவன் மாயம்!

(கொழும்பு)

கொஸ்கொட - ஹித்தருவ கடற்பகுதியில் நீராடச் சென்ற பாடசாலை மாணவன் ஒருவன் நேற்றுக்காலை காணாமற் போயுள்ளார்.

மேலும் சில மாணவர்களுடன் கடலுக்குச் சென்ற வேளையே, இவர் காணாமற் போயுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, சம்பவத்தில் கொஸ்கொட - நாபே பகுதியைச் சேர்ந்த 16 வயதான மாணவரே காணாமற் போயுள்ளதாக தெரிய வந்துள்ளது.

கொஸ்கொட பொலிஸார மற்றும் பிரதேச மக்கள் இணைந்து அவரைத்தேடும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். (இ)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(கோப்பாய்)

கோப்பாய் தெற்கு ஜே/260 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள கிராம அபிவிருத்தி சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக உத்தியோகத்தர் தெரிவும் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் தி.இராஜரெட்ணம் தலைமையில் கோப்பாய் தெற்கு மாதா கோயில் வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் கோப்பாய் தெற்கு கிராம சேவையாளரும் வலி.கிழக்கு பிரதேச சபை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரும் கலந்து கொள்ளவுள்ளனர். இக்கூட்டத்தில் சகல கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (இ-134)

## சினிமா குறித்து உரை

(யாழ்ப்பாணம்)

இன்று (வியாழக்கிழமை) பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புதிய கலைப்பீட கட்டத் தொகுதியில் நுண்கலைத்துறை மற்றும் கலைவட்டத்தின் ஏற்பாட்டில் நாடகரும் நடிகருமான சண்முகராஜாவின் தமிழ் சினிமா உலகு எனும் உரை இடம் பெறவுள்ளது.

சினிமாத்துறை மீது ஆர்வமுடைய அனைவரும் இந்நிகழ்வில் கலந்து கொள்வதன் மூலம் பயன்பெற முடியும். (இ)

## மழைநீர் சேகரிப்பு தொகுதிகளை ஜப்பான் தூதுவர் பார்வையிடுவார்

ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான அனர்த்த முகாமைத்துவ கூட்டமைப்பு தனியார் துறையினருடன் இணைந்து மேற்கொண்ட மழை நீர் சேமிப்பு தொகுதிகளை ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவிலுள்ள பயனாளிகளுக்கு மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பு வழங்கியுள்ளது.

இன்று முற்பகல் 9.00 மணியளவில் ஜே/56 தம்பாட்டி கிராம சேவகர் பிரிவிலுள்ள 15 தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கையளித்த மழைநீர் சேகரிப்பு தொகுதிகளை பார்வையிட இலங்கைக்கான ஜப்பான் நாட்டு தூதுவர் சுகுணும வருகை தரவுள்ளார். (இ

## சிவராத்திரி தின நிகழ்வுகள்

யாழ். பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையம் நடத்தும் சிவராத்திரி தின நிகழ்ச்சிகள் இன்று தொடக்கம் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை சுக தாமம் மண்டபத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலைய நிகழ்ச்சி இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 6 மணி வரை தியானத்தின் சுவையைப் பற்றி அறிய விரும்புவோருக்காக ஆத்ம பலம் தியான அனுபவம் என்ற நிகழ்ச்சியும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 6 மணி வரை சிவராத்திரி விரதம் அனுஷ்டிப்பவர்களுக்கு ஏற்ற விழிப்புணர்வுக்காக சிவ தரிசனம் என்னும் கலை நிகழ்ச்சியும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

முற்றிலும் இலவச அனுமதியுடைய இந்நிகழ்வில் அனைவரும் பங்குபற்றி நன்மை அடையுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (இ-5)

## உணவூட்டல் தின நிகழ்வு

நீர்வேலி சி.சி.தமிழ்க்கலவன் பாடசாலையில் உணவூட்டல் தின நிகழ்வு இன்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அதிபர் ரவீந்திரநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக ஓய்வுபெற்ற விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி ந.சிவசீலனும் நீர்வேலி வடக்கு கிராம சேவகர் திருமதி பிரேசிலா குலபாலசிங்கமும் கலந்துகொள்ளவுள்ளனர். (இ-5-136)

## சூளைமேட்டு சம்பவம் தொடர்பில் டக்ளஸ் காணொளி சாட்சியம்

சூளைமேட்டு சம்பவம் தொடர்பில் டக்ளஸ் தேவானந்தா தனது இந்திய சட்டத்தரணிகள் ஊடாக விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இந்திய உயர் நீதிமன்றத்தால் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தமைக்கு அமைவாக டக்ளஸ் தேவானந்தா காணொளி மூலமாக சாட்சியம் வழங்கவுள்ளார்.

இதன்படி S.C.NO.60.1987 என்ற வழக்கு எண்ணிற்கு அமைவாக சென்னை செசன் நீதிமன்றத்தில் மேற்படி வழக்கு தொடர்பான விசாரணை 5 ஆம் திகதி எடுத்துக்கொள்ளப்படவுள்ள நிலையில் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்திலிருந்து காணொளி மூலமாக சாட்சியமளிக்கவுள்ளார்.

1986 ஆம் ஆண்டு சூளைமேட்டில் நடைபெற்ற சம்பவம் தொடர்பாக இந்தியாவுக்கு நேரில் சென்று சாட்சியமளிக்க முடியாத காரணத்தால் தான் தற்போது சென்னை விசேட செசன் நீதிமன்றத்தில் காணொளி மூலமாக சாட்சியமளிக்கவுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்ட அப்போதைய EPRLF மத்திய கமிட்டி அரசியற் குழுவைச் சேர்ந்த டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட சிலர் மீது வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இந்த சம்பவத்தில் நேரடியான தொடர்புகள் இல்லை என்றபோதும் அன்றைய EPRLF அமைப்பில் டக்ளஸ் தேவானந்தா இருந்தார் என்ற காரணத்தால் அவரையும் இந்த வழக்கினுள் சம்பந்தப்படுத்தி வழக்கு பதியப்பட்டது. இதற்கு சான்றாக சம்பவம் தொடர்பாக பொலிஸார் பதிந்த முதல் அறிக்கையில் டக்ளஸ் தேவானந்தாவுக்கு நேரடி தொடர்பு இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளமையும் சுட்டிக் காட்டத்தக்கது.

இலங்கையில் நடைபெற்ற அழிவு யுத்தம் முடிவடைந்த பின்னர் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் அவரது அமைச்சரவையில் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தா டில்லிக்கு சென்றிருந்தபோது இந்திய அரசினூடாக தமிழ் மக்களுக்கு கிடைக்கப்பெற்ற வரப்பிரசாதங்களான 50 ஆயிரம் வீட்டுத்திட்டம், வட பகுதிக்கான புகையிரத சேவை, அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை மீளுருவாக்கம், கைதடியிலுள்ள பனை ஆராய்ச்சி நிறுவனப் புனரமைப்பு மற்றும் தொழிற்துறை சார்ந்த நவீன உபகரணங்கள், வடகடல் நிறுவனத்திற்கான தொழிற்றுறை சார்ந்த நவீன இயந்திர சாதனங்கள், காங்கேசன்துறை துறைமுக புனரமைப்பு, யாழ்ப்பாணத்தில் அமையப்பெறவுள்ள கலாசார மண்டபம், வடமாகாண விவசாயிகளுக்காக 500 உழவு இயந்திரங்கள், வாழ்வாதார மேம்பாட்டிற்கான உதவிகள் உள்ளிட்ட பல்வேறுபட்ட உதவித்திட்டங்கள் இவற்றில் உள்ளடங்குகின்றன.

இவ்வாறான மக்கள் நலன் சார்ந்த செயற்றிட்டங்களை பொறுக்க முடியாத சக தமிழ் அரசியல் கட்சிகளைச் சார்ந்தோர் டக்ளஸ் தேவானந்தாவின் மீது கொண்ட காழ்ப்புணர்வு காரணமாக இந்தியாவிலுள்ள தமக்கு சார்பான சட்டத்தரணிகள் ஊடாக இவ்வழக்கை தொடுத்துள்ளனர்.

1987 ஆம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டினடிப்படையில் அவரது சட்டத்தரணிகளது ஆலோசனைக்கு அமைவாக இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் டக்ளஸ் தேவானந்தாவும் இலங்கைக்கு அப்போது வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.. (இ)

# தமிழ் சினிமா வரலாறு

## 111 டி. ஆர். சுந்தரம் தொடங்கிய மாடர்ன் தியேட்டர்

...போட்ட பணத்தை விட 2 மடங்கு லாபம் கிடைத்தது.

**பேரழகன்.**

முன்னணி நடிகர் சூர்யாவை வைத்து ஒரு படம் தயாரிக்க சரவணன் முடிவு செய்தார். அதுதான் பேரழகன்.

நீண்ட பல வரிசையுடன் புதுமையான மேக்கப்பில் சூர்யா நடித்தார். அவருடைய ஜோடி ஜோதிகா.

6.5.2004இல் வெளிவந்த பேரழகன் நூறு நாள் வெற்றிப்படமாக அமைந்தது.

**175 படங்கள்**

உலகத்திலேயே நீண்ட காலமாக செயற்பட்டு வரும் சினிமா ஸ்டுடியோக்கள் ஐந்தே ஐந்து தான். அந்த ஐந்து ஸ்டுடியோக்களில் ஏவி.எம். ஸ்டுடியோவும் ஒன்று.

2011 ஜூன் மாதம் ஏவி.எம். அதனுடைய 175 ஆவது படத்தைத் தயாரித்தது. படத்தின் பெயர் முதல் இடம். புதுமுகங்கள் நடித்தது.

இப்போது ஏவி.எம். குடும்பத்தின் 4 ஆவது தலைமுறையும் (அருணா குகன், அபர்ணா குகன்) படத்தயாரிப்பில் இறங்கியுள்ளனர். இவர்கள் இன்டர்நெட்டில் திரையிடுவதற்காக 55 நிமிடங்கள் ஓடக்கூடிய இதுவும் கடந்துபோகும் என்ற குறும்படத்தை தயாரித்துள்ளனர்.

சின்னத்திரையிலும் ஏவி.எம். முத்திரை பதித்துள்ளது. இதுவரை 50 சீரியல்களைத் தயாரித்துள்ளது. அதாவது மொத்தம் 13 ஆயிரம் எபிசொடுகள்.

ஏவி.எம்.சரவணனின் மகள் உஷா சரவணன் தயாரிப்பில் மங்கையர் சாய்ஸ் என்ற நிகழ்ச்சி, சன் டி.வியில் 1749 நாட்கள் இடம்பெற்றது. மங்கைர் உலகம் என்ற பெயரில் கலைஞர் டி.வியில் 1650 நாட்களைக் கடந்து போய்க்கொண்டிருக்கிறது.

ஜெமினி, ஏவி.எம். ஆகிய ஸ்டுடியோக்களைப் போல, தமிழநாட்டில் மிகவும் புகழ்பெற்ற விளங்கிய ஸ்டுடியோ மாடர்ன் தியேட்டர்ஸ். இங்கு 100 இற்கும் மேற்பட்ட படங்கள் தயாரிக்கப்பட்டன.

சென்னைக்கு வெளியே சேலத்தில் தொடங்கப்பட்ட இந்த ஸ்டுடியோ, மிகப் பிரபலமான நடிகர்- நடிகைகளை நடிக்க வைத்து வெற்றிப்படங்களைத் தயாரித்தது.




**டி.ஆர்.சுந்தரம்**

இந்த ஸ்டுடியோவின் அதிபரான டி.ஆர்.சுந்தரம், சேலம் மாவட்டம் திருச்செங்கோட்டில் 1907 ஜூலை 16 ஆம் திகதி பிறந்தவர்.

இவருடைய தந்தை வி.வி.சி.ராமலிங்க முதலியார், மில்களில் இருந்து நூலை வாங்கி மொத்தமாக வியாபாரம் செய்து வந்தார்.

அவருடைய ஐந்தாவது மகன்தான் டி.ஆர். தாயார் பெயர் கணபதி அம்மாள்.

ஆரம்பக் கல்வியை சேலத்தில் கற்ற சுந்தரம், சென்னை மாநிலக் கல்லூரியில் சேர்ந்து, பி.ஏ. மற்றும் பி.எஸ்.சி பட்டங்கள் பெற்றார்.

அதன் பிறகு சுந்தரம் லண்டனுக்குச் சென்றார். ஜவுளித் தொழிலில் உயர் கல்வி பயின்றார்.

நூல்களுக்கு வண்ணம் சேர்க்கும் தொழில் நுட்பத்தை கற்றறிந்தார்.

**காதல் திருமணம்**



லண்டனில் டி.ஆர்.சுந்தரத்துக்கும் கிளாடிஸ் என்ற பெண்ணுக்கும் காதல் ஏற்பட்டது. இருவரும் பதிவுத் திருமணம் செய்துகொண்டனர்.

சுந்தரத்துக்கு பெரிய இடங்களில் இருந்து எல்லாம் பெண் கொடுக்க பலர் தயாராக இருந்தனர். ஆனால் அவரோ, குடும்பத்தினரின் எதிர்பார்ப்புக்கு மாறாக, வெள்ளைக்காரப் பெண்ணை மணந்து கொண்டு சேலம் திரும்பினார்.

எனினும் சுந்தரத்தின் மீது அவருடைய உறவினர்கள் எவரும் கோபம் கொள்ளவில்லை. சுந்தரத்தின் சகோதரர் முருகேச முதலியாரும் மற்ற உறவினர்களும் சுந்தரத்துக்கும் அவருடைய மனைவிக்கும் மாலை அணிவித்து வரவேற்றனர். (தொடரும்)

வாழ்க்கையில் ஏதாவது அதிசயம் நிகழ்த்த வேண்டும் என்று நினைத்தேன். அது இவ்வளவு சீக்கிரம் நடந்து விட்டது. – அக்பானி டாரியே

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அவருக்கு மூன்று வயதில் ஞானம் இவருக்கு 83 வயதில் ஞானம்

ஞானசம்பந்தக் குழந்தைக்கு மூன்று வயது. சீர்காழிப் பகுதியில் இருக்கும் தோணிபுரத்திற்கு தந்தையார் தன் மகன் சம்பந்தனைக் கூட்டிச் செல்கிறார்.

குழந்தையைக் கேணிக்கட்டில் இருத்திவிட்டு தந்தை நீராடுகிறார். தன் தந்தையைக் காணாத குழந்தை அம்மையே! அப்பா! என்று அழுகிறது.

அம்மை அப்பன் எருதேறிவந்து சம்பந்தக் குழந்தைக்கு ஞானப்பால் ஊட்டுகின்றனர். குழந்தைக்கு ஞானம் பிறக்கிறது.

தோடுடைய செவியன் விடையேறி... எனச் சம்பந்தக் குழந்தை தேவாரத் திருமுறை பாடுகிறது. அன்று மூன்று வயது நிரம்பிய சம்பந்தக் குழந்தை அழுததனால்தான் வேதநெறி தழைத்தோங்கியது; மிகு சைவத்துறை விளங்கியது என்று பட்டியல் படுத்துவர் நம் பெரியோர்.

ஞானம் என்பது அறிவுக்கும் அப்பாற்பட்டது. அறிவுடையவர்கள் எல்லோரும் ஞானமுடையவர்கள் அல்ல. ஞானம் என்பது அறிவும் தெய்வப்பலமும் இணைந்தது.

இந்த ஞானம் சிலருக்கு மூன்று வயதில் வந்துவிடுகிறது. இன்னும் சிலருக்கு 83 வயதில் வருகிறது. இன்னும் பலருக்கு ஞானம் கை வராமலே போகிறது.

இதைப் பார்க்கும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கடந்த சில தினங்களுக்கு முன் திருகோணமலையில் உள்ள தனது இல்லத்தில் சந்தித்த கட்சி ஆதரவாளர்களிடம் வடக்குக் கிழக்கு இணைந்த சமஷ்டி அதிகாரம் கொண்ட தமிழர் தேசம் கிடைக்கும்வரை போராடுவோம் எனக் கூறியுள்ளதாகத் தகவல்.

இவ்வாறு சம்பந்தர் கூறும்போது பலரும் திணுக்குற்று போயினராம். சம்பந்தர் ஐயாவுக்கு என்ன நடந்தது? ஒற்றையாட்சிக்குள் தீர்வு காண்பதற்கு சம்பந்தர் சம்மதித்து விட்டார் என்றல்லவா பேச்சுக்கள் அடிபட்டன. இது என்ன புதுக்கதை.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழர் தேசம்... தமிழர் தேசம்... ஒருநாடு இருதேசம் என்று அடிக்கடி கூறிவந்த போதெல்லாம் அதனை ஏளனப்படுத்திக் கூறியவர்கள் இப்போது தமிழர் தேசத்தை உச்சாடனம் பண்ணத்தொடங்கியது ஏன்? தமிழர் தேசம் என்று சம்பந்தர் கூறியது உண்மையா? அல்லது இயற்றலா? எதுவும் புரியவில்லை.

இருந்தும் ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்பதற்கு சம்பந்தர் உடன்பட்டிருந்தாலும் அதனைக் கொடுப்பதற்குக் கூட இலங்கை அரசு மறுதலித்து விட்டது என்ற நிலையில், வடக்குக் கிழக்கு இணைந்த சமஷ்டி – தமிழர் தேசம் என்று சம்பந்தர் ஐயா கூறியிருக்கலாம்.

அல்லது தமிழ் மக்கள் பேரவை தயாரித்த தீர்வுத் திட்டம் மிகவும் அற்புதமானது. பேரவையின் தீர்வுத் திட்டத்தில் வடக்குக் கிழக்கு இணைந்த தமிழர் தேசம் என்பது வலியுறுத்தப்பட்டிருப்பதால், அதனை நானும் ஏற்று ஒரே குரலில் கூறுவதுதான் நல்லது என்று கருதி சம்பந்தர் அவ்வாறு கூறியிருக்கலாம்.

ஐயா! நீங்கள் கூறிய இரண்டும் காரணம் அல்ல. மாறாக சம்பந்தர் ஐயாவுக்கு ஞானம் பிறந்து விட்டது. அதனால் அவர் மெய்ம்மையைக் கண்டு கொண்டார் அவ்வளவுதான் என்று நீங்கள் கூறி அதை நாம் மறுதலிக்கப் போவதில்லை.

அட, அவருக்கு மூன்று வயதில் ஞானம் – இவருக்கு 83 வயதில் ஞானம் என்று உணர்வதைத் தவிர வேறு என்னதான் நாம் செய்ய முடியும்!

## அனல் மின் நிலையத்தை எதிர்த்து சம்பூர் மக்கள் உண்ணாவிரதம்

(சம்பூர்)

திருகோணமலை சம்பூர் பிரதேசத்தில் அமையவுள்ள இந்திய உதவியுடனான அனல மின் நிலைய பணிகளை நிறுத்தக் கோரி நேற்று புதன்கிழமை உள்ளூர் மக்கள் அடையாள உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பான பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் கட்டைபறிச்சான் சாலையூர் விநாயகர் ஆலய முன்றலில் நடைபெற்ற இந்த போராட்டத்தில் மீனவர்கள், விவசாயிகள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பெண்கள் உட்பட பலரும் கலந்து கொணடனர்.

அதேவேளை அந்தப் பிரதேசத்தில் நடைபெற்ற வேறு வைபவமொன்றில் கலந்து கொள்வதற்காக சென்றிருந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை சந்தித்து உரையாடினார்.

இருந்த போதிலும் அவரிடமிருந்து தீர்க்கமான பதில் கிடைக்கவில்லை என போராடடத்தில் ஈடுபட்டவர்கள் கூறுகின்றனர். சம்பூர் அனல் மின் நிலையம் தொடர்பாக இலங்கை - இந்தியா இரு நாடுகளுக்குமிடையில் முனனாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பதவிக் காலத்தில் 2011-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6-ம் திகதி ஒப்பநதமொன்று கைச்சாத்திடப்பட்டது.

512 மில்லியன் அமெரிக்க டாலர் செலவில் 500 மெகா வோட் மின் உற்பத்தியை இலக்காக கொண்டு அனல் மின் நிலையத்திற்கு 540 ஏக்கர் காணி அடையாளமிடப்பட்டு தற்போது ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருகின்றன.

சம்பூர் பிரதேசத்தில் இதறகான காணி அடையாளம் காணப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டபோது அந்த பகுதி மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதியாகவே இருந்துள்ளது. அங்கு வாழ்ந்த மக்கள் போர காரணமாக இடம் பெயர்ந்திருந்த நிலையில் மக்களின் குடியிருப்புகள் உட்பட அனைத்து நிலங்களும் அரசினால் சுவீகரிக்கப்பட்டிருந்தது.

போர் முடிவுக்கு வந்த போதிலும் முன்னைய அரசு அவர்களின் மீள்குடியேற்றத்திற்கு அனுமதி மறுத்து காணிகளையும் மீள கையளிக்க மறுத்துவிட்ட நிலையில் கடந்த ஆண்டு முற்பகுதியில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர் அம் மக்களின் காணிகள் மீள கையளிக்கப்பட்டு, தற்போது மக்களும் மீளக் குடியேறியுள்ளனர்.

சம்பூர் பிரதேசத்தில் அமையவுள்ள அனல் மின் நிலையம் சுற்றுச் சூழலுக்கு அச்சுறுத்தலாக அமையும் என பல்வேறு தரப்பும் ஏற்கெனவே வலியுறுத்தி வருகின்ற போதிலும் அரச தரப்பு அதனை தொடர்ந்தும் நிராகரித்து வருகின்றது.

மக்கள் குடியிருப்பு இல்லாத காலப்பகுதியிலே அனல் மின் நிலையம் தொடர்பான சுற்றுச்சூழல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதால் அது மீள்குடியேற்றத்தின் பின்னர் பொருத்தமானதாக கருத முடியாது என உள்ளூர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

சில நாட்களுக்கு முன்னதாக அந்தப் பகுதிக்கு சென்றிருந்த மின் சக்தி அமைச்சரை சந்தித்த உள்ளூர் மக்கள் இதே கருத்தை நேரடியாக அவரிடம் முன் வைத்திருநத போதிலும் ஏற்கெனவே திட்டமிட்டவாறு அந்த இடத்தில் அனல் மின் நிலையம் அமையும் என்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு அச் சுறுத்தல் இல்லாதவாறு பாதுகாப்பான முறையில் அனல் மின நலையம அமையும் என தெரிவித்து மககளின் கோரிக்கையை நிராகரிக்கும் வகையிலே அவர் பதிலளித்திருந்தார். (செ-12)

## யாழ். பனம் கைப்பணியாளர்களுக்கு உபகரணம் வழங்கும் நிகழ்வு நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பனம் கைப்பணியாளர்களுக்கு உபகரணம் வழங்கும் நிகழ்வு யாழ். வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் கூட்டுறவாளர் மாநாட்டு மண்டபத்தில நாளை வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் மா.கணபதிப்பிள்ளையின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பனை அபவிருத்தி சபையால் பனங்கைப்பணி கிராமமாக தெரிவு செய்யப்பட்ட கரவெட்டி இமயாணன் கிராமத்திலுள்ள 80 பயனாளிகளுக்கும், யாழ்சிறைச்சாலையில் கைப்பணிப்பயிற்சி பெற்ற 7 பயனாளிகளுக்கும், விழிப்புலனற்றோர் சங்கத்திலுள்ள 19 பேருக்கும் இந்தியாவிலிருந்து மீளக்குடியமர்ந்த 3 பயனாளிகளுக்கும் பனங்கைப்பணி உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் பனைமரம் வெட்டுதலை தடுக்கும் நோக்கில்மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பதாகைகள் மாவட்டம் முழுவதிலும் நடப்படவுள்ளன. அதன் முதற்கட்டமாக தெல்லிப்பழை பிரதேச செயலக முன்றலில் விழிப்புணர்வு பதாகை மாலை 2.00 மணிக்கு அமைச்சரால் திரைநீக்கம் செய்யப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்நிர்மாணம் மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், கௌரவ விருந்தினராக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்நிர்மாணம், மீளகுடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஏ.சிவஞானசோதி, சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-9)

## நாத நிருத்தியம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ்.இந்தியத் துணைத்தூதரகமானது யாழ. திருமறைக்கலா மன்றம் மற்றும்கொழும்பு, அரு ஸ்ரீ கலைக் கூடத்துடன் இணைந்து வழங்கும் மகளிர் தின சிறப்பு பரதநாட்டிய நிகழ்ச்சியான நாத நிருத்தியம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் மாலை 5.30 மணிக்கு நடைபெறும்.

இந்தியாவிலிருந்து வருகை தரும் பரத நாட்டியக் கலைஞர்களான ஸ்ருதி மற்றும் பாஷ்வனாத் உபாத்யே ஆகியோர் இதில் பங்கேற்றவுள்ளனர்.

இந்நிகழ்வில்வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (இ)

## செய்தி இணையத்தளங்களை பதிவு செய்ய அறிவுறுத்தல்

(கொழும்பு)

அனைத்து செய்தி இணையத்தளங்களையும் பதிவு செய்து கொள்ளுமாறு ஊடகத்துறை அமைச்சு அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

ஊடகத்துறை அமைச்சினால் நேற்று டெய்லி நியூஸ் நாளிதழில் வெளியிடப்பட்டுள்ள விளம்பரம் ஒன்றில், வரும் மார்ச் 31ஆம் நாளுககு முன்னதாக செய்தி இணையத்தளங்கள் ஊடகத்துறை அமைச்சின் கீழ் பதிவு செய்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

இதன்மூலம், அனைத்து செய்தி இணையத்தளங்களும் எந்தவொரு குறுக்கீடும் இலலாமல் நெறி முறைக்கமைய அங்கீகாரத்தை பெற்று செயற்பட முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 31ஆம் நாளுக்குள் பதிவு செய்து கொள்ளத் தவறும் இணையத்தளங்கள் சட்டரீதியற்ற இணையத்தளங்கள் என்று கருத்தில் கொள்ளப்படும் என்றும் அந்த விளம்பரத்தில் கூறப்பட்டுள்ளது.

ஊடகத்துறை அமைச்சின் இணையத்தளத்தில் இந்தப் பதிவுக்கான விண்ணப்பமும் இணைக்கப்பட்டுள்ளது. (செ-12)

## இலங்கை மீனவர்கள் மீது இந்.மீனவர்கள் தாக்குதல்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தென்னிலங்கை மீனவர்களை விசைப் படகுகளில் வந்த இந்திய மீனவர்கள் தாக்கியதாக பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை கடற்பரப்பில் தென்னிலங்கை மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது விசைப்படகுகளில் வந்த இந்திய மீனவர்கள் தென்னிலங்கை மீனவர்களை தாக்கியதுடன் அவர்களிடம் இருந்த பெருமளவு மீன்களைப் பறித்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் காங்கேசன்துறை கடற்படையிடம் தகவல் தெரிவித்த தென்னிலங்கை மீனவர்கள் அவர்கள் மூலமாக பொலிஸில் முறையிட்டனர். (செ-60)

## விபத்தில் சிக்கிய குடும்பஸ்தரின் கால் முறிவு

(யாழ்ப்பாணம்)

வீதியைக் கடக்க முற்பட்ட குடும்பஸ்தர் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் குடும்பஸ்தரின் கால் முறிவடைந்தது.

இவ் விபத்துச் சம்பவம் நேற்றுக் காலை 8.35 மணியளவில் சுன்னாகம் கந்தரோடை வீதியில் இடம்பெற்றது.

இதில் சுன்னாகம் மேற்கைச் சேர்ந்த சபாரட்ணம் கனகசபாபதி (வயது - 75) என்ற 4 பிள்ளைகளின்தந்தை ஒருவரே மேற்படி விபத்தில் சிக்கியவராவார்.

விபத்தில் சிக்கிய நபர் யாழ. போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (5,30)

## கல்வி அமைச்சர் சட்டவிரோதமாக நியமனங்களை வழங்கியதாக புகார்

கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் சட்டவிரோதமான முறையில் நியமனங்களை வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தினால் இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் காரியவசம் அரசியல் ரீதியான அடிப்படையில் 2 ஆயிரம் பேருக்கு சட்டவிரோதமாக நியமனங்களை வழங்கியதாக, ஊழல் மோசடி தடுப்புச் செயலகத்திடம் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் எதேச்சதிகார போக்கில் நியமனங்களை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியலில் தமக்கு நெருக்கமானவர்களுக்கு கல்வி அமைச்சர் இவ்வாறு பதவிகள் வழங்கியுள்ளதாக சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. (இ)

# தெல்லிப்பழை கல்விக் கோட்ட

# பாடசாலைகளுக்கிடையிலான காற்பந்து போட்டி

## அருணோதயா, மகாஜனா சம்பியன்





தெல்லிப்பழை கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான காற்பந்துப் போட்டியில் 15 வயதுப் பிரிவில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் 17, 19 வயதுப் பிரிவுகளில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும் சம்பியனாகியன. தெல்லிப்பழை கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான காற்பந்து போட்டிகள் நடைபெற்று வந்தன.

15 வயதுப் பிரிவினருக்கான இறுதிப் போட்டி நேற்று அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் நடைபெற்றது. இறுதிப் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதிக்கொண்டன.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் கோல் எதனையும் போடாததால் சமநிலை உதை தவிர்ப்பில் 3:2 என்ற கோல் கணக்கில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி வெற்றி பெற்று சம்பியனாகியது.

3 ஆம் இடத்துக்கான போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயமும் மோதிக் கொண்டன.

இப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.17,19 வயதுப் பிரிவினருக்கான இறுதிப் போட்டி தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் இடம்பெற்றது.

17 வயதுப் பிரிவினருக்கான இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரியும் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயமும் மோதிக் கொண்டன. 2:2 என்ற கோல்கணக்கில் போட்டி முடிவுற்றால் சமநிலை உதை தவிர்ப்பில் 3:0 என்ற கோல் கணக்கில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி வெற்றி பெற்று சம்பியனாகியது.3ஆம் இடத்துக்கான போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் போட்டி முடியும் வரை கோல் எதனையும் போடாததால் சமநிலை உதை தவிர்ப்பில் 3:1 என்ற கோல் கணக்கில் யூனியன் கல்லூரி வெற்றி பெற்று மூன்றாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டது.19 வயதுப் பிரிவினருக்கான இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரியும் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன. 1:1 என்ற கோல் கணக்கில் போட்டி முடிவுற்றதால் சமநிலைக்கான உதை தவிர்ப்பில் 3:1 என்ற ரீதியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி வெற்றி பெற்று சம்பியனாகியது.3 ஆம் இடத்தினை அளவெட்டி அருணோதயாக் கல்லூரி பெற்றுக் கொண்டது. (க)

## கண்டி கராத்தே போட்டியில்

# வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தாயும் மகனும் முதலிடம்



கண்டியில் நடைபெற்ற கராத்தே போட்டி ஒன்றில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திருமதி முரளி மாலதி மற்றும் இவரின் மகனான முரளி பரிதியன் முதலிடம் பெற்றுள்ளனர். இந்தப் போட்டி கண்டி பேரதானைப் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

International shotokan karate Association இனால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த 15 ஆவது சர்வதேச SKA கராத்தே (15 international S.K.A.Karate championship) போட்டியிலேயே இவர்கள் இருவரும் பங்குபற்றியிருந்தனர்.

நடைபெற்ற கராத்தே போட்டியில் 7 வயதுப்பிரிவில் திருமதி முரளி மாலதியின் மகனான முரளி பரிதியன் முதலாம் இடத்தையும் 21 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் பிரிவில் பங்குபற்றிய திருமதி முரளி மாலதி. காட்டா போட்டியில் முதலிடத்தையும் பெற்றுக்கொண்டார்கள். (க)



# முல்லை. அணி வெற்றி



முல்லைத்தீவு மாவட்ட அணிக்கும் கிளிநொச்சி மாவட்ட அணிக்கும் இடையிலான காற்பந்தாட்ட போட்டியில் 5–1 என்ற கோல் கணக்கில் முல்லை.மாவட்ட அணி வெற்றி பெற்றது.ஆட்டத்தின் முதல் பாதியில் கிளிநொச்சி மாவட்ட அணி முதல் கோலினை போட்டது. சிறப்பாக விளையாடிய முல்லை.அணியின் வீரர் திலீபன் அபாரமாக கோல் ஒன்றை போட்டார்.

முதல் பாதி 1–1 என்று முடிவடைய இரண்டாவது பாதியில் சிறப்பாக விளையாடிய முல்லை. அணியின் தலைவர் மேலனியஸ் கோல் ஒன்றை போட்டார். அதை தொடர்ந்து முன்னணி வீரர் பகி 2கோல்களை போட்டார். அதை தொடர்ந்து குமார் மிகவும் சிறப்பாக கோல் ஒன்றை போட்டார். போட்டியின் முடிவில் முல்லை. அணி 5–1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. (க)

## உதைபந்தாட்ட போட்டிக்கு விண்ணப்பிக்குக

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 9பேர் பங்குபற்றும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிக்கு பங்குபெற விரும்பும் யாழ்.மாவட்ட அணிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பங்குபெற விரும்பும் அணிகள் 04/03/2016 இற்கு முன்னர் விண்ணப்பிக்கும் படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

பங்குபெறக்கூடிய அணிகள் பருத்தித்துறை, வடமராட்சி, வலிகாமம், யாழ்ப்பாணம்,தீவகம் போன்ற லீக்கில் பதிவு செய்யப்பட்ட அணிகள் விண்ணப்பிக்க முடியும். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் தெ.ஜெயக்காந்-077 392 5027, ந.பிரியதர்சன்-077 838 8834, க.நிதர்சன்- 077 192 0199. (க)

# கரப்பந்தாட்ட சுற்றுத்தொடர் மெய்கண்டான் வித்தி முதலிடம்

கரப்பந்தாட்டத் தொடர்களில் 15 வயது, 17 வயது, 19 வயது ஆண்கள் பிரிவுகளில் முதலாவது இடங்களைக் கைப்பற்றிய இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம் தெல்லிப்பழை கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்ட சுற்றுத்தொடர் மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் தொடர் நடைபெற்றது.

15வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை இளவாலை மெய்கண்டான் வித்தியாலயமும் 2ஆம் இடத்தை வயாவிளான் மகா வித்தியாலயமும் 3 ஆம் இடத்தை நடேஸ்வராக் கல்லூரி அணியும் பெற்றன.

17 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை இளவாலை மெய்கண்டான் வித்தியாலயமும் 2ஆம் இடத்தை வயாவிளான் மகா வித்தியாலயமும் பெற்றன. 19 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை இளவாலை மெய்கண்டான் வித்தியாலயமும் 2 ஆம் இடத்தை வயாவிளான் மகாவித்தியாலயமும் 3 ஆம் இடத்தை மகாஜனாக் கல்லூரியும் பெற்றுள்ளன.

15 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான ஆட்டத்தில் முதலாம் இடத்தை அருணோதயாக் கல்லூரி அணியும் 2ஆம் இடத்தை மகாஜனாக்கல்லூரி அணியும் 3ஆம் இடத்தை இளவாலை மெய்கண்டான் வித்தியாலயமும் தமதாக்கின.

17 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான ஆட்டத்தில் முதலாம் இடத்தை வயாவிளான் மகா வித்தியாலயமும் 2 ஆம் இடத்தை மகாஜனாக்கல்லூரி அணியும் 3ஆம் இடத்தை இளவாலை மெய்கண்டான் வித்தியாலயமும் பெற்றன.

19 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான ஆட்டத்தில் முதலாம் இடத்தை வயாவிளான் மகா வித்தியாலயமும் 2 ஆம் இடத்தை மகாஜனாக் கல்லூரி அணியும் 3ஆம் இடத்தை அருணோதயாக் கல்லூரி அணியும் பெற்றன. (க)

## தாச்சி போட்டி முடிபுகள்

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுமதியுடன் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு, இரவு 6.30 மணிக்கு இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் சங்கானை இளங்கதிர் அணியை எதிர்த்து மானிப்பாய் பெஸ்ட் கோம் அணி மோதிக் கொண்டது. இதில் மானிப்பாய் பெஸ்ட் கோம் அணி 12:9 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் மயிலிட்டி பாரதி அணியை எதிர்த்து கைதடி வளர்மதி அணி மோதிக் கொண்டது. இதில் மயிலிட்டி பாரதி அணி 10:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (க)

# அரசியல் கைதிகளின் விடுதலைக்காக அணி திரண்டு பாடுபடுங்கள்!

## 6 வருடங்களின் பின்னர் விடுதலையான கோமகன் குரல்

(யாழ்ப்பாணம்)

தமிழர்கள் தலைநிமிர சிலுவை சுமந்தவர்கள் இன்று தங்கள் விடுதலைக்காக பட்டினி இருக்கின்றார்கள்.

ஈழத்தமிழ் மக்கள் தங்களின் விடுதலைக்காக என்றும் பாடுபடுவார்கள் என அவர்கள் இன்னமும் நம்புகின்றனர் என அரசியல் கைதியாகவிருந்து நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்ட முன்னாள் மாநகர சபை உறுப்பினர் முருகையா கோமகன் தெரிவித்துள்ளார்



சிறைகளிலுள்ள அரசியல் கைதிகள் எவரும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை சுயமாக அளிக்கவில்லை. இராணுவத்தின் கட்டாயத்தின் பேரில், துன்புறுத்தல்கள் மூலம் வாங்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் பலர் தண்டனை பெற்று சிறைகளில் உள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சிறைகளிலுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி அரசியல் கைதிகளின் உறவினர்கள், யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துக் கூறுகையிலேயே கோமகன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

நான் குற்றம் செய்ததாக குற்ற ஒப்புதல் வாக்குமூலம் வாங்கியதாலேயே என்னையும் 6 வருடங்கள் சிறையில் வைத்திருந்தனர்.

எனினும், என்னிடம் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமாக இல்லாமல் கட்டாயத்தின் பேரில் பெறப்பட்டது என அறிந்த வவுனியா நீதிமன்றம் என்னை விடுதலை செய்தது.

ஆனால், கொழும்பு நீதிமன்றத்தில் இருந்த எனது வழக்கு, நீண்டகாலமாக முடிவடையாமல் இழுத்தடிக்கப்பட்டது.

பின்னரே எனது ஒப்புதல்வாகக்கு மூலத்தை கட்டாயத்தின் பேரில் வழங்கப்பட்டது என நம்பினர்.

இறுதியாகவே ஒப்புதல் வாக்குமூலம் உண்மை இல்லையென உணர்ந்து விடுதலை செய்தனர் என்றார்.

இவ்வாறே சிறைகளிலுள்ள அரசியல் கைதிகளுக்கும் நடந்தது. முன்னர் தண்டனை பெற்ற அரசியல் கைதிகளின் நீதிமன்ற தீர்ப்பை மீள்பரிசீலனை செய்யுமாறு, ஐ.நா பரிந்துரை செய்திருந்தது.

ஆனால், இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. நான் சிறையிலிருந்து, அங்குள்ள அரசியல் கைதிகளின் கனத்த மனச்சுமைகளைத் தாங்கியவாறு வந்துள்ளேன்.

தமிழர்கள் தலைநிமிர சிலுவை சுமந்தவர்கள் இன்று தங்களின் விடுதலைக்காக பட்டினி இருக்கின்றார்கள்.

ஈழத் தமிழ்மக்கள் தங்களின் விடுதலைக்காக பாடுபடுவார்கள் என அவர்கள் இன்னமும் நம்புகின்றனர்.

தங்கள் உறவுகளை நேசிக்க முடியாமல், தங்கள் பிள்ளைகளை ஆரத்தழுவ முடியாமல் சிறைகளில் வாடுகின்றனர்.

அவர்களின் குடும்பங்களும் துயரத்தில் வாடுகின்றனர். அவர்களின் விடுதலைக்காக அனைவரும் அணிதிரள வேண்டும்.

அரசியல் கைதிகளுக்கு நியாயமான தீர்வு வேண்டும். அவர்களை விடுதலை செய்ய ஏதாவது ஒரு பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும்.

நல்லாட்சி அரசாங்கத்தின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இது தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோமகன் மேலும் தெரிவித்தார். (செ-4)

## க.பொ.த...

கடந்த வருடம் டிசம்பர் மாதம் இடம் பெற்ற இந்த பரீட்சையில் 6 இலட்சத்து 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் தோற்றியதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதிகமான பரீட்சாரத்திகள் தோறறிய ஒரு பரீட்சையாக இந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை அமைந்ததாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், குறித்த பரீட்சையின் செயன்முறைப் பரீட்சைகள் அனைத்தும் இந்த மாதம் 5 ஆம் திகதியுடன் நிறைவடைவதாக தெரிவித்துள்ள அவர், ஏனைய வருடங்களைப் போலவே இந்த வருடமும் மார்ச் மாதம் இறுதியில் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு தேவையான அனைத்து விடயங்களையும் பூர்த்தி செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். (செ-12)

## சந்திரிகா...

அமைச்சர் சுஸ்மா சுவராஜை நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

புதுடெல்லியில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளதாக இந்திய வெளி விவகார அமைச்சின் பேச்சாளர் விகாஸ் ஸ்வருப் தெரிவித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சும், ஓ.ஆர். எவ் என்ற அமைப்பும் இணைந்து புதுடெல்லியில் நேற்று முன்தினம் நடத்திய கருத்தரங்கு ஒன்றில் சந்திரிகா குமாரதுங்க பங்கேற்றிருந்தார்.

இந்த நிலையிலேயே நீண்ட கால நண்பர்களான சந்திரிகாவும் சுஸ்மாவும் நேற்று தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர். (செ-12)

## நயினாதீவு...

செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இவ் விண்ணப்பத்தை யாழ்.செயலகம் கொழும்புக்கு அனுப்பிவைக்கும் எனவும் தெரியவருகிறது.

67 அடி உயரமான புத்தர் சிலை அமையவுள்ள கடற்பரப்பின் இட அமைவானது நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தை கடல் வெளிப்பரப்பில் மறைப்பு செய்வதாக இருக்கும் என்றும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (ந)

## உடல் சோர்வடைந்து...

அரசியல் கைதிகள் இன்றைய தினம் பத்தாவது நாளாக தமது உணவு தவிர்ப்பு போராட்டத்தை தொடர்ந்துள்ளனர்.

புதிய மகசின் சிறைச்சாலையில் உள்ள 14 அரசியல் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்தி கடந்த 23 ஆம் திகதியில் இருந்து உணவு தவிர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

இன்றையதினம் 10ஆவது நாளாக உணவு தவிர்ப்பு போராட்டத்தை தொடர்ந்துள்ளனர். இவர்களை நேற்றையதினம் வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் சென்று பார்வையிட்டுள்ளார்.

இதுவரை சிறைச் சாலைகள் அமைச்சரோ சிறைச்சாலை ஆணையாளரோ கைதிகளின் நிலை தொடர்பாக நேரில்சென்று பார்வையிடவில்லை.

இத்துடன் தமிழ் மக்கள் பிரதிநிதிகளில் ஒருசிலரே அவர்களில் நிலை தொடர்பாக நேரில் சென்று கேட்டறிந்துள்ளனர்.

தமக்கு சாதகமான பதில் கிடைக்கும் என எதிர்பார்த்து உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள இவர்கள் தமக்கு பொது மன்னிப்பு வேண்டாம் எனவும் பிணையில் அல்லது புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யுமாறு கோரி தமது போராட்டத்தை தொடர்ந்துள்ளனர் இவர்களின் விடுதலையை வலியுறுத்தி அவர்களில் உறவினர்கள், பல்வேறுபட்ட அமைப்புக்கள் தமது கோரிக்கைகளையும் ஆதரவுகளையும் கவனயீர்ப்பு போராட்டங்களையும் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (செ-9)

குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிக்கப்பட்டு

# 7 வருட சிறைக்குப் பின்னர் பெண் கைதி விடுதலை!

(கொழும்பு)

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த 7 வருடங்களாக சிறையில் இருந்த தமிழப் பெண கைதி ஒருவருடைய குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் நிராகரிக்கப்பட்டு நேற்றையதினம் வவுனியா மேல் நீதிமன்றத்தினால் அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு தொடர்பாக மனித உரிமைகள் சட்டத்தரணி கே.எஸ். ரட்ணவேல் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த 2009 ஆம் ஆண்டு பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பெண் ஒருவருக்கு குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் அவருக்கு எதிராக 3 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்றுவந்தன.

இதில் 2 வழக்குகள் அவருடையகுற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையிலும் மற்றைய வழக்கு அவருடன் கைது செய்யப்பட்டமற்றுமொருவருடைய குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையிலும் நடைபெற்று வந்தது.

அவருடையகுற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் பதிவு செயயப்பட்ட 2 வழக்குகளில் இருந்து குறித்த பெண் ஏற்கெனவே விடுதலை பெற்றிருந்தாலும் அவருக்கெதிரான 3 ஆவது வழக்கு விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தது.

ஏனெனில் அவருடன் கைது செய்யப்பட்ட நபர் அவருக்கெதிரான குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை கொழும்பு நீதவானுக்கு முன் அளித்திருந்தார்.

நேற்றைய தினம் எடுத்துகொள்ளப்பட்ட இந்த வழக்கில் நீதவான் முன்னால் பெறப்பட்டகுற்ற ஒப்பதல் வாக்கு மூலத்தை வழக்கின் சான்றுப் பொருளாக எடுக்க முடியாது என கூறி குறித்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் வவுனியா மேல் நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் மூலவேராக உள்ள குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எந்த ரீதியிலும் நியாயப்படுத்த முடியாது என்றும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தால் குற்றத்தை நிரூபிக்கமுடியும் என்ற வாதத்தை இந்த நிகழ்வும் மழுங்கடித்துள்ளது எனவும் சட்டத்தரணி ரட்ணவேல் மேலும் தெரிவித்தார். (செ-9)

## பாரிய நில நடுக்கம்...

யியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பதாங்கில் இருந்து 808 கி.மீ. தெற்மேற்கில் இது மையம் கொண்டுள்ளது.

நிலநடுக்கம் ஏற்பட்டதையடுத்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் பீதியடைந்துள்ளனர்.

எனினும் இந்தோனேசியாவில் இடம்பெற்ற நில நடுக்கத்தினால் இலங்கைக்கு சுனாமி அபாயம் கிடையாது என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

எவ்வாறெனினும், நில அதிர்வினால் எவ்வித உயிர்ச் சேதங்களோ சொத்துச் சேதங்களோ இடம் பெற்றதாக நேற்றிரவுவரை பதிவாகவில்லை. (செ-12)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## பேரறிவாளன், சாந்தன்...

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய 3 பேருக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த 3 பேரின் கருணை மனுக்கள் மீது முடிவெடுப்பதில் ஏற்பட்ட காலதாமதத்தை காரணம் காட்டி அவர்களுக்கான தண்டனையை ஆயுள் தண்டனையாக உயர்நீதிமன்றம் குறைத்தது.

மேலும் அவர்களை விடுதலை செய்வது பற்றி உரிய அரசு முடிவெடுக்கலாம் என்றும் கருத்து தெரிவித்தது.

இதைத்தொடர்ந்து முருகன், சாந்தன், பேரறிவாளன் மட்டுமின்றி ஏற்கெனவே இவ்வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று சிறையில் இருக்கும் நளினி, ராபர்ட் பயாஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகிய 7 பேரையும் சிறையில் இருந்து விடுவிப்பதாக தமிழக அரசு அறிவித்தது.

ஆயுள் தண்டனை காலம் முடிந்த நிலையில் அவர்களை விடுதலை செய்வதாக தமிழக அரசு எடுத்த முடிவுக்கு எதிராக மத்திய அரசு உயர்நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தது.

கடந்த டிசம்பரில் வழக்கு விசாரணை முடிவில் இந்த வழக்கில் உள்ளவர்களை விடுதலை செய்வது குறித்த அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை.

மத்திய அரசுக்குத்தான் உள்ளது என்று உயர் நீதிமன்றம் கூறியது. இவ்விவகாரத்தில் 7 பேரையும் விடுவிக்க தமிழக அரசு மற்றொரு முயற்சியை மேற்கொண்டு உள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 7 பேரையும் விடுதலை செய்வது தொடர்பாக மத்திய உள்துறை செயலாளருக்கு தமிழக தலைமைச் செயலாளர் ஞானதேசிகன் கடிதம் எழுதி உள்ளார்.

சிறையில் உள்ள 7 பேரது மனுவையும் ஏற்று தமிழக அரசு இந்த முடிவை எடுத்து உள்ளது.

7 பேரும் ஏற்கெனவே 24 வருடங்களை சிறையில் கழித்து உள்ளனர்.

7 பேரையும் விடுவிக்கும் முடிவு தொடர்பாக மத்திய அரசின் கருத்தை கேட்டு மேற்படி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. 435-வது பிரிவின்கீழ்மத்திய அரசு இதற்கு கருத்து தெரிவிக்க தமிழக அரசு கோரிக்கை விடுத்துள்ளது. (செ-12)

## முச்சக்கர வண்...

பர் அமரசிறி சேனாரத்ன தெரிவித்தார்.

கடந்த காலங்களில் நாடளாவிய ரீதியில் நடைபெற்ற வீதி விபத்துகளில் முச்சக்கர வண்டி சாரதிகளின் கவனயீனத்தின் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிகாட்டினார்.

எமது நாட்டில் நாடளாவிய ரீதியில் பாதைகளில் பயணிக்கும் முச்சக்கரவண்டிகளில் பிரயாணிகளை ஏற்றுவது தொடர்பில் பொலிஸார் நேற்று தொடக்கம் கடுமையான சுற்றிவளைப்புகளை முன்னெடுப்பது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே போக்குவரத்து பிரிவின் பிரதி பொலிஸ்மா அதிபர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.(செ-12)

## குழந்தைப் பாக்...

ன்றதாக தென் மாகாண ஆளுநரான கலாநிதி ஹேமகுமார நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதற்கான காரணம் இரசாயன உரங்களின் பாவனை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடமத்திய மாகாணத்தில் மட்டுமே காணப்பட்ட சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை இன்று வடக்கு, கிழக்கு, தெற்கு என நாடளாவிய ரீதியில் அதிகரித்து வருகின்றது.

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் உலோகம் கலந்த நீர் வயல்வெளிகளுக்குச் செல்வதோடு, குடிநீரிலும் கலக்கப்படுவதே இதற்கான முக்கிய காரணம் ஆகும்.

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பழவகைகள் இரசாயன பதார்த்தங்களைக் கொண்டு பதனிடப்பட்டு வருகிறது. வெளியே அழகாக இருக்கும் பழங்கள் உள்ளே மனிதனுக்கு கேடு விளைவிக்கக் கூடிய நச்சுப் பொருட்களையும் கொண்டுள்ளது.

எனவே இவற்றை கொள்வனவு செய்து உண்ணும் போது நாம் பல வித நோய்களால் பீடிக்கப்படுகிறோம். இதன் ஒரு தாக்கமாகவே குழந்தைப் பாக்கியம் குறைவடைந்து செல்கிறது.

அத்துடன் இவ்வாறான பழங்களை உணணுவதை தவிர்த்து விட்டு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பழங்களை உண்ணுவதன் மூலம் பாரிய நோய்களிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ளலாம் என்றும் ஹேமகுமார நாணயக்கார தெரிவித்துள்ளார்.(செ-12)

## வாகன விபத்...

கந்தோர் சந்தியில் இடம்பெற்றது.

இதில் அராலி வடக்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கு.வசந்தராஜா (வயது -49) என்ற 4 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி குடும்பஸ்தர் வீதியொன்றை கடக்க முற்பட்டபோது மோட்டார் சைக்கிளில் வந்த நபரொருவர் மோதியதால் மேற்படி விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

விபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும் சிகிச்சை பலனின்றி அக்குடும்பஸ்தர் சிறிது நேரத்தில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

விபத்துடன் சம்பந்தப்பட்ட மோட்டார் சைக்கிள் சாரதி வட்டுக்கோட்டைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளார். (செ-5-17-30)

## பாரத லக்ஸ்...

நேற்று பிற்பகல் 4.15 மணியளவில் தெமட்டகொட பகுதியில் இந்தச் சம்பவம் இடம பெற்றது.

பாரத லக்ஸ்மன் கொலை வழக்கின் சந்தேக நபரான தெமட்டகொட சமிந்தவை ஏற்றிச் சென்ற சிறைச்சாலை வாகனம் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில் தெமட்டகொட சமிந்த உள்ளிட்ட நான்கு கைதிகள் காயமடைந்தனர்.

பாரத லக்ஸ்மன் கொலை வழக்கின் சந்தேகநபரான தெமட்டகொட சமிந்த படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் முன்னாள் ஆலோசகராக இருந்த- நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவின் தந்தையான பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர, 2011 உள்ளூராட்சித் தேர்தலின் போது, துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டார்.

அந்தச் சம்பவத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவும் படுகாயமடைந்தார். அவரும் இந்தக் கொலையில் முக்கிய சந்தேக நபராக குறிப்பிடப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.(செ-12)

## பெற்றோரின் கடு...

துக் கொள்ள எந்தப் பாடசாலையும் முன்வந்திருக்காத நிலையில், கல்வி அதிகாரிகளின் தலையீட்டால் பாடசாலை ஒன்று அவரை அண்மையில் சேர்த்திருந்தது.

எனினும் உள்ளூர் மக்களிடமிருந்து தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் எதிர்ப்புக்கு மத்தியில், அவரை அந்தப் பாடசாலையிலிருந்து விலக்கியுள்ளதாக வட-மேற்கு மாகாண சபை கல்வி அமைச்சர் சந்தியா ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அந்த சிறுவன் படிக்கும் பாடசாலைக்கு தங்களின் பிள்ளைகளை அனுப்பமுடியாது என்று ஏனைய பெற்றோர் மறுத்திருந்த நிலையில், பாடசாலையை சில நாட்கள் மூட வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில், ஏனைய பிள்ளைகளின பெற்றோரின் எதிர்ப்பையும் மீறி அந்தப் பாடசாலையில் வைத்திருப்பது அந்த சிறுவனுக்கு பாதகமான நிலைமையை ஏற்படுத்தும் என்ற காரணத்தினாலேயே அந்த சிறுவனை அங்கிருந்து விலக்க நடவடிக்கை எடுத்ததாக மாகாண கல்வி அமைச்சர் சந்தியா ராஜபக்ஷ தெரிவித்தார்.

### அடையாள ஆவணங்களை மாற்ற முடிவு

சிறுவனின் அடையாள ஆவணங்களை மாற்றி, எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல் வேறு பாடசாலை ஒன்றில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அமைச்சர் சந்தியா ராஜபக்ஷ கூறியுள்ளார்.

மகனுக்கு 6 வயதாகியும் எந்தப் பாடசாலையும் முன்னர் சேர்க்க சம்மதித்திருக்காத நிலையில் நியாயம் கோரி போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அவனது தாயார், தனது மகனுக்கு எச்ஐவி தொற்று இல்லை என்பதையும் மருத்துவ சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தியிருந்தார்.

அதனையடுத்தே, கல்வி அமைச்சின் அதிகாரிகளினால் குளியாப்பிட்டியிலுள்ள ஒரு பாடசாலையில் சிறுவனை சேர்க்க அனுமதி வழங்கப்பட்டது.

பாடசாலை சில நாட்கள் மூடப்பட்டிருந்ததால், பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக பாடசாலை நிர்வாகம் மாகாண கல்வி அமைச்சின் உதவியை நாடியது.

பாடசாலை நிர்வாகத்தினருக்கும் மாகாண கல்வி அமைச்சருக்கும் மாணவர்களின் பெறறோருக்கும் இடையில் நேற்று நடந்த பேச்சுவார்த்தையின்போது, சிறுவனுக்கு எச்ஐவி தொற்று இல்லை என்று சுகாதார அதிகாரிகள் விளக்கமளித்தனர்.

ஆனாலும், அதை ஏற்க மறுத்த பெற்றோர் சிறுவனை தொடர்ந்தும் பாடசாலையில் வைத்திருப்பதற்கு தமது எதிர்ப்பை தெரிவித்தனர்.

பெற்றோரிடமிருந்து வந்த தொடர் எதிர்ப்பை அடுத்து, சிறுவனை பாடசாலையிலிருந்து விலக்கிக்கொள்வதாக மாகாண கல்வி அமைச்சர் அறிவித்தார்.

ஆனால், அமைச்சரின் இந்த முடிவுக்கு அப்பகுதி சுகாதார அதிகாரிகளும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகளும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்த நிலையில், சிறுவனுக்கு வேறொரு பாடசாலையை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக மாகாண கல்வி அமைச்சர் சந்தியா ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

இந்த சிறுவனுக்கு எச்ஐவி இல்லை என தேசிய பாலியல் தொற்று மற்றும் எய்ட்ஸ் தடுப்பு பிரிவின் விசேட நிபுணர் டாக்டர் ஜி.வீரசிங்க முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## அரசியல் கைதி...



தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நேற்றைய தினம் யாழ்.பிரதான பேருந்து நிலையம் முன்பாக பொது அமைப்புக்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. நீண்டகாலமாக விசாரணைகளின்றி மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் 14 பேர் தமது விடுதலையை வலியுறுத்தி நேற்று ஒன்பதாவது நாளாகவும் உண்ணா விரதப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

அவ்வாறான நிலையில் அவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் வகையிலும் அனைத்து தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் வகையிலேயே மேற்படி போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் யாழ்ப்பாண பிரதான பேருந்து நிலையத்திற்கு முன்பாக இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

உயிரை அடகுவைத்து உண்ணா நோன பிருக்கும் உறவுகளின் உயிருக்கு விலை பேசாதே, நாட்டில் நல்லாட்சியா? நாம் வீதியில் கண்ணீருடன் தவிக்கின்றோம் நீதி தேவதையே கண்திறவாயோ?, அரசியல் கைதிகளின் விடுதலைக்கு அரசு கூறும் விலைதான் என்ன?, எம் உயிர்தான் என்றால் எடுத்துக் கொள் போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியவாறு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது ஏழு வருடங்களாக தமிழ் அரசியல் கைதியாகத் தடுத்து வைக்கப்பட்டு நேற்று முன்தினம் கொழும்பு விசேட நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட யாழ். மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் முருகையா கோமகனும் குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டு அரசியல் கைதிகளின் விடுதலைக்காக தனது ஆதரவை அளித்திருந்தார்.

இதேவேளை குறித்த போராட்டத்தில் சிவில் அமைப்புக்கள், அரசியல் கட்சிகள், பாதிரிமார்கள், அரசியல் கைதிகளின் உறவினர்கள், பொதுமக்கள் உட்பட அனைத்துத் தரப்பினரையும் பங்கேற்று கைதிகளின் விடுதலைக்கு ஒன்றுபட்டு குரலெழுப்புமாறு தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான வெகுஜன அமைப்பு கோரியிருந்தது. இந்த போராட்டத்திற்கு அரசியல்வாதிகள் எவரும் சமுகமளிக்கவில்லை என்பதனால் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தோர் கவலை தெரிவித்தனர்.

மேலும் ஆறு வருடங்களின் பின்னர் விடுதலை பெற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த முருகையா கோமகனை அவர்களது உறவினர்கள் ஆரத்தழுவி கட்டியணைத்து அழுதமை அங்கிருந்தோர் கண்களில் கண்ணீரை வர வைத்தது. கோமகனை வரவேற்க பெருமளவான மக்கள் அங்கு திரண்டு இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (செ -4)


விற்பனையாகிறது!

தரம் 1, தரம் 2, தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கு

முதலாம் தவணை மாதிரி வினாத்தாள்கள்

தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சிங்களம் ஆகிய பாடங்கள் 15 விடைகளுடன்.

யாழ் எக்ஸ்பிரஸ்

பாடதிட்டத்திற்கு அமைவாக நாடாளாவியரீதியல் 15 முன்னணி ஆசிரியர்களின் ஆக்கத்தில் வெளிவந்துள்ளது.

தொடர்புகளுக்கு : 077 6258778

(சி-3861)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

மணிவிழா வாழ்த்து



"கல்விக் கதிரவன்"
"ஈகைக் காவலன்"
"இறைபணி வேந்தர்"

E.S.P. நாகரத்தினம் அவர்கள்

கஜமுகனில் பலநூறு பயிலுணர்கை நின்வழியில்
பள்ளிகளில் பல்வேறு பணிவுடைகள் நின்தயவில்
சொல்லில் அடங்காத சுடர் கொண்ட நாயகனே
புகழோடு நீடுழி வாழிய வாழியவே.

(C-3864)

வாழ்த்துவோர்:
K.R.S
சுன்னாகம், யாழ்ப்பாணம், கொழும்பு.

2மணித்தியாலத்தில் கணினி திருத்தம்

உங்களது வீடுகள் அலுவலகங்களுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள் 0779086737

கணினி திருத்தக் கட்டணம் 500/- Computer Repair

லப்டொப் டெஸ்க்டொப் கணினிகள் திருத்தம்

கணினிகள் விற்றல் பாவித்தகணினிகள் வாங்குதல்

GUNA BEST PC 50/12,Hospital Road, Vairavar Kovil Lane, Jaffna. (C-3883)

கணினி பயன்பாட்டின் உச்ச அனுகூலங்களை எமது மக்கள் பெறவேண்டும் என்பதற்காக நிபந்தனையுடனான சேவைகளை வழங்குகிறோம்.

FRENCH MOVIES - JAFFNA
Alliance Française de Jaffna

cordially invites you to the screening of

THE FIRE WITHIN

Louis Malle's movie
(1963, 108 min.)
On
Thursday 03 March 2016 at 4.00 p.m.
at
Alliance Française de Jaffna
61, kachcheri-Nallur Road, Jaffna.
Phone : 021 222 8093
English Language.
Free entrance.

(3755)

பிரெஞ்சு வகுப்புகளுக்கு உடன் பதிவுசெய்க.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.